REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஒக்டோபர் 1 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN

92

வருட. 92 இல. 234 | Tuesday 01, October, 2024 | 16பக்கங்கள் | 50/-

## லெபனான், சிரியாவில் கொந்தளிப்பான நிலை

### அவசர தொடர்புகளுக்கு எண்கள் அறிமுகம்

லெபனான் மற்றும் சிரியாவில் உள்ள சகல இலங்கையர்களும் விழிப்புடன் இருக்குமாறும், வெளியில் நடமாடுவதை கட்டுப்படுத்தி பெய்ரூத் மற்றும் டமஸ்கஸிலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் தொடர்பைப் பேணுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு அறிக்கையும் விடுத்துள்ளது. தொடர்பு கொள்வதற்கான

06

### ஜனாதிபதி அநுரவுடன் சிறந்த நட்புறவு

# புதிய அரசுடன் இந்தியா இணைந்து செயற்படும்

### தமிழ் தலைவர்களுடனான சந்திப்பில் தூதுவர் சந்தோஷ் ஜா





**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கையின் புதிய ஜனாதிபதியுடன் இணைந்து செயல்படுவதற்கு இந்தியா தயாராகவுள்ளதாகவும், இந்தியாவுக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்குமிடையில் சிறந்த நட்புறவு நிலவுவதாகவும் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தமிழ் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கு

06

### கெஹலிய ரம்புக்வெல கைதான பின்னரும்

# தரமற்ற ஊசி மருந்து மீண்டும் இறக்குமதி

### விசாரணை நடத்தக்கோரி சிவில் உரிமைகள் மருத்துவர் சங்கம் CIDயில் நேற்று முறைப்பாடு




**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்தியாவிலிருந்து மீண்டும் தரமற்ற ஊசி மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து, சிவில் உரிமைகள் மருத்துவர் சங்கத்தின் தலைவர் டாக்டர் சமல் சஞ்சீவ குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல கைது செய்யப்பட்ட பின்னரும், தரமற்ற ஊசி மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர், மருத்துவ விநியோகப்பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின் படி, அது உறுதி செய்யப்பட்டுள்ளதாக

06

## விவசாயிகள், மீனவர்களுக்கான மானியங்கள் ஒத்திவைப்பு

### பொதுத் தேர்தலுக்குப் பின்னர் வழங்குமாறு உத்தரவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**




விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கு வழங்கப்படவுள்ள மானியத்தை எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் பெரும்போகத்தில் விவசாயிகளுக்கு 25,000 ரூபா கொடுப்பனவும் மீனவர்களுக்கு எரிபொருள் மானியமும் வழங்குவதற்கு ஜனாதிபதி

06

### தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை விவகாரம்;

## முடிவில் எவ்வித மாற்றமுமில்லை

நடந்து முடிந்த 2024 கல்வியாண்டிற்கான தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில், வெளியில் கசிந்த மூன்று வினாக்களுக்கும் முழு புள்ளிகளை வழங்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தில், மாற்றம் ஏற்படாதென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.



### பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நடத்தப்பட்ட பரீட்சையே நிலையானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

06

## இணைந்து போட்டியிட தோழமை கட்சிகளை மீள அழைத்துள்ளோம்

### இணங்காவிடின் தமிழரசுக்கட்சி தனித்தே போட்டி



பாராளுமன்ற தேர்தலில் இணைந்து போட்டியிடுவதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும் அழைப்பை ஏற்காவிடின் இலங்கை தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடும் என்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் நேற்று

06

## கைத்துப்பாக்கிகளை ஒப்படைக்க முன்னாள் எம்.பி.க்களுக்கு உத்தரவு



பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கைத்துப்பாக்கிகளை உடனடியாக ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளதால் எம்பி. பதவிகளை வகிக்காதோருக்கு இந்த கைத்துப்பாக்கிகள் வைத்திருப்பது குற்றத்துக்குரிய செயலென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்த கடிதங்கள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு

06

## புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவை தீர்மானம் இன்று



புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை பேச்சாளராக அமைச்சர் விஜித ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கமைவாக தேசிய மக்கள் சக்தியின் புதிய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள அமைச்சரவை தீர்மானங்களை அமைச்சர் விஜித ஹேரத் இன்று (01) அறிவிக்கவுள்ளார்.

நாட்டின் இந்த அமைச்சரவை, தற்போது உலகிலேயே ஆகக்குறைந்த எண்ணிக்கையிலான அமைச்சர்களைக் கொண்ட இடைக்கால அமைச்சரவையாக கருதப்படுகிறது.

## பெற்றோல், டீசல் விலை குறைப்பு!

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தனது எரிபொருட்களின் விலைகளை திருத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

மாதாந்த எரிபொருள் விலை சூத்திரத்தின் பிரகாரம் இந்த எரிபொருள் விலை திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி 332 ரூபாவாக காணப்பட்ட 92 ரக ஒக்டேன் பெற்றோல் லீற்றரின் விலை 21 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 311 ரூபாவாகும்.

06

## தென்னிலங்கையிலும் ஈ.பி.டி.பி களமறிங்கும்

### பாராளுமன்றத் தேர்தலில் வெல்வது உறுதி



எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் ஈ.பி.டி.பி கட்சி கொழும்பிலும் போட்டியிடுமென, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். யாழ். தெல்லிப்பளை சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்த போதே, டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு

06

## தங்கத்தின் விலைகளில் வீழ்ச்சி



தங்கத்தின் விலைகள் கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் நேற்று (30) வீழ்ச்சியடைந்துள்ளதாக கொழும்பு, செட்டியார் தெருவின் விலை

06

## யாழ், கிளிநொச்சி பகுதிகளில் அதிகரிக்கும் மதுபானசாலைகள்

### அவசரமாக தலையிட்டு நிறுத்த ஜனாதிபதிக்கு கடிதம்



யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பகுதிகளில் புதிதாக மதுபானசாலைகள் திறக்கப்பட்டுள்ளமை குறித்து ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் மத்தியகுழு உறுப்பினர் கீதநாத் காசிலிங்கம், சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் இது குறித்து சுட்டிக்காட்டியுள்ள அவர், பரந்தன் சந்தி முதல் இரணைமடு சந்திவரை மதுபான நிலையங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

06

## தேர்தல் காலங்களில் புதுப்புது குழப்பங்களை ஏற்படுத்துவதே தமிழ் தேசிய கூட்டமைப்பின் பணி



தேர்தல் காலங்களில் மக்கள் மத்தியில் புதுப்புது குழப்பங்களை ஏற்படுத்தும் அரசியலையே,செய்வதாக தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான பூபாலப்பிள்ளை பிரசாந்தன் தெரிவித்தார். காரைதீவு பகுதியில் அமைந்துள்ள தமிழ் மக்கள் விடுதலைப்

06

### தரம் ஐந்து புலமைப்பரிசில்

## பரீட்சையை மீண்டும் நடத்த ஆர்ப்பாட்டம்



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சர்ச்சைக்குள்ளான மூன்று கேள்விகளுக்கு மாத்திரம் முழு மதிப்பெண் வழங்குவதை எதிர்த்து, கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. பத்தரமுல்லையில் அமைந்துள்ள

06



# சிறுவர், முதியவர்களுக்கான வளமான எதிர்காலமே இலக்கு

## இக்கருப்பொருளுக்காக புதிய அரசாங்கம் அர்ப்பணிக்கும்

சர்வதேச சிறுவர் தினம் மற்றும் முதியோர் தினத்தை கொண்டாடும் இந்த சிறப்பான சந்தர்ப்பத்தில் நாட்டின் பிரதமர் என்ற வகையிலும் மகளிர், சிறுவர்கள், இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் என்ற வகையிலும் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்த இரண்டு முக்கியமான நிகழ்வுகளும் எமது சமூகத்தின் எதிர்காலத்தையும் பாரம்பரியத்தையும் வடிவமைப்பதில் சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் வகிக்கும் முக்கிய வகிபாகங்களை எமக்கு நினைவூட்டுகின்றன.



இவ்வருட சர்வதேச சிறுவர் தின கருப்பொருள் "எமது எதிர்காலத்தில் முதலீடு செய்வது என்பது எமது சிறுவர்களில் முதலீடு செய்வது" என்பதாகும். இது வெறுமனே ஒரு சுலோகம் மட்டுமல்ல

இது எமது அரசாங்கத்தின் முக்கிய கோட்பாடு மற்றும் கொள்கை திசைவழியை உள்ளடக்கியதாகும். இலங்கையில் உள்ள ஒவ்வொரு பிள்ளைக்கும் பயனளிக்கும் உயர்தரமான, பொதுக் கல்வி முறைமையை வழங்க நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். பொருளாதார வரையறைகள் என்ற சுமைகளிலிருந்து விடுபட்டு, வாய்ப்புகள் நிறைந்த உலகில் அவர்கள் செழித்தோங்குவதற்குத் தேவையான வசதி வாய்ப்புகளுடன், சிறுவர்களை வளப்படுத்துவதே எமது தொலைநோக்காகும்.

மேலும், சிறுவர்கள் மீது, குறிப்பாக கல்வி நிறுவனங்களுக்குள் இடம்பெறும் அனைத்து வகையான உடல் மற்றும் உளரீதியான துஷ்பிரயோகங்களையும் நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்.

06

# ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் தனியார்மயப்படுத்தப்படாது

## தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார பேரவை தலைவர்

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனத்தை தனியார் மயப்படுத்தும் திட்டத்தை கைவிடவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நஷ்டத்தில் இயங்கும் ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸை தனியார் மயப்படுத்தும் முன்னைய அரசாங்கத்தின் கொள்கைகைய புதிய ஜனாதிபதி அனுரகுமாரதிசநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கைவிடவுள்ளது.

சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்கு ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸின் அவசியத்தை கருத்திற் கொண்டு, புதிய அரசாங்கம் இத்தீர்மானத்தை எடுத்துள்ளது. நாட்டின் தேசிய விமான சேவையான ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் அரசுக்கு சொந்தமானதாக காணப்படவேண்டும் என அரசாங்கம் கருதுவதாக தேசிய மக்கள் சக்தி பேரவையின் தலைவர் பேராசிரியர் அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.எனினும், இதன் முகாமைத்துவத்தை சீர்செய்வதற்கான திட்டமொன்று முன்வைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மானியம் என்ற மனநிலையிலிருந்து விவசாயிகள் விடுபட முயல வேண்டும்

## பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீட சிரேஷ்ட பேராசிரியர்

விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டாலும் , மானியம் பெறும் மனநிலையிலிருந்து விவசாயிகள் விடுபட முயற்சிக்க வேண்டுமென,பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீட சிரேஷ்ட பேராசிரியர் புத்தி மரம்பே தெரிவித்துள்ளார்.

அறிவும், முதலீட்டுத் திறனுமுள்ளவர்களை விவசாயிகள் மத்தியில் உருவாக்க வேண்டியுள்ளது. இதற்காக மானியம் என்ற மனநிலையிலிருந்து விவசாயிகள் நீங்க வேண்டும் என்றும் அவர் கூறினார். பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பேராசிரியர் தெரிவித்ததாவது:

விவசாயம் என்பது ஒரு நாட்டின் உணவுப் பாதுகாப்பிற்கு முக்கியமாக பங்களிக்கும் துறை விவசாயத்தின் மூலம் முழுமையான உணவுப் பாதுகாப்பை அடைய முடியும் என்று நம்மில் பலர் நினைக்கிறார்கள். அதே வழியில் அதைச் செய்ய முடியாது. உணவுப் பாதுகாப்பில் விவசாயத்தின் பங்களிப்பை அதிகரிப்பதே எமது முயற்சியாகும். இந்த துறையில் உற்பத்தி, அறுவடை, மீன் வளர்ப்பு மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவை அடங்கும். நாட்டில் விவசாயம் என்பது புதிதாக ஆரம்பிப்பதற்கான இடமல்ல. அது பரிணாம வளர்ச்சியடைந்த ஒன்று.

தற்போதைய வளர்ச்சிகளை நன்கு புரிந்து கொண்டு, அதனை முன்னெடுக்க வேண்டும்.இங்கிருந்து எப்படி முன்னேறுவது என்பது பற்றிய நல்ல புரிதல் அவசியம். கடுமையான பொருளாதார பாதிப்பை எதிர்நோக்கும் எமது நாட்டில் விவசாய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

06

# ராஜபக்‌ஷக்களின் ஊழல்கள் உண்மையானால் தண்டிக்கவும்

## ஊடகங்களில் விமர்சிப்பதை நிறுத்தி உரிய நடவடிக்கைகளை எடுங்கள்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

ராஜபக்‌ஷக்களுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுக்கள் உண்மையானால் அவற்றுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்டு, சட்டத்தின் முன் குற்றவாளிகளை நிறுத்தி தண்டனை வழங்க வேண்டுமென பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

நாட்டிலிருந்து 18 பில்லியன் டொலர் நிதி உகண்டாவுக்கு கொண்டு செல்லப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டது. அந்த குற்றச்சாட்டு உண்மையானால் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அவற்றுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர, தேசிய மக்கள் சக்தியினர் இப்போதும் அந்த ஊழல்கள் தொடர்பில் ஊடகங்களில் தெரிவித்து வருவது முறையல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர், கடந்த காலங்களில் எதிர்க்கட்சியாக இருந்த போது பாரிய எண்ணிக்கையிலான கோவைகளை காண்பித்து அவை அனைத்தும் அரசாங்கத்திலுள்ளவர்கள் மேற்கொண்ட ஊழல்கள் தொடர்பான விபரங்கள் என்றும் தெரிவித்தனர்.அந்த கோவைகள் உண்மையாக இருந்தால் சம்மந்தப்பட்டவர்களுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்டு, சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேலில் இலங்கையர் தற்கொலை

இஸ்ரேலில் தொழிலில் ஈடுபட்டிருந்த இலங்கையர் ஒருவர், தற்கொலை செய்து கொண்டுள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த 35 வயதுடைய இவர், தனிப்பட்ட காரணங்களுக்காக தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுவதாக தூதுவர் பண்டார கூறினார்.

ஆறு மாதங்களுக்கு முன்னர் இஸ்ரேலுக்கு வந்துள்ள இவர், விவசாயத் துறையில் தொழில் புரிந்துள்ளார்.

சடலத்தை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்தார்.

## ரூ.1, 42, 500 மில். பெறுமதி

# திறைசேரி உண்டியல்கள் நாளை ஏல விற்பனை




**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனை, நாளை இடம்பெறவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க 1,42,500 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் நாளை (02) ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளதாக அந்த வங்கி தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 65,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 182 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 67 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும்

364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட கொண்ட 10,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனை செய்யப்படவுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

# ஐ.தே.கட்சி – ஐ.ம.சக்தி தேர்தல் கூட்டணி பேச்சுவார்த்தை தோல்வி

## சஜித்தின் இரண்டு நிபந்தனைகளே காரணம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

பொதுத் தேர்தலை இலக்காகக் கொண்டு, தேர்தல் கூட்டிணி அமைப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்திக்கிடையில் இடம்பெற்ற பேச்சுக்கள் தோல்வியில் முடிந்துள்ளன. ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்த இரண்டு பிரதான நிபந்தனைகளாலே, இப்பேச்சுக்கள் தோல்வியடைந்தன.இது தொடர்பில் இக்கட்சிகளிடையே தொடராக எட்டுப்பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. தொலைபேசிச் சின்னத்தில் போட்டியிடுவது மற்றும் முன்னாள் ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க இக்கூட்டணியில் இடம் பெறக்கூடாதெனபும் ஐக்கிய மக்கள் சக்தி விதித்த நிபந்தனையாலேயே, இப்பேச்சுக்கள் தோல்வியுற்றன.

எவ்வாறாயினும், ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க பெற்ற பெரும்பான்மையான வாக்குகள் அவரது தனிப்பட்ட வாக்குகளாகக் கருதப்படுவதால், அவர் இல்லாத அரசியல் கூட்டணிக்கு இணக்கம் தெரிவிக்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.எவ்வாறாயினும், இரு தரப்பினருக்குமிடையில் பேச்சுவார்த்தைக்கு இன்னும் இடமுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

# ஐக்கியம் நிறைந்த யுகத்தை உருவாக்குவதற்கு திட்டங்கள்

## தேசிய சமாதானப் பேரவை அறிவிப்பு



**(அக்குறணை குறூப் நிருபர்)**

நல்லிணக்கமும், சமூக ஒற்றுமையும் பொருந்திய ஒரு புதுயுகத்தை நோக்கி இலங்கை மக்களை வழிநடத்தும் பெருட்டு, பல்வேறு வேலைத்திட்டங்களை தேசிய சமாதானப் பேரவை மேற்கொள்ளவுள்ளதாக பேரவையின் செயற்றிட்ட முகாமையாளர் நிரோஷா அந்தனி தெரிவித்தார்.

அதற்கு சர்வமத அமைப்பின் ஆதரவு தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கண்டி, டெவோன் ஹோட்டலில், தேசிய சமாதான பேரவையின் ஏற்பாட்டில், கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு நேற்று (30) ஏற்பாடு செய்திருந்த செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே நிரோஷா அந்தனி இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில், இந்து, இஸ்லாம், பௌத்த கிறிஸ்தவ மதகுருக்களும், சமூக செயற்பாட்டாளர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

# கட்டார் கார் விபத்தில் புத்தளம் பெண் உயிரிழப்பு

**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் நகரைச் சேர்ந்த முஹம்மது முபாரிஸ் மற்றும் அவரது குடும்பம், கட்டாரிலிருந்து உம்ராவிற்கு சென்று திரும்பும் வழியில் இடம்பெற்ற, கார் விபத்தில் முபாரிஸின் கர்ப்பிணி மனைவியான பாத்திமா ஷபாரிஜ் (33) உயிரிழந்துள்ளார்.

சவூதி கட்டார் எல்லையான சல்வா பகுதியில் கடந்த 28ஆம் திகதி இடம்பெற்ற இந்த விபத்தில் கர்ப்பிணி தாயும் வயிற்றில் இருந்த குழந்தையும் மரணமடைந்தனர். ஏனையவர்கள் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வாகனம் ஓட்டும் போது சாரதி தூங்கியதாலேயே இவ் விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. மேற்படி உயிரிழந்தோர் தொடர்பாக விசாரணைகள் முடிவுற்ற பின் குறித்த தாயின் ஜனாஸா கத்தாரில் (29) நல்லடக்கம் செய்யப்பட்டது.

# இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கை விஜயம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வருகிறார். எதிர்வரும் (04) வெள்ளிக் கிழமை அவர் கொழும்பு வரவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. புதிய ஜனாதிபதியின் கீழ் அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர், நாட்டுக்கு வருகை தருகின்ற முதலாவது சர்வதேச இராஜதந்திரி இவராவார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க,பிரதமர் ஹரிணி அமரசூரிய,மற்றும் அரசாங்கத்தின் முக்கிய உயர்மட்ட அதிகாரிகளையும் சந்தித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பேச்சுக்களின் போது இலங்கை இந்திய கூட்டு நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பில், முக்கிய கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஏற்றுமதி வருமானம் கடந்த மாதம் 1165.4 டொலராக பதிவு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

நாட்டில் ஏற்றுமதி வருமானம் அதிகரித்துள்ளதுடன், கடந்த மாதம் அது 1165. 4 மில்லியன் அமெரிக்கன் டொலராக பதிவாகியுள்ளது. கடந்த வருடம் ஆகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த அதிகரிப்பானது 4.18 வீத வளர்ச்சி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆடை ஏற்றுமதி, தேயிலை, இறப்பர், தேங்காய் மற்றும் வாசனைத் திரவியங்கள் உள்ளிட்ட ஏற்றுமதி நடவடிக்கைகளின் முன்னேற்றமே, இந்த அதிகரிப்புக்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுங்கத் திணைக்களம் வெளியிட்ட தரவுகளுக்கு அமைய ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபை மேற்படி தகவல்களை தெரிவித்துள்ளது.

# ஐக்கிய சமாதான கூட்டமைப்பு போட்டியிடுவதற்கு தீர்மானம்

**(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)**

பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய சமாதான கூட்டமைப்பு போட்டியிடுவதற்கான கள நிலவரங்களை ஆராய்வதற்காக, கூட்டமைப்பின் உயர்பீட கூட்டம் நேற்று முன்தினம் (29) இரவு தனியார் விடுதியொன்றில் நடைபெற்றது.

கட்சியின் பிரதித் தலைவர் எம். பி.அக்பர்அலி, செயலாளர்நாயகம் என்.ரீ. ஹசன் அலி தலைமையில்



நடைபெற்ற இக்கூட்டத்தில், பொதுத் தேர்தல் தொடர்பான பல்வேறு ஆலோசனைகள், எதிர்கால முன்னெடுப்புகள் தொடர்பாக கட்சியின் தலைமைத்துவ சபை மற்றும் உயர்பீட உறுப்பினர்களின் பங்கேற்புடன் ஆராயப்பட்டன.

இதன்போது, கட்சியின் தலைமைத்துவ சபை உயர்பீட உறுப்பினர்களின் ஏகமனதான தீர்மானத்தின் பிரகாரம், எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய சமாதான கூட்டமைப்பு அனைத்து தேர்தல் மாவட்டங்களிலும் போட்டியிடும் தீர்மானத்தினை ஏகமனதாக நிறைவேற்றியமை குறிப்பிடத்தக்கது.

# பிறப்புச் சான்றிதழ் இல்லாத சிறுவர்களின் பெற்றோருக்கு அறிவிப்பு

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பிறப்புச் சான்றிதழ் இல்லாத சிறுவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்கும் திட்டத்தை, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

இதற்கமைவாக இம்மாதம் முழுவதும் கட்டணம் செலுத்தாமல், உரிய பிறப்புச் சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து பிரதேச செயலக மட்டத்தில் கடமையாற்றும் சிறுவர் உரிமைகள் ஊக்குவிப்பு உத்தியோகத்தர்கள், இவ்வாறான சிறுவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி வருகின்றனர்.

இருப்பினும், கணிசமான எண்ணிக்கையிலான சிறுவர்கள் பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாமல் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.







மத்திய மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமனம்பெற்ற பேராசிரியர் எஸ்.பி.எஸ். அபேகோன் மகா சங்கத்தினரை சந்தித்து நல்லாசிகளை பெற்றுக்கொண்டபோது... (அக்குறணை குறூப் நிருபர்)

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN
2024 ஒக்டோபர் 1 செவ்வாய்க்கிழமை

**தொழுகை நேரம்**
சுபஹ் - 04.43
லுஹர் - 12.02
அஸர் - 03.16
மஃரிப் - 06.03
இஷா - 07.12

**இன்றைய சுபதினம்**
குரோதி வருடம் புரட்டாதி 15
ராகுகாலம் : மாலை : 3.02 - 4.32வரை
சுபநேரம் : காலை : 10.32 - 12.02வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



## சர்வதேச சிறுவர் தினம், முதியோர் தினம் இன்று

# சிறுவர்கள் மற்றும் சிரேஷ்ட பிரஜைகளுக்கு மக்கள் வங்கியிடமிருந்து விசேட சலுகைகள்

சர்வதேச சிறுவர் தினம் மற்றும் சர்வதேச முதியோர் தினம் ஆகியன ஒக்டோபர் 01 ஆம் திகதியன்று(இன்று) கொண்டாடப்பட்டு வருகின்றன. நாட்டிலுள்ள முன்னணி வங்கிகளில் ஒன்றான மக்கள் வங்கி, இத்தருணத்தில் நாட்டின் எதிர்கால சிற்பிகளாக மாறவுள்ள சிறுவர்கள் மற்றும் நாட்டிற்காக உழைப்பதில் தமது வாழ்வை அர்ப்பணித்துள்ள சிரேஷ்ட பிரஜைகள் ஆகியோரின் நலன் கருதி, பல்வேறு சலுகைகளை அவர்களுக்கு வழங்கி, தனது கடமையை நிறைவேற்ற முன்வந்துள்ளது.

இது குறித்து மக்கள் வங்கியின் பிரதிப் பொதுமுகாமையாளர் (தனிநபர் வங்கிச் சேவை) ரி. எம். டபிள்யூ. சந்திரகுமார கருத்து வெளியிடுகையில், 'ஆண்டுதோறும் ஒக்டோபர் 1 ஆம் திகதியன்று கொண்டாடப்படுகின்ற சர்வதேச சிறுவர் தினம் மற்றும் சர்வதேச முதியோர் தினம் ஆகியவற்றை முன்னிட்டு பல்வேறு விசேட நிகழ்ச்சித் திட்டங்களை மக்கள் மக்கள் வங்கி ஆரம்பிக்கின்றது.

இதற்கு அமைவாக, இம்முறை 2024 ஒக்டோபர் 01 முதல் ஒக்டோபர் 31 வரையில், மக்கள் வங்கியின் இசுரு உதான கணக்கில் பணத்தை வைப்பிலிடும் 5 வயது வரையான குழந்தைகளுக்கும், பாடசாலை சிறுவர்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக மக்கள் வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட சிசு உதான கணக்கில் பணத்தை வைப்பிலிடும் சிறுவர்,சிறுமியருக்கும் பெறுமதிமிக்க பரிசுகள் வழங்கப்படவுள்ளன. இது அவர்கள் தமது கல்வியை தொடர்ந்து முன்னெடுப்பதை இலகுவாக்கிக் கொள்ள உதவும்' என்றார்.

மேலும் சிரேஷ்ட பிரஜைகளுக்காக மக்கள் வங்கி அறிமுகப்படுத்தியுள்ள பரிணத கணக்கில் பணத்தை வைப்பிலிடும் போது, அதியுயர் வட்டியை ஈட்ட முடியும். இதைவிட பரிணத கணக்குதாரர்கள் 'மக்கள் வங்கி சுவர்ண பிரதீப' தங்க அடகுக்கடனைப் பெற்றுக்கொள்ளும் போது சலுகை வட்டி வீதத்தை அனுபவிக்க முடியும்.

அரச சேவையிலிருந்து இளைப்பாறியவர்களுக்கு குறைந்தபட்ச வட்டியுடனும், அதிகபட்சமாக 15 ஆண்டுகள் வரையான மீள்கொடுப்பனவுத் தவணைக் காலத்துடன் விசேட வட்டி வசதியொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குறைந்தபட்ச ஆவணங்களை சமர்ப்பித்து இக்கடன் வசதியைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

நாடெங்கிலும் அமைந்துள்ள 747 மக்கள் வங்கிக் கிளைகள் அல்லது சேவை மையங்களில் இக்கணக்குகளை ஆரம்பித்துக்கொள்ள முடியும். மேலும், டிஜிட்டல் வங்கிச்சேவையில் முன்னோடி என்ற வகையில், பல்வகைப்பட்ட தனித்துவமான டிஜிட்டல் வங்கிச்சேவை வசதிகள் மூலமாக புத்தாக்கமான மற்றும் திறன்மிக்க சேவையை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதில் மக்கள் வங்கி அர்ப்பணிப்புடன் உள்ளது. முழுமையான அரச உடமை வங்கியான மக்கள் வங்கியில் நீங்கள் வைப்புச் செய்யும் பணத்திற்கு ஒப்பற்ற அளவில் பாதுகாப்பு உள்ளது. இச்சலுகைகள் குறித்த கூடுதல் விபரங்களை 1961 என்ற மக்கள் வங்கியின் துரித சேவை அழைப்பு மையத்தைத் தொடர்பு கொண்டோ அல்லது www.peoplesbank.lk என்ற மக்கள் வங்கியின் இணையத்தளத்தின் மூலமாகவோ அறிந்து கொள்ள முடியும்.'

**இசுரு உதான மற்றும் சிசு உதான:**

5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்காக 1998 ஆம் ஆண்டில் இசுரு உதான கணக்கினை மக்கள் வங்கி அறிமுகப்படுத்தியிருந்ததுடன், அதன் மூலமாக, 'ஒரு குழந்தைக்கு வழங்கக்கூடிய புத்திசாலித்தனமான பரிசு'என்ற கோட்பாட்டின் கீழ் பல்வேறு மதிப்பிலான பரிசுகளை இசுரு உதான கணக்கு அறிமுகப்படுத்தியது.

இளவயதிலேயே மாணவர்கள் மத்தியில் சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவித்து, நாட்டின் எதிர்காலச் சிற்பிகளான மாணவர்கள் மத்தியில் நிதியியல் ஒழுக்கம் கொண்ட தலைமுறையொன்றைக் கட்டியெழுப்பும் நோக்குடன், 1996 ஆம் ஆண்டில் சிசு உதான கணக்கினை மக்கள் வங்கி அறிமுகப்படுத்தியது. இதன் காரணமாக, 05 முதல் 18 வயது வரையான பாடசாலை மாணவர்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கம் வளர்க்கப்பட்டுள்ளது. இன்று இலங்கையில் சிறுவர்களில் பெரும் பிரிவினர் தமது சேமிப்புக் கணக்குகளை மக்கள் வங்கியில் பேணி வருகின்றனர்.

வட்டிக்குப் புறம்பாக, இக்கணக்கில் தாம் வைப்புச் செய்துள்ள பணத்தொகையைப் பொறுத்து, பல்வகைப்பட்ட வெகுமதிகள் மற்றும் சலுகைகளைப் பெறுவதற்கும் மாணவர்கள் உரித்துடையவர்கள். அத்துடன், உயர்கல்வி வரை பல்வேறு நிதியியல் சேவைகளை அவர்களுக்கு வழங்கி, உறுதியான எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் பொறுப்புணர்வுமிக்க ஒரு நிதி நிறுவனமாகவும் மக்கள் வங்கி இயங்கி வருகின்றது.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தும் மாணவர்களுக்கு உயர்கல்விக்கான ஒரு வலுவான உதவிக்கரத்தை வழங்கும் நோக்குடன், 1997 ஆம் ஆண்டில் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அன்று தொட்டு, தரம் ஐந்து புலமைப்பரிசில், சாதாரண தரம் மற்றும் உயர் தரம் ஆகிய பரீட்சைகளில் சித்தியெய்தும் மாணவர்களுக்கு நிதி மற்றும் ஏனைய பரிசுகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆண்டுதோறும் மக்கள் வங்கி முன்னெடுத்து வருகின்றது.

**பரிணத:**

சிரேஷ்ட பிரஜைகளுக்காக பரிணத கணக்கினை மக்கள் வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது. தமது வாழ்வின் அனுபவத்தை தேசத்திற்காக உழைப்பதற்கு செலவிட்டு, நாட்டின் எதிர்காலத் தலைமுறைகள் சிறப்பதற்கு தம்மை அர்ப்பணித்து, இன்று அனைவருக்கும் முன்னுதாரணமாகத் திகழும் சிரேஷ்ட பிரஜைகளுக்காக இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவர்கள் கஷ்டப்பட்டு உழைத்த பணத்திற்கு பல வெகுமதிகள் இதன் கீழ் கிடைக்கின்றன. இதன் கீழ் வீட்டிலிருந்து கொண்டே டெபிட் அட்டை, கடனட்டை மற்றும் டிஜிட்டல் வங்கிச்சேவை வசதிகள் மூலமாக பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் ஆற்றல் அவர்களுக்கு கிட்டுவதுடன், அவர்களுடைய வாழ்வின் எதிர்காலத்திற்கு வலுவான உதவிக்கரமாகவும் காணப்படுகின்றது.

சிரேஷ்ட பிரஜை என்ற வகையில் உங்களுடைய கண்ணியத்தையும், கௌரவத்தையும் கட்டிக் காத்து, சுதந்திரமான வாழ்வுக்கு தேவையான நிதி ஏற்பாடுகளை வழங்குவதே மக்கள் வங்கியின் நோக்கமாகும்.



**(படம்: மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (தனிநபர் வங்கிச்சேவை) ரி. எம். டபிள்யூ. சந்திரகுமார**



# ஜனாதிபதி அநுரவின் திட்டங்களுக்கு நாட்டு மக்களின் ஆதரவு அதிகரிப்பு



**(மாத்தளை சுழற்சி நிருபர்)**

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசினால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத் திட்டங்களுக்கு மக்களின் ஆதரவு நாளாந்தம் அதிகரித்து வருவதாக மாத்தளை மாவட்ட தேசிய மக்கள் சக்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர் ரவுப் ஹனிபா ஹாஜியார் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு வழங்கிய மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம் கடந்த 29 ஆம் திகதி மாத்தளை நிக்ககொள்ள சன சமூக நிலையத்தில் இடம்பெற்றபோது, அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாட்டிலுள்ள அனைத்து மக்களும் எவ்வித பாகுபாடும் இன்றி எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கட்சிக்கே தமது ஆதரவை வழங்குவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.


நாட்டினதும் மக்களினதும் நலன் கருதி இன்றைய அரசு முன் வைத்துள்ள நல்ல திட்டங்களுக்கு மக்களின் ஆதரவு பெருகி வருகின்றது.

பாராளுமன்றத்தை பலப்படுத்துவதில் பெரும்பான்மையான உறுப்பினர்களை தேசிய மக்கள் சக்தியின் ஊடாக தெரிவு செய்ய மக்கள் முன்வரவேண்டும் என அவர் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் நிக்ககொள்ள தொகுதி இணைப்பாளர் அசீஸ் மஹ்ரூப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், நிக்ககொள்ள பள்ளிவாசலில் நிர்வாக சபையினர், மாத்தளை மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று குழு உறுப்பினர் பொன்சேக்கா மற்றும் ஊர்மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## கல்முனை பற்றிமாவின்

# 125 ஆவது ஆண்டு நிறைவு ஜூபிலி ஆண்டாக பிரகடனம்




கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி தேசிய பாடசாலை 125 ஆவது ஆண்டு கல்வி சேவையினை நிறைவு செய்யவுள்ள நிலையில், இவ் வருடம் ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி முதல் 2025 ஆம் ஆண்டு ஒக்டோபர் 13 ஆம் திகதி வரையான ஆண்டை ஜூபிலி ஆண்டாக பிரகடனப்படுத்தவுள்ளது.

இதற்காக பல செயற்றிட்டங்களை செய்யவுள்ளதாக பாடசாலையின் அதிபர் அருட் சகோதரர் ரெஜினோல்ட் தெரிவித்திருந்தார்.

பாடசாலையின் கேட்போர் கூடத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது இதனை தெரிவித்த அவர்,


இவ்வாண்டு நிறைவை சிறப்பிக்கும் முகமாக 45 அங்கதவர்களை கொண்ட ஜூபிலி குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. பாடசாலையின் முகாமைத்துவ குழு உறுப்பினர்கள், பாடசாலை சங்க அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் சங்க நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் என இணைந்து குறித்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

துறவற சமய தலைவர்களால் உருவாக்கப்பட்டு வழிநடத்தப்பட்டு வந்த இந்தப் பாடசாலை அருட் சகோதரர்களால் இன்று வரை வழிநடத்தப்பட்டு வருகின்றது.

தற்போது இப்பாடசாலையில் 4000க்கும் மேற்பட்ட மாணவர்களும் 250 க்கும் மேற்பட்ட கல்வி சாரா ஊழியர்களும் உள்ளதோடு இறை நம்பிக்கையுடன் பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், 125 ஆவது ஆண்டை சிறப்பிக்கும் முகமாக பாடசாலை சார் அனைவரையும் சந்திப்பதே எமது நோக்கம் என பாடசாலையின் அதிபர் ரெஜினோல்ட் தெரிவித்திருந்தார்.

மேலும், இம் மாதம் 13 ஆம் திகதி வைபவ ரீதியாக ஆரம்ப நிகழ்வை நடத்தவுள்ளதாகவும் இதன்போது, பாடல் வெளியீடும் இடம்பெறவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.



தினகரன் THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் புரட்டாதி மாதம் 15ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் அவ்வல் பிறை 27

### குறள் தரும் சிந்தனை

அழுக்கற்று அகன்றாரும் இல்லை அஃதுஇல்லார்
பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல்

பொறாமை கொண்டதால் புகழ் பெற்று உயர்ந்தோரும் இல்லை;
பொறாமை இல்லாத காரணத்தால் புகழ் மங்கி வீழ்ந்தோரும் இல்லை.

# இலங்கை மக்களின் தெளிவான மனநிலை

இலங்கை மக்களின் புதிய ஆணையைப் பெற்றுக்கொள்ளும் வகையில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தலுககு அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதற்கு ஏற்ப எதிர்வரும் 04 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டு நவம்பர் மாதம் 14 மாதம் பொதுத்தேர்தல் நடாத்தப்படவிருக்கிறது.

இன்று முதலாம் திகதி முதல் எதிர்வரும் 08 ஆம் திகதி வரை தபால் மூலம் வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட உள்ளன.

இவ்வாறான பின்புலத்தில் அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் இப்பொதுத்தேர்தலில் போட்டியிடும் விதம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளன. அதனடிப்படையில் இந்த நாட்களில் கட்சிகளுக்கு இடையில் சந்திப்புக்களும் கலந்துரையாடல்களும் பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்று வருகின்றன.

இத்தேர்தலின் நிமித்தம் கூட்டணி அமைத்துக் கொள்ளும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் பல பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளன. இப்பேச்சுவார்த்தைகள் 08 தடவைகள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப் பேச்சுவார்த்தைகளில் ஐக்கிய மக்கள் சக்தி தரப்பினர் இரண்டு நிபந்தனைகளை முன்வைத்துள்ளனர். அவற்றில் ஒன்று தொலைபேசி போட்டியிட வேண்டும். மற்றையது ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரான முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதிய கூட்டணியில் இருக்கக்கூடாது என்பதாகும். இந்த இரண்டு நிபந்தனைகளிலும் ஐக்கிய மக்கள் சக்தி விடாப்பிடியாக இருந்துள்ளது.

இந் நிலையில் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இரு தரப்பினரும் இணைந்து கூட்டணி அமைக்கும் முயற்சி தோல்வி அடைந்துள்ளது.

இதேவேளை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்திருந்த தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் சில மாவட்டங்களில் தனித்தும் இன்னும் சில மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்ணி அமைத்தும் பொதுத்தேர்தலில் போட்டியிடப் போவதாகக் கூறி வருகின்றன.

இவ்வாறான சூழலில் ஐக்கிய மக்கள் சக்தி, எம்மோடு கூட்டணி அமைக்கும் கட்சிகள் எல்லா மாவட்டங்களிலும் எமது சின்னத்தின் கீழேயே போட்டியிட வேண்டும் என்று நிபந்தனையை முன்வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனாலும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் புத்தளம், அம்பாறை மாவட்டங்களில் தனித்தும் ஏனைய மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தும் பொதுத்தேர்தலில் போட்டியிடப் போவதாகக் குறிப்பிட்டிருக்கிறது. அதேபோன்று ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் ஏற்கனவே அங்கம் வகிக்கும் தமிழ் முற்போக்கு கூட்டணி, தனித்தா?, கூட்டணி சேர்ந்தா? பொதுத்தேர்தலில் போட்டியிடுவதென இதர கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளதாகக் குறிப்பிட்டிருக்கிறது.

இதேவேளை, தமிழரசுக்கட்சியுடன் இணைய முடியாது என்றுள்ள புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தாரத்தன், ஜனநாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாகக் களமிறங்குவோம்' என்றுள்ளார். அத்தோடு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வி விக்னேஷ்வரன், தமிழ் தேசிய கூட்டமைப்பில் ஒரு போதும் இணைய மாட்டேன்' எனத் தெரிவித்திருக்கிறார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலை எதிர்க்கொள்வதென்பது இலகுவான காரியமல்ல. அது பாரிய சவால் மிக்க காரியமாக இருக்கும் என்பதை அரசியல் கட்சிகள் முன்கூட்டியே புரிந்து கொண்டிருப்பதையே இந்த முரண்பாடுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

இத்தேர்தலை தனித்து நின்று எதிர்கொள்ள முடியாது என்பதை உணர்ந்துள்ள பெரும்பாலான அரசியல் கட்சிகள் கூட்டணி அமைத்துக் கொள்வதில் அதிக ஆர்வம் கொண்டுள்ளன. ஆனபோதிலும் பல கட்சிகளின் சந்திப்புக்கள், பேச்சுவார்த்தைகள் இற்றை வரையும் தோல்வியில் முடிவுற்றுள்ளன. அவற்றில் ஐ.தே.க வும் ஐ.ம.சக்தியும் 8 தடவைகள் நடாத்திய பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்று இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

என்றாலும் இந்தப் பொதுத்தேர்தலை எதிர்கொள்வதற்காக பெரும்பாலான கட்சிகளுக்கு இடையில் இணக்கப்பாட்டை எட்ட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆன போதிலும் நாடு சுபீட்சம் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ப எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஆணை வழங்க மக்கள் தீர்மானம் எடுத்துள்ளனர். அதுவே பரவலான அபிப்பிராயமாகவும் உள்ளது.

கடந்த காலங்களைப் போலல்லாது தற்போது இந்நாட்டு மக்கள் தெளிவான மனநிலையில் உள்ளனர். இதற்கு கடந்த ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் நல்ல எடுத்துக்காட்டாகும். கட்சிகளும் கட்சிகளின் தலைவர்களும் ஒரு அணியில் இருந்த போதிலும் பெரும்பாலான மக்கள் சுயமான தனித்துவ முடிவை எடுத்தமை தெரிந்ததே.

editor.tkn@lakehouse.lk

# கல்விப் புலத்தில் தனித்தடயம் பதித்த கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை

**இன்று (01.10.2024) 101 ஆவது அகவையில் கால்பதிக்கின்றது**



கோப்பாய் ஆசிரியர் கலாசாலை 01.10.1923 இல் ஆரம்பிக்கப்பட்டதாகும். இலங்கையில் உள்ள மூத்த ஆசிரியர் கலாசாலை என்ற பெருமையுடன் இன்று 101 ஆவது ஆண்டு நிறைவைக் காண்கின்றது. இலங்கையில் தற்போது இயங்கிவரும் எட்டு ஆசிரியர் கலாசாலைகளுள் தமிழ்மொழி மூல ஆசிரியர் பயிற்சியை வழங்கிக் கொண்டிருக்கின்ற கலாசாலையாக இதுவே விளங்குகின்றது.



கோப்பாயில் ஆசிரியர் கலாசாலை அமைவதற்கான அடித்தளம் இட்ட பெருமை காரைநகர் அருணாசலம் உபாத்தியாயரைச் சாரும். சைவச்சூழலில் ஆசிரியர்கள் கற்க வேண்டும் என்ற அவரது உறுதியினால் கோப்பாய் நாவலர் பாடசாலைச் சூழலில் ஆசிரியர் கலாசாலை ஒன்றை உருவாக்கினார். ஆயினும் சைவ ஆசிரியர்களும் கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவ ஆசிரியர்களும் கற்பதற்கான அனுமதி அன்று அரசினால் வழங்கப்பட்டது. கோப்பாய் பிரதேசத்தில் 1916 இல் அவர் அமைத்த ஆசிரியர் கலாசாலையைத் தொடரமுடியாத சூழ்நிலை அவரது மரணத்தினால் ஏற்பட்டது. ஏழு ஆண்டுகளே அது இயங்கியது.

அதன் விளைவாக கோப்பாயைச் சேர்ந்த சைவத்தமிழ்ப் பெரியார்கள் சேர் பொன் இராமநாதனிடம் வேண்டிக் கொண்டதன் அடிப்படையில் அவர் தனது ஐந்து ஏக்கர் நிலப்பரப்பை கலாசாலை அமைவதற்காக வழங்கினார். அந்தக் காணி இன்றும் 'இராமநாதன் கலட்டி' என்ற பெயராலேயே அழைக்கப்படுகின்றது.

பல்வேறு ஏறுமுகங்களையும் இறங்கு முகங்களையும் கண்ட இக்கலாசாலை கடந்த ஆண்டு பிரமாண்டமாக நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது. ஓராண்டு முழுவதும் விழா முன்னெடுக்கப்பட்டது.

தற்போதைய சூழலில் ஆசிரிய கலாசாலைகள் ஆசிரியர் கல்வி சார்ந்த வேறு தளங்களில் பயணிக்க வேண்டிய நிறுவனங்களாக அமைந்துள்ளன. ஆசிரியர்களுக்கான பல்கலைக்கழகம் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற சூழலில் சேவையின் பின்னான பயிற்சியை வழங்கும் நிறுவனங்களாக கலாசாலைகள் உருமாறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனைக் காலம்தான் தீர்மானிக்க வேண்டும். இத்தகைய சூழமைவில் வடபுல மண்ணுக்கு சிறப்பாகவும் நாடு முழுவதற்கும் பொதுவாகவும் ஆசிரியர் கல்வியை வழங்கி ஏறத்தாழ முப்பதாயிரம் ஆசிரியர்களை உருவாக்கி இன்று 101 ஆவது ஆண்டு நிறைவைக் காணும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையை நாமும் வாழ்த்துவோம்.



**சரஸ்வதி முத்துக்குமாரசுவாமி...**
(இளைப்பாறிய ஆசிரியர்)
ஆசிரிய மாணவி 1966-1967

# கதிர்காமம் யாத்திரிகர் தொண்டர்சபை தலைவர் அருளானந்தன் காலமானார்

**தமிழுக்கும் சைவத்துக்கும் பல தசாப்த காலமாக பணியாற்றிய அன்னாருக்கு பலரும் அனுதாபம்**

கதிர்காமம் யாத்திரிகர் தொண்டர் சபையின் தலைவர் ச.த.சி. அருளானந்தன் ஜே.பி அவர்கள் கடந்த 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார். அவர் கடந்த சில தசாப்தங்களாக சபையின் தலைமையை ஏற்று சபையின் தொண்டுகளில் சிரத்தையுடன் ஈடுபட்டு வந்தார். குறிப்பாக சபையின் பிரதான குறிக்கோளான கதிர்காமக் கந்தன் அடியார்கள், யாத்திரிகர்களின் சேவையைத் தனது தலையாய கடமையாகக் கொண்டிருந்தார்.

கதிர்காமம் உற்சவ காலங்களில் கதிர்காமம் தெய்வானை அம்மன் தேஸ்தான நிர்வாகத்துடன் சேர்ந்து அடியார்களுக்கும் வருதை தரும் பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கும் உன்னத சேவையை சபையின் சார்பாக அர்ப்பணிப்புடன் செய்து வந்தார். கொழும்பு மடாலயத்தில் திருவிழாக் காலங்களில் நடைபெறும் நித்திய பூசைகளிலும், மாலையில் நடைபெறும் வள்ளி திருமணப் படினம் பாட்டுக்கள் பாடி பொருள் உரைக்கும் பாரம்பரிய நிகழ்வுகளுக்கும் தனது பூரண ஒத்தாசைகளை நல்கி வந்தார்.

சபையின் ஏனைய பிரதான நிகழ்வுகளான சிவராத்திரி தினத்தன்று மடாலய வளாகத்தில் இருக்கும் கோயில்களுக்கு வருகைதரும் பக்தர்களுக்கு இரவுப் பந்தல் அமைத்து சிற்றுண்டிகள், பானம் வழங்குவதில் முன்னின்று செயற்பட்டார்.

மன்னார் திருக்கேதீஸ்வர தேவஸ்தானத்தில் சிவராத்திரி அன்னதான நிகழ்வுகளிலும் சபையின் சார்பாக கலந்து சிறப்பிப்பார். பிற மாவட்டங்களிலிருந்தும் குறிப்பாக வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் இருந்துவரும் தமிழ் இந்து மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், அறநெறிப் பாடசாலை சிறார்கள், ஆசிரியர்களுக்கு அவர்கள் மேற்கொள்ளும் சுற்றுலாவுக்கு ஆதரவாக அவர்களுக்கு தங்குமிட வசதிகள் செய்து கொடுத்து வந்தார்.

மடாலய வளாகத்தில் அமைந்த விநாயகர், சிவன் தேவஸ்தானங்களின் முக்கிய அன்னதானம் போன்றவற்றுக்கு மடாலயத்தில் இடமளித்து வசதிகளைக் கொடுத்தல், சபையினால் ஸ்தாபிக்கப்பட்ட வளாகத்துக்கு அண்மையில் இருக்கும் தொண்டர் வித்தியாலயத்துக்கு உதவிகள் மற்றும் விளையாட்டு மைதானம் பெற்றுக் கொடுத்தமை போன்ற சபையின் செயற்பாடுகளுக்கு முன்னின்று செயற்பட்ட உன்னத தலைவராக அருளானந்தன் விளங்கினார்.



சைவம், தமிழ் மீது கொண்ட பற்றினால் தலைநகர் கொழும்பில் இருக்கும் அகில இலங்கை இந்து மாமன்றம், கொழும்பு விவேகானந்தா சபை ஆகியவற்றின் உபதலைவராகவும், மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் நிர்வாக சபையிலும் சிவப்பணிகளில் ஈடுபட்டு வந்தார்.

அன்னாரின் மறைவு எமது சபைக்குப் பேரிழப்பாகும். அன்னாரின் குடும்பத்துக்கும் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். சபையின் பொதுச்செயலாளர் சி. சிவஞானம் மற்றும் பொருளாளர் தி. லோகநாதன் உட்பட பலரும் அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முதலாம் திகதி கொழும்பு பொரளை கனத்தை இந்து மயானத்தில் நடைபெற்று, மாலை 4.00 மணியளவில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

**சண்முகநாதன் பகிரதன்...**
(AAL, பிரதித் தலைவர்) கதிர்காமம் யாத்திரிகர் தொண்டர் சபை

# விடத்தல்தீவு வடக்கில் பாலம் நிர்மாணிக்கும் பணிகள் 8 வருடங்களாக இழுபறி நிலையில்!

இப்பிடி ஒரு பாலத்தை கட்டினதுக்கு, கட்டாமலே விட்டிருக்கலாம்” என்ற வார்த்தையோடு விடத்தல்தீவு பிரதேச மக்களின் மன ஆதங்கங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.




மன்னார் மாவட்டத்தில், மாந்தைமேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விடத்தல்தீவு கிராமத்தின் வடக்குப் பகுதியில் ஆற்றுக்கு குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும் குறித்த திட்டம் முடிவுறுத்தப்படாமல் பல வருடகாலமாக இடைநடுவே நிறுத்தப்பட்டிருப்பதால் தாம் அதிக இடர்களை சந்திப்பதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

**பாலம் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதற்கான நோக்கம்:**

நாற்பது வருடங்களுக்கு முன்னரான காலப்பகுதிகளில் சுமார் எண்பதுக்கும் அதிகமான இந்துக் குடும்பங்கள் விடத்தல்தீவு மற்றும் பள்ளமடு பகுதிகளில் வாழ்ந்து வந்துள்ளன. அவர்களுடன் அண்மைக் கிராமமான சன்னார் கிராமத்திலுள்ளவர்களும் அக்காலம் முதல் விடத்தல்தீவு வடக்குப் பிரதேசத்தில் ஆற்றங்கரையில் காணப்படும் தொழிலாளர்களுடைய தோணிகளைப் பயன்படுத்தி இறந்தவர்களின் உடலை ஆற்றைக் கடந்து கொண்டுசென்று அங்கு அமைந்துள்ள இந்து மயானத்தில் இறுதிக் கிரியைகளை மேற்கொள்ளும் வழக்கம் காலம்காலமாக நிலவி வந்துள்ளது.

தற்போதும் விடத்தல்தீவு, பள்ளமடு, சன்னார் கிராமங்களிலுள்ள இந்துக்கள் தம் உறவினர்களின் இறுதிக் கிரியைகளுக்காக இப்பிரதேசத்தையே பயன்படுத்துகின்றனர்.

ஆற்றின் மறுகரையிலுள்ள மயானத்தில் இறந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்ய ஆற்றினூடாக சென்று வருதல் சிரமமாக இருந்தமையினால் ஆற்றுக்கு குறுக்கே பாலம் அமைக்கும் பொருட்டு வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த இப்பாலத்தினை அமைப்பதற்கான திட்டமானது 2016ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு முதற்கட்ட வேலைகளும் செயற்படுத்தப்பட்டுள்ளன. குறித்த திட்டத்தினை நடைமுறைப்படுத்தியமை மற்றும் நிதி தொடர்பான முகாமைத்துவத்தை மேற்கொண்டமை என்ற வகையில் மாந்தை மேற்கு பிரதேசசெயலகமும், திட்டத்தினை மேற்பார்வை செய்த நிறுவனம் என்ற வகையில் மாந்தை மேற்கு பிரதேசசபையும் இத்திட்டத்துடன் தொடர்புபட்டுள்ளன.



இத்திட்டத்திற்கென முதற்கட்ட நிதியாக 2016ஆம் ஆண்டு பதினெட்டு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இவ்வேலைத்திட்டத்தினை மேற்கொள்வதற்காக கிராம அபிவிருத்தி அலுவலரின் சிபாரிசின் பேரில் விடத்தல்தீவு வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்துடன் (RDS) திட்டத்துக்கான ஒப்பந்தம் (Contract) மேற்கொள்ளப்பட்டு, திட்டம் கையளிக்கப்பட்டது.

குறித்த திட்டத்தின் முதற்கட்ட வேலைகளை மேற்கொண்ட போதே பதினெட்டு இலட்சம் ரூபா நிதியும் செலவுசெய்யப்பட்டுள்ளது.

திட்டம் இடைநிறுத்தப்பட்டிருப்பதற்கான காரணம்:

ஒதுக்கப்பட்டிருந்த மொத்த நிதியும் ஏற்கனவே முடிவடைந்தமையால் ஏனைய வேலைகளை தொடர்ந்து முன்னகர்த்திச் செல்வதற்கு எவ்வித நிதியும் கையிருப்பில் இல்லாமலுள்ளது. அத்துடன் 2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் எவையும் கிடைக்காமையினாலும் எதிர்காலத்தில் கோரப்படும் அபிவிருத்தித்திட்ட முன்மொழிவுகளில் இப்பாலத்தினை பூரணப்படுத்த நிதிகோரப்படும் என எதிர்பார்க்கப்பட்டுள்ள நிலையில் எட்டு வருடங்களாக இத்திட்டமானது எவ்வித முன்னடைவுகளின்றி ஸ்தம்பித்திருக்கிறது.

இவற்றின் பின்னணியில் குறித்த பாலத்திற்கான வேலைகள் இடைநடுவே நிறுத்தப்பட்டபோது தரைமட்டத்திலிருந்து எட்டு அடிவரை வீதி உயர்த்தப்பட்டுள்ள நிலையினால் அதனை வீதியாகக்கூட பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் ஏற்கனவேயிருந்த வீதியைப் பயன்படுத்தி தொழிலுக்குச் சென்றுவந்த மீனவர்களும், அப்பாதையூடாக இறந்த உடல்களை அக்கரைக்கு எடுத்துச்சென்றவர்களும் இப்போது அயலிலுள்ளவர்களது காணியையும், பாலத்திற்கு இடையிலுள்ள சிறிய ஓடையையும் பயணத்துக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

பாலத்திற்கான வேலைகள் இடைநிறுத்தப்பட்டபோது அயலிலுள்ள காணியினைச் சுற்றி எல்லை வேலிகள் காணப்படாமையினால் அவ்வீட்டின் முற்றத்தை பல காலமாக அனைவரும் பாதையாக பயன்படுத்திவந்துள்ளமையால் அக்குடும்பத்திலிருந்தவர்களது பாதுகாப்பும் கேள்விக்குட்படுத்தப்பட்டிருந்தது.

அத்தோடு தமக்கென தனியான இந்துமயானமொன்றினை சன்னார் பகுதியில் அமைத்துத் தருமாறு பிரதேச செயலகத்திடம் சன்னார் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்ததற்கமைய அவர்களுக்கென ஒரு பிரதேசம் வழங்கப்பட்டிருந்தது.எனினும் குறித்த பிரதேசம் மயானத்திற்காக பயன்படுத்துவதற்கு பொருத்தமற்ற பிரதேசமாகவிருப்பதால் அங்குள்ள மக்களுக்கு அதனைப் பயன்படுத்த முடியாத நிலையில் 9 கிலோமீற்றர் தொலைவிலுள்ள விடத்தல்தீவு கிராமத்தை நோக்கியே தமது உறவினர்களின் உயிரற்ற உடலைக் கொண்டுவருகின்ற போக்கு இன்றும் தொடர்கிறது.

இந்த நிலையில் அயலிலுள்ள தொழிலாளர்கள் தமது வலைகள் மற்றும் கடற்றொழில் சாதனங்களையும், ஏனையவர்கள் விறகுகள், மட்டைகள் போன்ற இதர பொருட்களையும் காயவைத்துக்கொள்ளும் இடமாகவே இந்தப் பாலம் தற்போது பயன்படுத்தப்படுகிறது.

எது எவ்வாறிருப்பினும், குறித்த பாலத்தை விரைவில் முழுமைப்படுத்த வேண்டும், அவ்வாறு இல்லையேல் முன்பு இருந்ததைப் போன்று வீதியை ஒத்த அமைப்புக்கு பாலத்தை தகர்த்து வீதியையாவது மக்கள் பயன்படுத்தும் நிலைக்குக் கொண்டுவரவேண்டும். இவற்றில் ஒன்யையேனும் செய்யாதவரையில் அப்பாதையை பயன்படுத்தும் மீனவர்களுக்கும், இந்துமக்களுக்கும் இத்திட்டத்தினால் எவ்வித பயனும் கிடைக்கப்போவதில்லை என்பதே மக்களின் நிலைப்பாடாக உள்ளது.



**கிரிஜா அருள்பிரகாசம்...**
ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# நகர்வலம்



# முப்படை வீரர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவுகள்


## தெளிவுபடுத்தி பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

(ஸாதிக் ஷிஹான்)

விஷேட பிரமுகர்களின் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள முப்படை வீரர்களுக்காக வழங்கப்படும் விஷேட ஊக்குவிப்பு கொடுப்பனவுகள், முழுமையாக நிறுத்தப்படவில்லை என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

விஷேட பிரமுகர்களின் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள முப்படை வீரர்களுக்காக வழங்கப்பட்டு வரும் விஷேட ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளதாக, சில ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பில் விஷேட அறிக்கை ஒன்றின் மூலம் பாதுகாப்பு அமைச்சு விளக்கமளித்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:




முன்னாள் விஷேட பிரமுகர்களின் பாதுகாப்புக்காக பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளவர்கள் 2024 செப்டெம்பர் (22) பின்னர், விஷேட பிரமுகர்களுக்கான பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படமாட்டார்கள்.

இதனால் அவர்களுக்கு வழங்கப்படும் விஷேட ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் 2024 செப்டம்பர் மாதம் 22 வரையே உரித்தாகும்.

பாதுகாப்பு படைகளின் பிரதம அதிகாரி, முப்படைத் தளபதிகள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள முப்படை வீரர்களுக்காக வழங்கப்படும் இந்த கொடுப்பனவு நிறுத்தப்படவில்லை. இவ்வாறு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை – மலேசிய வர்த்தக சபை புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்து

ருஸைக் பாரூக்



இலங்கையின் 9ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு இலங்கை மலேசியா வர்த்தக சபையின் நிறைவேற்றுக்குழு சார்பாக அதன் தலைவர் மர்ஷாத் பாரி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச்செய்தியில், தாங்களுடைய பதவியேற்பானது தேசத்தின் வரலாற்றில் ஒரு மைல் கல்லாக பதிவாகியுள்ளது. மேலும் உங்களுடைய தொலைநோக்கின் அடிப்படையில் இலங்கை அதிக செழிப்பு, ஸ்திரத்தன்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியின் பாதையில் செல்லும் என்பதில் அனைவருக்கும் மிகுந்த நம்பிக்கையுள்ளது.

இலங்கை மக்களின் முன்னேற்றம் மற்றும் நல்வாழ்வுக்கான அர்ப்பணிப்பு உண்மையிலேயே பாராட்டத்தக்கது, அபிவிருத்தி முயற்சிகள் நாட்டை முன்னேற்றும் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கைக்கும் மலேசியாவுக்குமிடையில் இருதரப்பு வர்த்தகம், முதலீடு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும் வலுப்படுத்துவதற்கும் அர்ப்பணிப்புள்ள சபை என்ற வகையில், அரசாங்கத்துடன் நெருக்கமாக ஒத்துழைக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். இலங்கை அதன் உலகளாவிய பொருளாதார பங்காளித்துவத்தை தொடர்ந்து விரிவுபடுத்தும், மலேசியா நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய மூலோபாய நட்பு நாடாக இருக்கும் என்ற நம்பிக்கை நிலவுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

# ஜாமிஅதுல் பாஸிய்யா கலாபீடத்தில் வருடாந்த மீலாதுன் நபி விழா



பேருவளை சீனன்கோட்டை ஜாமிஅதுல் பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா கலாபீடத்தின் வருடாந்த மீலாதுன் நபி விழா (29) கலாபீட பாஸிய்யா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

கலாபீட அதிபர் அல் உஸ்தாத் மௌலவி எம். அஸ்மிகான் (முஅய்யிதி) நிகழ்வுக்கு தலைமை வகித்தார். கலாபீட மாணவர்களிடையே பல்வேறு போட்டிகள் நடாத்தப்பட்டன. இப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இதன்போது பரிசில்கள் வழங்கப்பட்டன.

இதன்போது வெற்றி பெற்ற மாணவரொருவருக்கு கலாபீட இணைச்செயலாளர் பர்ஸான் முர்ஸி பரிசு வழங்குவதை படத்தில் காணலாம்.

# குளத்தில் குளிக்கச்சென்ற மாணவன் உயிரிழப்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

கற்பிட்டி நுரைச்சோலை, ஹாஜராவத்தை பகுதியில் உள்ள குளம் ஒன்றில் குளிக்கச் சென்று நீரில் மூழ்கி காணாமல் போன மாணவர் ஒருவர் நேற்று முன்தினம் (29) மாலை உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

நுரைச்சோலை ஹாஜராவத்தை பகுதியில் வசித்து வந்த அப்துல் ரஹீம் முஹம்மத் எனும் 16 வயதுடைய மாணவனே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மாணவன் நுரைச்சோலை பூலாச்சேனை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் சாதாரண தரத்தில் கல்வி கற்றுவந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் இடம்பெற்ற போது உயிரிழந்த மாணவனும், அவரது சகோதரனும் ளுஹர் தொழுகைக்காக மஸ்ஜிதுக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது, குளம் ஒன்றில் குளிப்பதற்காக குறித்த மாணவன் சென்றுள்ளார் எனக் கூறப்படுகிறது.

எனினும் உயிரிழந்த மாணவனோடு சென்ற சகோதரன், விளையாடுவதற்காக மைதானத்திற்கு சென்றுவிட்டு தனது மூத்த சகோதரனை அழைத்துச் செல்ல மீண்டும் அந்த குளத்திற்கு வந்த போது அவர் அங்கு இருக்கவில்லை என சொல்லப்படுகிறது.

பின்னர் வீட்டுக்கு சென்ற சகோதரர், நடந்த சம்பவம் பற்றி வீட்டாருக்கு தெரியப்படுத்தியதுடன், அங்கிருந்தவர்களின் உதவியோடு குளத்தில் குளிப்பதற்காக சென்று காணாமல் போன மாணவனை தேடியுள்ளனர்.

இதன்போது, சுமார் ஒரு மணி நேரத்திற்கு பின், குளத்தில் இருந்து காணாமல் போன மாணவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

# மேல் மாகாண ஆளுநர் பொதுமக்களுடன் சந்திப்பு

(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)



மேல் மாகாண புதிய ஆளுநராக பதவியேற்றுள்ள ஹனீப் யூசுப் ஹாஜியின் முதலாவது பொது மக்கள் தினம் நேற்று (30) பத்தரமுல்ல ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது பல்வேறு பிரதேசங்களிலிருந்து வந்திருந்த பொது மக்கள் தமது பிரச்சினைகளை ஆளுநரிடம் முன்வைத்தனர். ஆளுநரிடம் முன்வைக்கப்பட்ட பொது மக்களின் தேவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேல்மாகாண ஆளுநரின் செயலாளர், பிரதம செயலாளர், அந்தரங்க செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

# அல் ஹுமைஸரா தேசிய பாடசாலை சிறந்த பெறுபேறு; பாடசாலை சமூகம் பாராட்டு

களுத்துறை மாவட்டத்தில் முன்னணி பாடசாலைகளிலொன்றான பேருவளை, சீனன்கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையிலிருந்து 2023ஆம் வருடத்திற்கான க.பொ.த சா/த பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் 80வீதமான மாணவர்கள் சகல பாடங்களிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாக பாடசாலை அதிபர் எம்.எம். இப்றாஹிம் தெரிவித்தார்.

பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுள் 05 மாணவர்கள் 9 பாடங்களிலும் 'ஏ' சித்திகளை பெற்றுள்ளதோடு 06 மாணவர்கள் 8ஏ,பீ சித்திகளையும் ஏனைய மாணவர்கள் 7ஏ,2பீ, 6ஏ,3பீ, 5ஏ,4பீ... என்ற அடிப்படையில் சிறந்த பெறுபேறுகளையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.



பாடசாலை மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற அர்ப்பணிப்போடு செயற்பட்ட பாடசாலை அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர் குழாம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கு மாணவர்கள் சார்பில், பழைய மாணவர்கள் சங்கம் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துள்ளதோடு பெறுபேறுகள் பெற்ற மாணவர்களுக்கும் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளது.

# க.பொ.த (சா/த) பரீட்சையில் அக்காவும் தங்கையும் '9 ஏ' சித்திகள்

(சமன் விஜய பண்டார, மாவனல்லை விசேட நிருபர்)

மாவனல்லை கல்வி வலயத்திலுள்ள பதுரியா தேசிய பாடசாலையில் கல்வி கற்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரிகள் கடந்த. க.பொ.த (சா. த) பரீட்சைக்குத் தோற்றி 9 பாடங்களிலும் 'ஏ' சித்திகளைப் பெற்றுள்ளனர்.

இப்பரீட்சையில் தரம் 10 இல் பயிலும் தங்கையும் தோற்றி 9 பாடங்களிலும் 'ஏ' சித்திகளைப் பெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.

அம்னா சுஹா அசன் மற்றும் அம்னா ஹசா அசன் ஆகிய பெயர்களைக் கொண்டவர்களே இம்மாணவிகளாவர். தரம் பத்தில் பயிலும் அம்னா சுஹா அசனுக்கு வயது 15ஆகும். அவரது மூத்த சகோதரி அம்னா ஹசா அசனுக்கு 17 வயது.

ஆங்கில மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றிய இவ்விரு மாணவிகளும் சிங்கள மொழியில் 'ஏ' தரத்தில் சித்தியடைந்துள்ளமை விசேட அம்சமாகும்.

இந்த முடிவுகளால் மகிழ்ச்சியடைந்துள்ள அவர்களின் தாயார் எஸ். முஸ்னி பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார் தரம் பத்தில் கல்வி கற்கும் மகளுக்கு பரீட்சை எழுத வேண்டும் என்ற ஆசையால் முன்னரே பரீட்சைக்கு தோற்றினார்.



எனக்கு மூன்று மகள்கள். இளைய மகளுக்கு 06 வயது. இவர்கள் மூவரும் முதலில் களுத்துறை பாடசாலைக்கே சென்றார்கள்.

2017 இல், நாங்கள் மாவனல்லைக்கு குடிபெயர்ந்தோம். பின்னர்

பதுரியா பாடசாலையில் பிள்ளைகளைச் சேர்த்தோம். எனது கணவர் வெளிநாட்டில் பணிபுரிகிறார். பிள்ளைகளின் பெறுபேறுகளை அறிந்த அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். இரு மகள்களின் எதிர்கால நம்பிக்கை மருத்துவர்களாக நாட்டுக்கு சேவை செய்ய வேண்டும் என்பது தான். இவர்கள் இருவரும் பாடசாலையின் ஆங்கில தினம், சாரணர் நடவடிக்கைகள் போன்று இணையத்தில் பல்வேறு செயற்பாடுகளிலும் தமது திறமையை வெளிப்படுத்தியுள்ளனர்.

இரண்டு மாணவிகளும் தாங்கள் பெற்ற பெறுபேறுகளைப் பற்றி இவ்வாறு தெரிவிக்கின்றனர் பாடசாலை முடிந்து வந்ததும் மூன்று மணி நேரத்திற்கும் மேல் சிறப்பான பெறுபேறுகளுக்காக நேர சூசிபடி பாடங்களைப் படித்தோம்.

மேலதிக வகுப்புகளிலும் கலந்து கொண்டோம். கடினமான பாடங்களை இருவரும் சேர்ந்து விவாதித்து தீர்வு தேடினோம். இந்த பெறுபேற்றை பெற அதுவும் காரணமாகும். இந்த பெறுபேற்றை பெற எங்களை ஊக்குவித்த பாடசாலை அதிபர் உள்ளிட்ட ஆசிரியர்களுக்கும் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் உட்பட அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர்.



# அரசியல் தூரநோக்கு கொண்டவர் புதிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க



## நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சுலைமா லெப்பை வாழ்த்து

எனது அரசியல், தூரநோக்குக் கொண்டது. இலங்கையில் வாழும் சிறுபான்மை சமூகம், பெரும்பான்மை சமூகத்துடன் இணைந்துதான் பணியாற்ற வேண்டும். இதன் மூலம் தான் சிறுபான்மை சமூகம், தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியும். இந்த நாட்டில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திசாநாயக்கவுக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தலைவரும் சமாதான நீதிவானுமாகிய வை. எல். சுலைமா லெப்பை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

புதிய ஜனாதிபதி தனது அரசியல் தூர நோக்குடன் பெற்ற வெற்றியுடன் நாட்டை கட்டி எழுப்ப வேண்டும். இன, மத, மொழி வேறுபாடின்றி செயலாற்றும் ஜனாதிபதிக்கு சகலரும் சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகளை தீர்க்க தங்களால் இயன்ற ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தலைவரும் சமாதான நீதிவானுமாகிய வை. எல். சுலைமா லெப்பை இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# தபால் மூல வாக்களிப்பு: இன்று முதல் விண்ணப்பங்கள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாராளுமன்றத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள், இன்று முதல் ஏற்றுக் கொள்ளப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் (08) வரை நடைபெறவுள்ளதாக தெரிவித்துள்ள தேர்தல் ஆணைக்குழு, நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்காக விண்ணப்பித்த அனைவரும் பாராளுமன்றத் தேர்தலுக்கு மீண்டும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டியது அவசியம் எனத் தெரிவித்துள்ளது. இதற்கிணங்க தகைமையுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களும் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் (08) அல்லது அதற்கு முன்னர் தமது மாவட்டத் தெளிவத்தாட்சி அதிகாரியிடம் கையளிக்க வேண்டும் என்றும் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. அதேவேளை, நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் இம்மாதம் (04) முதல் (11) வரை தாக்கல் செய்யப்படவுள்ளன.

2024 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் இடாப்புக்கு இணங்க, இந்த பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை வீடுகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் தொடர்பிலும், விசேடமாக கலந்துரையாடப்படவுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## புதிய அரசுடன் இந்தியா...

இந்தியா ஆர்வத்துடன் உள்ளதாகவும் இந்தியத் தூதுவர் தெரிவித்துள்ளார். இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும் தமிழ் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்குமிடையில், நேற்றுக்காலை கொழும்பில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இந்த சந்திப்பின்போதே தமிழ் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகளிடம் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் நடைபெற்றுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான நிலைவரம் மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கான கள நிலவரங்கள், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை போன்றவை தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வில் புதிய அரசாங்கம் செயற்படும் விதம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் சம்பந்தமாகவும் இங்கு ஆராயப்பட்டுள்ளன.

மேற்படி சந்திப்பில் தமிழ்த் தேசிய கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி தமிழரசுக்கட்சியின் சார்பில் அந்த கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, கட்சியின் செயலாளர் ப.சத்தியலிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பு தொடர்பில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில்;

நாட்டின் எந்த ஆட்சியாளர்கள் மீதும் எமக்கு நம்பிக்கை இருந்ததில்லை.தற்பொழுது ஆட்சிக்கு வந்திருப்பவர்கள் புதியவர்கள். அந்த வகையில் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஆட்சியாளர்கள் 13 ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்துவார்கள் என தெரிவித்தாலும் அதனைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

அதேபோன்று தேசிய மக்கள் சக்தியினர் (ஜே.வி.பி) மார்க்சிஷ கொள்கையுள்ளவர்கள்.

அவர்களுக்கு நாட்டின் பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய மிக முக்கியமான பிரச்சினை காணப்படுகிறது. அதனை அவர்களால் எந்தளவுக்கு சாத்தியமாக்க முடியும் என்ற கேள்வியும் உள்ளது.

சர்வதேச நாடுகள் இத்தகைய கொள்கையுடையவர்களுடன் எந்தளவு நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கும் என்ற கேள்வியும் எழுகிறது.இவற்றை இந்திய உயர்ஸ்தானிகரிடம் தெளிவுபடுத்தியுள்ளதாகவும் என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அதேபோல்,அடுத்த வருடமளவில் சர்வதேச நாடுகளிடம் இலங்கை பெற்றுக் கொண்டுள்ள கடன்களை மீள செலுத்தவேண்டிய சூழல் ஏற்படவுள்ளது. இந்நிலையில், உள்நாட்டில் எது வித அபிவிருத்தியுமின்றி வெளிநாட்டு கடன்களை மீள செலுத்துவதற்கு ஆரம்பித்தால், நிலைமைகள் மேலும் மோசமானதாக மாறக்கூடிய நிலைமைகளும் உள்ளன.

அந்த அடிப்படையில் பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர்தான் தற்போதைய ஆட்சியாளர்களுடைய உண்மையான நிலைமைகள் தெரிய வரும்.

பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு அறுதிப்பெரும்பான்மை பலம் கிடைக்கலாம். ஆனால், புதியதொரு அரசியல் சாசனத்தை கொண்டுவருவதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைக்குமா என்பதும் அவ்வாறு கிடைக்காவிட்டால் புதிய அரசியல் சாசனம் பற்றி பேசுவதில் அர்த்தமில்லை என்பதையும் இந்திய உயர்ஸ்தானிகரிடம் எடுத்துக் கூறியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான கட்சி ஆரம்பத்திலிருந்தே, சீன சார்பு கட்சியாகவே இருந்து வந்துள்ளது.

தற்போது அவர்களுடைய கொள்கைகளில் பல மாற்றங்கள் இருந்தாலும், எந்தளவுக்கு அவர்கள் இலங்கையின் விவகாரங்களில் அல்லது சர்வதேச சமூகத்துடனான உறவில் நிதானமாக செயற்படுவார்கள் என்ற கேள்வியும் எழுகிறது.

இலங்கையின் பொருளாதார நலனில், இந்தியா முன்னின்று அக்கறையுடன் செயற்பட்டிருக்கின்றது. அதில் குறிப்பாக பலாலி விமான நிலையத்தை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்வதில் இந்தியா அக்கறை காட்டி செயற்பட்டிருந்தது.

எனவே, பலாலி விமான நிலையத்தில் பெரிய விமானங்கள் வருவதனூடாக வடக்கு மாகாணத்தில் உல்லாசத்துறை வளர்ச்சியடைவதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன. எனவே அதற்கான நடவடிக்கைகளை செயற்படுத்த வேண்டும்.

## இணைந்து போட்டியிட...

இடம்பெற்ற வழக்கு ஒன்றின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.இதுபற்றி அவர் தெரிவித்ததாவது;

இலங்கை தமிழரசு கட்சி ஏற்கனவே தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்த கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் சின்னத்திலே போட்டியிட அழைத்துள்ளோம்.இந்த அழைப்பை பங்காளிக் கட்சிகள் ஏற்காவிடின் நாம்,தனித்துப் போட்டியிடுவோம்.

நியமனப் பத்திரம் தாக்கல் செய்வதற்கு இன்னும் சிறிது காலமே உள்ளது. இதனால், முடிவுகளை துரிதமாக தெரியப்படுத்துமாறு கோரியுள்ளோம்.

இணக்கம் ஏற்படாவிடின் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களை நாங்கள் தீர்மானிப்போம். எதிர்வரும் தேர்தலில் இளைஞர்கள்,யுவதிகள், ஆற்றல் உள்ளவர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும்.ஏற்கனவே தோல்வியடைந் தவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## பெற்றோல், டீசல் விலை குறைப்பு...

95 ரக ஒக்டேன் பெற்றோல் லீற்றரின் விலையில் மாற்றமில்லை, லங்கா வெள்ளை டீசல் லீற்றரின் விலை 24 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 283 ரூபாவாகும்.

லங்கா சுப்பர் டீசல் லீற்றரின் விலை 33 குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 319 ரூபாவாகும்.

மண்ணெண்ணெய் லீற்றரின் விலை 19 குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 183 ரூபாவாகும்.

## தேர்தல் காலங்களில் புதுப்புது...

புலிகள் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

தேர்தல் காலங்களில் தமிழர்களை குழப்பும் அரசியலையே, தமிழ் தேசிய கூட்டமைப்பு செய்கிறது.62 வருடங்களாக ஏமாற்று அரசியல் செய்யும் இவர்கள் தமிழர்களுக்கென்று எதையும் செய்யவில்லை.

ஏதாவது ஒரு கருப்பொருளை கொண்டு வந்து தமிழர்களை குழப்புவதே இவர்களின் தொழில். சர்வதேசம் பார்த்துக்கொண்டிருக்கிறது வாக்களியுங்கள் எனக் கூறுவார்கள்.

அம்பாறை மாவட்ட தமிழர்களின் இன்னல்களை இவர்கள் கண்டுகொள்வதே இல்லை

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு கணக்காளரை நியமித்துவிட்டதாக கூறினர். மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தியதைத் தவிர,

உருப்படியாக இவர்கள் எதையும் செய்யவில்லை.

பொதுத்தேர்தலில் சகலரும் ஒன்றாக போட்டியிடுவோம் என வேண்டுகோள் விடுத்துள்ளனர். வென்றெடுக்கப்படும் ஆசனத்தை யாருக்கு வழங்குவது என்பதை இவர்கள் கூற வேண்டும்.

அம்பாறை மாவட்ட மக்களை நடுத்தெருவில் விட்டவர்கள், மீண்டும் பொதுக்கட்டமைப்பில் சேருங்கள், ஒரே சின்னத்தில் போட்டியிடுவோம் எனக் கூறி எதை செய்யப்போகின்றார்கள்.

வீரமுனையில் ஒரு வளைவுகோபுரத்தை நிர்மாணிக்க முடியாதளவிலேயே, இவர்களின் பிரதிநிதித்தவம் இருந்திருக்கிறது.

## கைத்துப்பாக்கிகளை ஒப்படைக்க...

தனித்தனியாக அனுப்பப்பட்டுள்ளதாக மூத்த பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் இருந்த 225 உறுப்பினர்களில் நூற்றுக்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தனிப்பட்ட பாதுகாப்பிற்காக கைத்துப்பாக்கிகளை பெற்றிருந்ததாக புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

முன்னாள் எம்.பி.க்கள் தங்களது தனிப்பட்ட பாதுகாப்பிற்காக குறைந்தபட்சம் இரண்டு துப்பாக்கிகளை வைத்திருப்பதற்கு முன்னைய அரசாங்கம் அனுமதித்திருந்தது.

நாட்டில் நிலவும் வன்முறைகளை போக்குவதற்காக இரண்டு துப்பாக்கிகளை எம்.பி.க்கள் வைத்திருக்கும் புதிய கொள்கையை அமுல்படுத்த அரசாங்கம் தீர்மானித்ததாக முன்னாள் அமைச்சர் பந்துலகுணவர்தன தெரிவித்திருந்தார்.

## யாழ், கிளிநொச்சி பகுதிகளில்...

பொதுமக்கள் வாழும் இப்பகுதிகளில் இவ்வாறு மதுபானசாலைகள் திறக்கப்படுவதால், மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் அக்கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த பகுதியின் சில அரசியல்வாதிகளின் ஆதரவை பெறுவதற்காக, முன்னைய அரசாங்கம் மதுபான நிலையங்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளது என தெரிவித்துள்ள அவர், ஜனாதிபதி இதில் தலையிட்டு தேவையற்ற மதுபான நிலையங்களை மூடவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## விவசாயிகள், மீனவர்களுக்கான...

அநுரகுமார திசாநாயக்க தீர்மானமெடுத்திருந்தார். அந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதை தேர்தல்கள் ஆணைக்குழு எதிர்வரும் தேர்தல் முடிவடையும் வரை இடைநிறுத்தியுள்ளது.

பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இத்தகைய மானியங்கள் வழங்கப்படுமானால், ஏனைய வேட்பாளர்களுக்கு அதன் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்பை கவனத்திற் கொண்டு, இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு வின் தலைவர் ஆர். எம். ஏ. எல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதனால், ஜனாதிபதியின் மேற்படி இத்தீர்மானத்தை எதிர்வரும் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் நடைமுறைப்படுத்துமாறு, தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

## தங்கத்தின் விலைகளில்...

நிலவரங்கள் தெரிவிக்கின்றன. இதன்படி, 24 கரட் தங்கம் ஒரு பவுண் 2,10,000 ரூபாவாகவும், 22 கரட் தங்கம் ஒரு பவுண் 1,94,000 ரூபாவாகவும் காணப்படுவதாக அகில இலங்கை நகைகள் விற்பனையாளர் சங்கப் பொருளாளர் ஆர்.பாலசுப்ரமணியம் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் 24 கரட் தங்கம் ஒரு பவுண் 2,13,000 ரூபாவாகவும், 22 கரட் தங்கம் ஒரு பவுண் 1,96,750 ரூபாவாகவும் காணப்பட்டிருந்து.

இதேவளை, சர்வதேச சந்தையில் நேற்று ஒரு அவுண்ஸ் தங்கத்தின் விலை 2,657.33 அமெரிக்க டொலர்களாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## தரமற்ற ஊசி மருந்து...

வும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் மேலும் குற்றச்சாட்டுகளை முன் வைத்துள்ள அவர், நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் மருந்துகள் உரிய முறையில் முறைப்படி கொள்வனவு செய்யப்படுவதில்லை. முறையான ஒழுங்குபடுத்தல், ஆய்வுகூட பரிசோதனை மற்றும் உரிய பதிவுகள் இன்றியே மருந்துகள் நாட்டுக்கு கொண்டுவரப்படுகின்றன. சில அரசியல்வாதிகள் மற்றும் உயர் அதிகாரிகளினது பணிப்பின் பேரில், இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகளினால் அந்த மருந்துகளை பயன்படுத்தும் பொது மக்களின் பாதிப்புகளுக்கு, யார் பொறுப்புக் கூறுவது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன் அந்த மருந்துகளுக்காக செலவிடப்பட்டுள்ள பணத்துக்கு யார் பொறுப்புக் கூறுவது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். இந்த குற்றச்சாட்டுக்களை உள்ளடக்கிய முறைப்பாட்டை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பரீட்சையை மீண்டும்...

இலங்கை பரீட்சை திணைக்களத்திற்கு முன்பாக நேற்று (30) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சை மீண்டும் நடத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

புதிய அரசாங்கம் பொறுப்பேற்றதன் பின்னர் முன்னெடுக்கப்படும் முதல் போராட்டம் இது ஆகும். இந்நிலையில், அப்பகுதியில் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

முன்னதாக, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் போது முன்கூட்டியே பகிரப்பட்டதாகக் கூறப்படும் வினாத்தாளில், சம்பந்தப்பட்ட மூன்று கேள்விகளுக்கு மாத்திரம், அனைத்து மாணவர்களுக்கும் முழு மதிப்பெண் வழங்க நிபுணர் குழுவின் பரிந்துரையின் படி, முடிவு எடுக்கப்பட்டது.

பரீட்சையை மீண்டும் நடத்துவது பத்து வயதேயான பிள்ளைகளின் மன நிலையில், பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

# இன்றைய பலன்கள்

(01.10.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வேண்டிய உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு உண்டு.

**ரிஷபம் :**
வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு தலைமை பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்:**
பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய திருப்பங்கள் ஏற்படும். வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு போராட்டமான காலகட்டம் இது.

**கடகம்:**
நேரத்தில் வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் பாராட்டை பெறுவர்.

**சிம்மம்:**
பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு பொறுப்புக்கள் மாற்றப்படலாம். வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்தபடி லாபம் வந்து சேரும்.

**கன்னி:**
பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு இருந்த போட்டிகள் விலகும்.

**துலாம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு தற்காலிக பணி நிரந்தர பணியாக மாறுவதில் குறுக்கீடுகள் வரலாம்.

**விருச்சிகம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்கள் அதிகாரத்தை பெறுவர், கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்து மகிழ்விக்கும்.

**தனுசு:**
பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு புதிய பங்குதாரர்கள் வந்து இணைவர்.

**மகரம்:**
பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு மேல் இடத்திலிருந்து நிர்ப்பந்தம் அதிகரிக்கும். வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு புதிய கூட்டாளிகள் வந்து இணைவர்.

**கும்பம்:**
வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்த இலக்கை அடைய வழி பிறக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகள் நுணுக்கங்களை கற்றுக் கொடுப்பார்.

**மீனம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு விருப்பமான வகையில் பணியிட மாற்றம் அமையாது. கலைஞர்களுக்கு நண்பர்களின் மூலம் நல்ல தகவல் கிடைக்கும்.

## சிறுவர், முதியவர்களுக்கான... (02 ஆம் பக்க தொடர்ச்சி)

பரிவு, பராமரிப்பு, அன்பு மற்றும் மகிழ்ச்சி நிறைந்த சூழலில் வளர வேண்டியவர்கள் சிறுவர்கள்.ஆரோக்கியமற்ற போட்டியின் அழுத்தத்தின் கீழ் அல்ல. கனிவு, புரிதல் மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றை வளர்ப்பதன் மூலம், நியாயமான மற்றும் சமமான எதிர்காலத்தை கட்டியெழுப்பும் திறன்கொண்ட ஒரு தலைமுறையை நாம் உருவாக்க முடியும்.

சிறுவர்கள் பற்றிய ஒவ்வொரு தீர்மானத்திலும் அவர்களின் சிறந்த நலன்கள் எப்போதும் எங்கள் முதன்மையான முன்னுரிமையாக இருக்கும்.

முதியோர் தினத்தை நாம் கொண்டாடுகிறோம் என்ற வகையில், நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு பெரும் பங்காற்றியவர்களை நாம் கௌரவிக்கிறோம். 2024 முதியோர் தின கருப்பொருளான "கண்ணியத்துடன் முதுமை" என்பதே. உலகளவில் முதியோர்களுக்கான பராமரிப்பு மற்றும் ஆதரவு முறைமைகளை பலப்படுத்துவதன் முக்கியத்துவம்," என்பது முதியோர்களுக்கான சமூகப் பாதுகாப்பையும் அரவணைப்பையும் மேம்படுத்துவதற்கான எங்கள் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது.

முதியோர்களுக்கான, குறிப்பாக தொழிற் படைக்கு பங்களிப்பதில் தங்கள் வாழ்நாளை செலவிட்டவர்களுக்கான ஓய்வூதிய நன்மைகளை மேம்படுத்துவதற்கும், சுகாதாரப் பராமரிப்பிற்கான இலவச மற்றும் சமமான வாய்ப்பினை உறுதி செய்வதற்கும் எங்கள் அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது.

## மானியம் என்ற மனநிலை.. (02 ஆம் பக்க தொடர்ச்சி)

மானியங்கள் வழங்குவது அதன் அம்சங்களில் ஒன்றாகும். விவசாயத்தில் ஈடுபட்டுள்ள அனைவரும் மானிய மனப்பான்மையிலிருந்து விடுபட முயற்சிக்க வேண்டும். அரசாங்கம் இதில் அக்கறை காட்ட வேண்டும்.

மானியங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்பதல்ல. அறிவும் முதலீட்டுத் திறனும் கொண்ட ஒரு பிரிவினர் விவசாயிகள் மத்தியில் இருந்து உருவாக்கப்பட வேண்டும். அதன் மூலம், எதிர்காலத்தில் முழு முதன்மை தயாரிப்புகளையும் சரியாக உருவாக்கவும், மேம்படுத்தவும் முடியும்.

இதற்காக நீண்ட கால வேலைத் திட்டம் தேவைப்பட்டாலும் தற்போதைய பொருளாதார சூழலில் விவசாயிகளுக்கு ஓரளவு மானியம் வழங்குவது நியாயமான விடயம் என்பதை சுட்டிக்காட்டலாம். ஆனால் ஒட்டுமொத்த விவசாய மக்களுக்கும் மானியம் வழங்கக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## முடிவில் எவ்வித...

சர்ச்சைக்குள்ளான குறித்த மூன்று கேள்விகளுக்கும் முழுமையான புள்ளிகளை வழங்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானமானது, நிபுணர் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தென்னிலங்கையிலும் ஈ.பி.டி.பி...

தெரிவித்துள்ளார். இதன்போது உரையாற்றிய முன்னாள் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா,இம்முறை தேர்தலில் வெற்றிபெற்று நிச்சயம் பாராளுமன்றம் செல்வேன் என்றார்.

தேர்தலின் பின்னர் ஆட்சியில் இருப்பவர்களுடன் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி எனும் கட்சியின் கொள்கையின்படி, இணைந்து செயற்பட உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## லெபனான், சிரியாவில்...

அவசர தொலைபேசி எண்கள்:

0094 771102510 திரு. சனத் பாலசூரிய;

0094 718381581 செல்வி பிரியங்கி திசாநாயக்க;

00961 81485809, திரு. ஃபஹத் ஹவ்வா மற்றும் டமாஸ்கஸில் உள்ள இலங்கையின் கௌரவ தூதர், டாக்டர். அல் ட்ரூபி மற்றும் ; மின்னஞ்சல் ஐடி: mmd@aldroubi.com தொலைபேசி: 00963 944499666, 00963 933858803 தொடர்பு கொள்ள முடியும் என்று வெளியுறவு அமைச்சு நேற்று அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது.

# கடல்வளத்தை பேணி, மீனவரை பாதுகாக்க நடவடிக்கை அவசியம்

## வடக்கிலிருந்து ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

**ஓமந்தை விஷேட நிருபர்**

இலஞ்சம், ஊழல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருவதைப்போன்று, எம் மீனவர்களையும், கடலையும் பாதுகாக்க, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனம் மற்றும் வடமாகாண கூட்டுறவு சங்கத்தின் உப தலைவர் வி. அருள்நாதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று (30) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இதனை தெரிவித்த அவர்,

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, நாட்டை சிறப்பாக முன்னோக்கிக் கொண்டுசெல்ல, முல்லைத்தீவு மீனவ மக்கள் சார்பாக வாழ்த்துகிறோம். அதே சமயம் கடற்றொழில் அமைச்சராக செயற்படும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் நாம் சில கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்.



இந்தியன் இழுவைப டகுகள், சட்டவிரோத மீன்பிடி தொழில்கள், அங்கீகரிக்கப்படாத தொழில்கள் என்பன எமது கடற்பகுதிக்குள் செயற்படுத்தப்படுகின்றன. இரவுப் பகுதிகளில் சுருக்குவலை, டைனமிற் பயன்படுத்தபடுகின்றது. இதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. எனவே, இலஞ்சம், ஊழல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருவதைப்போன்று எம் மீனவர்களையும், கடலையும் பாதுகாக்க ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் சட்டத்துக்குட்பட்ட தொழிலை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இன்றும் கடலில் சட்டவிரோத சுருக்குவலை அதிகமாக பயன்படுத்தப்படுகின்றது.

இது தொடர்பாக ஜனாதிபதி அதிக கவனம் செலுத்த வேண்டுமென நாம் கோரிக்கை முன்வைக்கின்றோம். எமக்கு சிறந்த ஜனாதிபதி ஒருவர் கிடைத்திருக்கிறார். எமது பிரச்சினைகளை அவர் தீர்ப்பார் என தாம் நம்புவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழில் நடமாடும் சேவை

சிறுவர் தினத்தை முன்னிட்டு இதுவரை பிறப்புச் சான்றிதழை பதிவு செய்யாத சிறுவர்களுக்கான நடமாடும் சேவை, யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

அதன்படி, யாழ்.மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று(01) காலை 09.00 மணி முதல் பிற்பகல் 04.00 மணி வரை இந்தச் சேவை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, சிறுவர்களுக்கான பிறப்புச் சான்றிதழை பதிவு செய்வதற்காக உரிய ஆவணங்களுடன் வருகை தந்து பிறப்புச் சான்றிதழை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கின் உதயம்

# கப் ரக வாகனம் – வான் எதிரெதிரே மோதி விபத்து

**யாழ் . விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் வான் ஒன்றும் கப் ரக வாகனமொன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இரு வாகனங்களும் பலத்த சேதங்களுக்குள்ளாகியுள்ளன.

அத்துடன், வாகனத்தில் இருந்தவர்களும் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து யாழ்ப்பாணம் கண்டி நெடுஞ்சாலையில், கொடிகாமம் புத்தூர் சந்தியில் நேற்று முன்தினம் (29) இடம்பெற்றுள்ளது. விபத்து தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட கொடிகாம பொலிஸார், கப் ரக வாகன சாரதியை கைதுசெய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.



# முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் GCE O/L இல் 57 மாணவர்கள் சித்தி



**ஓமந்தை விஷேட நிருபர்**

முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றியவர்களில் 57 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக பாடசாலையின் அதிபர் கனகையா மதியழகன் தெரிவித்தார். முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டிருக்கும் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் இவ்வருடம் 107 மாணவர்கள் க.பொ.த சாதரண தர பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

அதில் ஒரு மாணவர் 9A சித்திகளையும், மூன்று மாணவர்கள் 8A, B சித்திகளையும், பெற்றதோடு ஏனைய 53 மாணவர்கள் உயர் தரத்துக்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தற்கொலைக்கு முயன்ற பெண்; காப்பாற்றிய பொலிஸ் சார்ஜன்ட்

**(மன்னார் குறூப் நிருபர் )**

மன்னாரில் தற்கொலைக்கு முயன்ற 24 வயதுடைய யுவதியொருவரை மன்னார் போக்குவரத்து பிரிவின் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் காப்பாற்றியுள்ளார்.

நேற்று முன்தினம் (29) மன்னார் பிரதான பாலத்துக்கருகிலுள்ள அலுவலகத்தில் மலலசேகர என்ற பொலிஸ் சார்ஜன்ட் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, இந்த யுவதி கடிதமொன்றுடன் அவரை நோக்கிச் சென்றுள்ளார்.

பின்னர், அந்த பொலிஸ் சார்ஜனிடம் உங்களுக்கு தமிழ் தெரியுமா? என கேட்க, அதற்கு சார்ஜன்ட் நீங்கள் யார் என தமிழில் கேட்டவுடன், அப் பெண், தன் கையில் இருந்த கடிதம் மற்றும் கையடக்கத் தொலைபேசியை அவரின் மேசையில் வைத்துவிட்டு மன்னார் பாலம் நோக்கி ஓடியுள்ளார்.

சம்பவத்தை அவதானித்த பொலிஸ் சார்ஜன்ட், இந்த யுவதி தற்கொலை முயற்சிசெய்வதை அறிந்து, அவரை பின்தொடர்ந்து ஓடி, பாலத்தின் பாதுகாப்பு சுவரில் ஏறி கடலில் குதிக்க தயாரான யுவதியின் காலை இழுத்து காப்பாற்றியுள்ளார். இவ்வாறு காப்பாற்றப்பட்ட யுவதி மன்னார் பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தலில் பெண்களுக்கு 50 சதவீத ஆசன ஒதுக்கீடு தேவை

பாராளுமன்ற தேர்தலில் பெண்களுக்கு ஆசன ஒதுக்கீடு சரிசமமாக பகிரப்பட வேண்டும் என தமிழ் தேசியம் சார்ந்து, வடக்கு, கிழக்கில் இயங்கும் அரசியல் கட்சிகளின் பெண்கள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.யாழிலுள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று முன்தினம் (29) இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே பெண்கள் குழு கூட்டாக இதனை அறிவித்தது.



## க.பொ.த சாதாரண தர பரீட்சையில்

# யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறப்பான பெறுபேறுகள்

**யாழ் . விசேட நிருபர்**

2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் 114 மாணவிகள் 09 பாடங்களிலும் A தர சித்தி பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 52 மாணவர்கள் 9 பாடங்களிலும் A சித்தி பெற்றுள்ளதுடன் அவர்களில் தமிழ் மொழி மூலம் 28 மாணவர்களும், ஆங்கில மொழி மூலம் 24 மாணவர்களும் இவ்வாறு 'A' சித்தி பெற்றுள்ளனர். அத்துடன் 62 மாணவர்கள் 8 பாடங்களில் A சித்தி பெற்றுள்ளனர். இதேவேளை, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 32 மாணவர்கள் 9 பாடங்களிலும் A சித்தி பெற்றுள்ளனர்.தமிழ் மொழி மூலம் 17 மாணவர்களும், ஆங்கில மொழி மூலம் 15 மாணவர்களும் இவ்வாறு 'A' சித்தி பெற்றுள்ளனர். இப்பாடசாலையில் 28 மாணவர்கள் 8 பாடங்களில் A சித்தி பெற்றுள்ளனர். பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 26 மாணவிகள் 9 பாடங்களிலும் A சித்தி பெற்றுள்ளதுடன், 19 மாணவிகள் 8 பாடங்களில் A சித்தியடைந்துள்ளனர். இதேவேளை, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 32 மாணவர்கள் 09 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர்.

இவர்களில், தமிழ் மொழி மூலம் 17 மாணவர்களும், ஆங்கில மொழி மூலம் 15 மாணவர்களும் ஏ சித்தி பெற்றுள்ளதுடன் 28 மாணவர்கள் 8 பாடங்களில் ஏ சித்தி பெற்றுள்ளனர்.இதேவேளை, தெல்லிப்பழை மகாஜன கல்லூரியில் 08 மாணவர்களும், யாழ். இந்து மகளிர் கல்லூரியில் 17 மாணவிகளும், யாழ். மத்திய கல்லூரியில் 02 மாணவர்களும், உடுவில் மகளிர் கல்லூரியில் 05 மாணவிகளும் 9A தர சித்தி பெற்றுள்ளனர்.

**க.பொ.த சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகள் 2023**
**யாழ்ப்பாண மாவட்டம்**

| பாடசாலை | 9ஏ சித்தி | 8ஏ சித்தி |
|---|---|---|
| யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி | 114 மாணவிகள் | |
| யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி | 52 மாணவர்கள் | 62 மாணவர்கள் |
| பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி | 32 மாணவர்கள் | 28 மாணவர்கள் |
| பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை | 26 மாணவிகள் | 19 மாணவிகள் |
| யாழ். இந்து மகளிர் கல்லூரி | 17 மாணவிகள் | |
| தெல்லிப்பழை மகாஜன கல்லூரி | 8 மாணவர்கள் | |
| உடுவில் மகளிர் கல்லூரி | 5 மாணவிகள் | |

# இலங்கையை புதிய அணுகுமுறையினூடாக வளர்ச்சியடைந்த நாடாக மாற்ற வேண்டும்

## மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் சரத் அபேகோன்

**(அக்குறணை குறூப் நிருபர்)**



நேரத்துக்கு தமது கடமைகளைச் செய்யும் நாடுகளே இன்று வளர்ச்சியடைந்த நாடுகளாக மாறியுள்ளதாகவும், நாமும் அவ்வாறே மாறவேண்டும் எனவும் மத்திய மாகாணத்தின் புதிய ஆளுநர் பேராசிரியர் சரத் அபேகோன் தெரிவித்தார்.

கண்டியில் அமைந்துள்ள மத்திய மாகாண ஆளுநர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் (29) தமது கடமைகளைப் பொறுப்பேற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

"வளர்ச்சியடைந்த நாடாக இலங்கையை மாற்றியமைக்க நாம் இந்த புதிய அணுகுமுறையை மத்திய மாகாணத்திலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். ஏனைய மாகாணங்களுக்கு முன்னுதாரணமாக திகழ வேண்டும்.

பௌதீக ரீதியான வளர்ச்சியுடன் மட்டுமல்லாது கலாசார பண்பாட்டு ரீதியிலும் நாம் வளர்ச்சியடைய வேண்டும். கடந்த ஏழு தசாப்த காலமாக நாம் பௌதீக ரீதியில் வளர்ச்சியடைந்தபோதும் பண்பாட்டு ரீதியில் வளர்ச்சியடையவில்லை என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு உண்மையாகும். நாட்டின் சட்டம், அமைதி, அரசியல் அமைப்பு என்பவற்றை பாதுகாப்பது எமது அடிப்படை அம்சமாகும்.

களவு, ஊழல், மோசடி, வீண் விரயம் என்பவற்றை இல்லாதொழிக்க வேண்டும். எனவே, அதற்காக தியாகத்துடன் பணியாற்ற உள்ளேன். பல்கலைக்கழகங்களுக்கு ஐந்து சதவீதத்தினர் மட்டுமே உள்வாங்கப்படுகின்றனர்.

ஆனால் பல்கலைக்கழகத்தைக் கூட கண்ணால் காணாதவர்கள் பல தலைமுறையாக பல்கலைக்கழக செலவினங்களுக்காக வரி செலுத்துகின்றனர். சகலரும் சகல உரிமைகளையும் அனுபவிக்கும் நிலை ஏற்பட வேண்டும். அதற்காக சகலரும் தம்மைத் தாமே அர்ப்பணிக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆறுகளை இடைமறித்து இரத்தினக்கல் அகழ்வு

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

இரத்தினபுரி பிரதேசத்தின் ஹங்கமுவ ஆற்றில், புல்டோசர் இயந்திரங்கள் மற்றும் கனரக உபகரணங்களை பயன்படுத்தி இரவு பகலாக இரத்தினக்கல் அகழ்வு இடம்பெற்றுவருவதாக பிரதேச மக்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனால், சுற்றாடல் மாசடைந்துள்ளதுடன் அண்மித்த வீடுகளும் பாதிப்படைந்துள்ளதாக பிரதேச மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். இந்த இரத்தினக்கல் அகழ்வால் தமக்கான குடிநீர் மற்றும் ஏனைய நீர்த்தேவைகளைக்கூட பூர்த்தி செய்துக்கொள்ள முடியாதுள்ளதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டினர்.

இதுதொடர்பாக அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடளித்தும் எவ்வித பயனும் இல்லை எனவும் இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபடும் குழுவினரால் தமக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் இப்பிரதேச மக்கள் மேலும்தெரிவித்தனர்.


## விலைகோரல் அறிவித்தல்

எஹெலியகொடை பிரதேச சபைக்கு சொந்தமான கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் வியாபார நோக்கிற்காக 2025.01.01 ஆம் திகதி முதல் 2025.12.31 ஆம் திகதி வரையான காலத்திற்கு வாடகைக்கு விடப்படுவது தொடர்பாக முத்திரையிடப்பட்ட விலைகோரல்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. விலைகோரல் பத்திரங்கள் விநியோகித்தல் - 2024.10.01ஆம் திகதி முதல் 2024.10.24 ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை
2. விலைகோரல் பத்திரங்கள் மீளப்பெறல் - 2024.10.15 மு.ப. 10.00 மணி வரை
3. விலைகோரல் பத்திரங்கள் திறத்தல் - 2024.10.15 மு.ப. 10.30 மணிக்கு

கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களுக்காக ஆகக் குறைந்த விலைகோரல் தொகையை விட கூடிய பெறுமதியிலான விலைகோரல் தொகை ஒன்று முன்வைக்கப்படல் வேண்டும். கேல்விதாரர் ஒருவருக்கு வியாபார நிலையம் ஒன்றிற்கு விலைகோரல் தொகை ஒன்று மாத்திரம் முன்வைக்க முடியும். அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலைகோரல் வைப்புத் தொகை, விலைகோரல் பத்திர கட்டணம் என்பன பணம் மூலம் செலுத்தியதன் பின்னர் விண்ணப்பப்படிவம் ஒன்றை பெற்றுக்கொள்ள முடியும்.

விலைகோரல் பத்திரத்தின் மூலப்பிரதி மற்றும் ஏனைய பிரதிகள் வேறுவேறாக குறிப்பிடப்பட்டு 2024.10.15 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் "தலைவர், செயலாளர் விலைகோரல் கமிட்டி, எஹெலியகொடை பிரதேச சபை" என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைகோரல் பெட்டியில் இட முடியும். விலைகோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படல் அல்லது நிராகரிக்கப்படல் தொடர்பாக எஹெலியகொடை பிரதேச சபையின் விலேகோரல் கமிட்டியின் முடிவே இறுதி முடிவாகும்.

மேலதிக தகவல்கள் வார நாட்களில் அலுவலக நேரங்களில் எஹெலியகொடை பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேற்கூறிய அட்டவணை

| தொ இல. | இடம் | ஆகக் குறைந்த விலைக்கோரல் தொகை (ரூ.ச.) | விலைக்கோரல் பத்திர கட்டணம் (ரூ.ச.) | விலைக்கோரல் பிணை கட்டணம் (ரூ.ச.) |
|---|---|---|---|---|
| 1 | எஹெலியகொடை வாரச் சந்தை மற்றும் நடைபாதை கட்டணங்கள் அறவிடுதல் | 2,000,000.00 | 5,000.00 | 10,000.00 |
| 2 | கெட்டஹெத்த வாரச் சந்தை | 402,000.00 | 3,000.00 | 10,000.00 |
| 3 | தம்முல்ல வார சந்தை | 84,000.00 | 3,000.00 | 10,000.00 |
| 4 | எஹெலியகொடை மாட்டிறைச்சிக் கடை | 4,726,100,00 | 10,000.00 | 20,000.00 |
| 5 | எஹெலியகொடை ஆட்டிறைச்சி மற்றும் கோழியிறைச்சிக் கடை | 2,520,500.00 | 10,000.00 | 20,000.00 |
| 6 | தம்முல்ல மாட்டிறைச்சி கடை | 84,000.00 | 3,000.00 | 10,000.00 |
| 7 | மின்னான நிமானி ஹோட்டல் முன்னால் உள்ள கட்டிடம் | 270,000.00 | 5,000.00 | 10,000.00 |
| 8 | டீப் கோனர் நிறுவனத்திற்கு அருகில் (வார சந்தைக்கு முன்னால்) உள்ள இடம் | 256,200.00 | 5,000.00 | 10,000.00 |
| 9 | கொஹிலதெனிய திண்ம கழிவு நிலையத்தின் கட்டிடங்கள் அற்ற நிலம் | 36,000.00 | 5,000.00 | 10,000.00 |

**ரீ.ஆர்.சீ.கே. குணசேகர**
**செயலாளர் மற்றும் அதிகாரங்கள்**
**செயற்பாடுகள் நிறைவேற்றுகின்ற அதிகாரி**
**தலைவர் விலைகோரல் கமிட்டி**
**எஹெலியகொடை பிரதேச சபை**

**2024.10.01ஆம் திகதி**

**எஹெலியகொடை பிரதேச சபையில்**
**தொ.இல. 036-2258012, 036-2258014**



**வரையறுக்கப்பட்ட அரச சேவை கூட்டுறவு கடன் வழங்கல் மற்றும் சேமிப்பு சங்கம் 2024.10.10 ஆம் திகதி மு.ப. 9.30க்கு நடத்தும் விசேட பொதுக் குழுக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்**

- உறுப்பினர் வருகை மற்றும் பதிவு
- சமய பிரார்த்தனை
- சம்பிரதாயமான மங்கள விளக்கேற்றல்
- மரணித்த உறுப்பினர்கள் மற்றும் இராணுவத்தினரை நினைவூட்டல்
- கூட்டுறவு கீதத்தை இசைத்தல்
- தலைவர் அவர்கள் சபையை வரவேற்றல்
- கூட்டத்திற்கான அழைப்பை முன்வைத்தல்
- 2023.08.05 ஆம் திகதி பொதுக் குழுக் கூட்ட அறிக்கையை முன்வைத்தல்
- 2023.03.11 ஆம் திகதி வாக்கெடுப்பில் தேர்வு செய்யப்பட்ட தலைவர் சுகத் பீ போவல மற்றும் பணிப்பாளர் டபிள்யூ.எச். ஜயராஜ் அபேவிக்ரம ஆகிய இருவரும் 2023.09.13 ஆம் திகதி அரச பணியில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்றதால் ஏற்பட்ட வெற்றிடத்திற்காக 2023.09.12 ஆம் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் பணிப்பாளர்களின் நியமனங்களுக்கு ஒப்புதலைப் பெறுதல்.

  **தலைவர் - ஆர்.எம்.பீ.எஸ். ரத்னாயக்க அவர்கள்**
  **பணிப்பாளர் - ஆர்.ஏ.எஸ். ரங்கஜீவ ரணசிங்க அவர்கள்**
  **பணிப்பாளர் - ஸ்ரீனாத் ராஜகருணா அவர்கள்**
- 2025 ஆம் ஆண்டு அபிவிருத்தித் திட்டம், வரவு - செலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் வெளிக் கடன் எல்லைக்கு ஒப்புதலைப் பெறுதல்.
- 15,17,31 மற்றும் 26 ஆம் இலக்க இடைக்கால யாப்பு தொடர்பான திருத்தங்களுக்கு ஒப்புதலைப் பெறுதல்.
- புதிய குழு உத்தரவுக் கோவைக்கு ஒப்புதலைப் பெறுதல்.
- புதிய உறுப்பினர்களை அங்கீகரித்தல்.
- 2018 தொடக்கம் 2021 வரை 4 வருட கணக்காய்வு அறிக்கையை முன்வைத்தல். இதன்படி இந்த ஆண்டுகளின் இலாப ஒதுக்கீட்டுக்கு ஒப்புதலைப் பெறுதல்.

  பங்கு இலாபம் 10%
  ஊழியர் ஊக்கக் கொடுப்பனவு
  கட்டிட நிதியம் 10%
  நலன்புரி கொடுப்பனவு 10%
  பரஸ்பர உதவி நிதியம் 10%
- வேறு முன்மொழிவுகள்
- செயலாளரின் நன்றி உரை
- நிறைவு

**நடக்கும் இடம்: பியகம, P.T. கார்டன்ஸ் ஹோட்டல்**
**அன்றைய தினத்தில் வருகை தரும்போது தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் மற்றும் பற்றுவரவேட்டை அவசியம் எடுத்து வரும்படி அறியத்தருகிறோம்.**

**டபிள்யூ.டீ. அபேவர்தன**
**செயலாளர்**
**வரையறுக்கப்பட்ட அரச சேவை கூட்டுறவு கடன் வழங்கல் மற்றும் சேமிப்பு சங்கம்**
**இலக்கம் 19, சோன்டர்ஸ் பிளேஸ், கொழும்பு 12.**
**தொலைபேசி இலக்கம் - 0112327640/ 0112327643**



ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிறு 2024.09.29
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5610 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 30,570,580.00
ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 6 3 9 4 8 2

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 185 — ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 9 4 8 2

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3852 — சீட்டிழுப்பு திகதி 2024.09.29 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,758,122.36
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 02 18 39 67 — விசேட எழுத்து F — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 85774

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1958 — 2024.09.29 — 87275 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 447,651,138.00
ஆங்கில எழுத்து S — சுப்பர் இலக்கம் 23 — வெற்றி இலக்கங்கள் 08 18 30 37
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.09.29 — சீட்டிழுப்பு இலக்கம் 436
ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 9 7 0 9 5 4
L7 எழுத்து Z — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 20,547,693.36

ராசி சுப பலன் — திகதி 2024.09.29 — சீட்டிழுப்பு இலக்கம் 919 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,374,322.80
வெற்றி இலக்கினம் கடகம் — வெற்றி இலக்கங்கள் 10 36 52 58 — தனயோக இலக்கம் 53660 — நாளுக்கான விதி எண் 06

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1640 — 2024.09.29 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 81,587,257.28
ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 24 30 32 54 — விசேட எழுத்து P — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 73456

# பொறாமை என்கின்ற பொல்லாத தீ உரியவரையே பூண்டோடு அழிக்கும்

மகிழ்வாரோடு மகிழுங்கள். அழுவாரோடு அழுங்கள் " (உரோமையர் 12:15). திருத்தூதர் பவுல் சுட்டிக்காட்டும் கிறிஸ்தவ நெறி இது.

மகிழ்வாரோடு மகிழ முடிகிறதோ இல்லையோ, பொறாமைப்படாமல் இருந்தாலே போதும் என்று சொல்லத் தோன்றுகிறது. அக்பர் தன் அமைச்சரைப் பார்த்துக் கேட்டாராம்: “என் உடலெங்கும் முடியிருக்க என் உள்ளங்கையில் மட்டும் முடி இல்லையே, அது ஏன்?” “தாங்கள் வாரி வாரி வழங்குவதால் தேய்ந்து உதிர்ந்து விட்டது” என்றார் அமைச்சர்.

“மக்களிடம்?” என்று மன்னர் கேட்க, “அவர்கள் வாங்கி வாங்கிப் பழகி அந்த நிலை ஏற்பட்டுவிட்டது” என்றிருக்கிறார் அமைச்சர். “அதுசரி, துறவிகள் கொள்வதும் இல்லை கொடுப்பதும் இல்லை. அப்படியானால் ஏன் அவர்கள் உள்ளங்கைகளிலும் முடி இல்லை?" என்று தொடர்ந்து கேட்க, அமைச்சர் சொன்னாராம் “பொறாமையால் கைகளைப் பிசைந்து பிசைந்து” என்று.

சமயங்களிடையே இன்று தென்படும், பிளவுகள் பிணக்குகள் அனைத்தையும் உற்று நோக்கும்போது, நினைவுக்கு வருகின்ற கதை இது.

சமயப் பொறாமை இறைவனுக்குச் சேவை செய்வதுபோல நடிக்கத் தூண்டும்.

இந்த ஞாயிறு முதல் வாசகத்தில் இஸ்ரயேல் மக்களை வழிநடத்த மூப்பரில் எழுபது பேரை மோசே தேர்ந்தெடுத்து ஆண்டவரின் கூடாரத்தின் முன் நிறுத்தினார். ஆனால் அவர்களில் இருவர் கூடாரத்துக்கு வராமல் தாங்கள் இருந்த இடத்திலேயே தங்கி விட்டனர். அவர்கள் மீது இறைவனின் ஆவியார் இறங்கி அவர்களும் இறைவாக்குரைப்பதைக் கேட்ட யோசுவா, “மோசே, என் தலைவரே, அவர்களைத் தடுத்து நிறுத்தும்” என்று சொல்ல மோசே, “என்னை முன்னிட்டு நீ பொறாமைப் படுகிறாயா? ஆண்டவரின் மக்கள் அனைவருமே இறைவாக்கினர் ஆகும்படி ஆண்டவர் அவர்களுக்குத் தம் ஆவியை அளிப்பது எத்துணை சிறப்பு” என்றார் (எண் 11: 2829).

நற்செய்தியிலும் இயேசுவின் சீடர் குழுவைச் சாராத ஒருவர் இயேசுவின் பெயரால் பேயோட்டுவதைக் கண்ட சீடர்கள் அவரைத் தடுக்கப்பார்த்தனர். இயேசுவோ, “தடுக்க வேண்டாம்... ஏனெனில் நமக்கு எதிராக இராதவர், நம் சார்பாக இருக்கிறார்” (மாற்கு. 9:3940) என்றார்.இறைவனுடைய ஆவியையும் ஆற்றலையும் கட்டுப்படுத்த நாம் யார்? ஆவியாரின் செயல்பாட்டுக்கு, அருள் பொழிவுக்கு மனிதன் வரையரை செய்வதா? முட்டுக் கட்டை போடுவதா? சூரியனைச் சொந்தம் கொண்டாட அது தனியுடைமை அல்ல! ஆவியார் உடலில் உள்ள கண் போல. அது உடலுக்குச் சொந்தம், உடலும் அதற்குச் சொந்தம். அதற்காக உடலுக்குள் மட்டுமல்ல உடலுக்கு அப்பாலும், வெளியிலும் செயல்பட முடியும்.

கடவுள் பரந்த மனமுள்ளவர். பெருந்தன்மையானவர்! அதன் முன்னால் நாம் குன்றி, கூனி, குறுகிப் போய் நிற்கிறோம். இனம், மதம், சாதி, சமயம் எனக் குறுகிய வட்டங்களை அமைத்துக் கொண்டு அவற்றுள் கிடந்து புழுங்கிக் கொண்டிருக்கிறோம்.

ஒரு சமயத்தின் மேன்மை அந்தச் சமயத்தில் அல்ல. அந்தச் சமயத்தைச் சார்ந்தவர்களின் வாழ்க்கை முறையில் மட்டுமே!

இந்த பின்னணியில் 1883 செப்டம்பர் 15இல் “நாம் ஏன் ஒத்துப்போவதில்லை?” என்ற தலைப்பில் விவேகானந்தரின் “சிக்காக்கோ சொற்பொழிவுகள்” என்ற நூலிலிருந்து ஒரு மேற்கோள்:



ஒரு கிணற்றில் தவளை ஒன்று நீண்டகாலமாக வாழ்ந்து வந்தது. ஒரு நாள் கடல்தவளை ஒன்று அங்கு வந்து அந்தக் கிணற்றில் விழுந்து விட்டது. “நீ எங்கிருந்து வருகிறாய்?” கேட்டது கிணற்றுத் தவளை. “கடலிலிருந்து”. “கடலா? அது எவ்வளவு பெரியது? எனது கிணற்றளவு இருக்குமா?” என்று கேட்டு ஒரு பக்கத்திலிருந்து எதிர்ப் பக்கத்துக்குத் தாவிக் குதித்தது கிணற்றுத் தவளை.

“நண்பா இந்தச் சின்னக் கிணற்றோடு எப்படிக் கடலை ஒப்பிட முடியும்?” என்றது கடல் தவளை. கிணற்றுத் தவளை மறுபடியும் ஒரு குதி குதித்து “உனது கடல் இவ்வளவு பெரிதாய் இருக்குமா?” என்று கேட்டது. “சேச்சே, என்ன முட்டாள்தனம், கடலை இக்கிணற்றோடு ஒப்பிடுவதா?” சர்ச்சையை முடித்துக் கொண்டது கடல் தவளை. “நீ என்ன சொன்னாலும் சரி, என் கிணற்றைவிட எதுவும் பெரிதாக இருக்க முடியாது. இவன் பொய்யன். இவனை வெளியே விரட்டுங்கள் என்று கத்தியது”. கிணற்றுத் தவளை...

காலம் காலமாக இருந்து வரும் தொல்லை

**அருட்பணி லூர்து ராஜ்**

இதுதான். நான் இந்து. நான் என் சிறிய கிணற்றுக்குள் இருந்து கொண்டு என் சிறு கிணறுதான் முழு உலகம் என்று நினைக்கிறேன். இவ்வாறே கிறிஸ்வர், முஸ்லிம்கள். எல்லா மத்தவரும் நினைக்கின்றனர்.

சமய சகிப்புக்கூட கிறிஸ்தவப் பண்பு அல்ல என்று கருதும் கத்தோலிக்கத் திருச்சபை சமயங்களைப் புரிந்து கொள்ளுதல் ஏற்றுக்கொள்ளுதல் என்ற அடிப்படையில் வலியுறுத்தும் கருத்துக்கள், வெளிப்படுத்தும் உணர்வுகள் வேறு எந்தச் சமயச் சிந்தனைக்கும் குறைந்தது அல்ல என்பதுதானே எதார்த்தம்! “உண்மையானவை எவையோ, கண்ணியமானவை எவையோ, நேர்மையானவை எவையோ, தூய்மையானவை எவையோ, விரும்பத்தக்கவை எவையோ, பாராட்டுதற்குரியவை எவையோ, நற்பண்புடையவை எவையோ போற்றுதற்குரியவை எவையோ...” (பிலிப். 4:8) அவை அனைத்தும் கிறிஸ்து இயேசுவுக்குச் சொந்தம்.

பொறாமை சாத்தானின் வலிமை யான் ஆயுதம். விவிலியமே பொறாமையின் கதைதான். “பழத்தை தின்றால் கடவுள் ஆவாய்” (தொ.நூ. 3:5). மனிதன் கடவுளாகி விட்டால் கடவுளின் கதி? பொறாமையால் கடவுள் தந்த கட்டளையே “விலக்கப்பட்ட கனி”. இதுதானே சாத்தானின் சிந்தனை.

பின் தலைமுறை தலைமுறையாய் பொறாமை மனிதனைத் தீய்த்தது. காயின் ஆபேலைக் கொன்றது, மன்னன் சவுல் தாவீது மீது கொண்டிருந்த, கொலை வெறி, யாக்கோபின் மக்களிடையே நிலவிய பொறாமையால் விளைந்த எகிப்திய அடிமைத்தனம்.

ஏன், இயேசுவின் சிலுவைச் சாவுக்கே காரணம் பரிசேயர்களின் பொறாமையே. “தலைமைக் குருக்கள் பொறாமையால்தான் அவரை ஒப்புவித்தார்கள் என்று பிலாத்து உணர்ந்திருந்தான் ” (மார்க். 15:10).

“பொல்லாங்கு செய்வோரைக் கண்டு பொறாமைப் படாதே” (தி.பா. 37:1). கடவுள் சிலரை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரும்போது அந்த நல்லவர்களைக் கண்டும் பொறாமைப்படாதே. எண். 12:2இல் மிரியாமும் ஆரோனும் “ஆண்டவர் உண்மையில் மோசே வழியாக மட்டுமா பேசியுள்ளார்? அவர் எங்கள் வழியாகவும் பேசவில்லையா?”. என்றனர். ஆண்டவர் இதைக் கேட்டார். விளைவு? எண். 12:10. “கடவுளின் சினம் மூண்டது.” மிரியாமுக்குத் தொழுநோய். 7 நாள் ஊர்விலக்கு. பொறாமையால் ஆசீர் இழப்பும் சிக்கலுமே.

பொறாமை என்னும் தீயை எண்ணெய் ஊற்றி வளர்க்காதே. அது அடுத்தவனை எரிக்காது. உன்னையே எரிக்கும். பொறாமை தான் பிறந்த இடத்தையே அழிக்கிறது. துரு இரும்பில்தான் தோன்றுகிறது. ஆனால் அது கடைசியில் இரும்பையே அரித்து அழிக்கிறது அல்லவா! திருத்தூதர் பவுல் எழுதியிருப்பது போல் “வீண்பெருமையைத் தொலைத்துவிடு.




# மகிழ்ச்சி என்பது கடவுளிடமிருந்து வரும் பரிசு

பெல்ஜியத்தின் கோகெல்பர்க் திருஇருதய பேராலயத்தில் அந்நாட்டு ஆயர்கள், அருள்பணியாளர்கள், துறவறத்தார், திருத்தொண்டர்கள், மேய்ப்புப்பணியாளர்கள் மத்தியில் திருத்தந்தை பிரான்சிஸ் உரை செப்டம்பர் 28 சனிக்கிழமை காலை பெல்ஜியத்தின் கோகெல்பர்க் திருஇருதய பேராலயத்தில் நற்செய்தி, மகிழ்ச்சி, இரக்கம் எனும் மூன்று தலைப்பில் அவர் உரையாற்றினார்.நாம் வாழ்கின்ற காலமும், மேற்கத்திய பகுதிகளில் நாம் காணும், நம்பிக்கை கொள்வதில் உள்ள நெருக்கடியும், நம்மை நமது அடிப்படை வாழ்வான நற்செய்தி அறிவிப்புப்பணிக்கு திரும்ப அழைத்துச் செல்கின்றன. இயேசு இவ்வுலகிற்குக் கொண்டு வந்த நற்செய்தியின் அழகை பிரதிபலிக்கும்படிச் செய்கின்றன.



ஆபிரகாம், மோசே, மற்றும் இறைவாக்கினர்கள் தங்களது அழைப்பிற்கு முன் அனுபவித்த நெருக்கடி போன்று, நாம் சந்திக்கும் ஒவ்வொரு நெருக்கடியும் நம்மை உலுக்கி மாற்றத்தை நம்மில் ஏற்படுத்துகின்றன. ஒரு விலைமதிப்பற்ற வாய்ப்பான இது திருவிவிலியத்தில் கைரோஸ் என்று அழைக்கப்படுகிறது.

பாவ இயல்பு என்னும் தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து ஆவியின் பாதைகளைக் கண்டுபிடிப்பது நற்செய்திப்பணியாற்றும் நமக்குக் கொடுக்கப்பட்ட கடமை. தனித்து இயங்கும் நிலையிலிருந்து ஒன்றிணைந்த திருஅவையாக, பிறரை வரவேற்கும் திருஅவையாக, நாம் மாற வேண்டும். திருஅவையின் இத்தகைய மாற்றத்திற்கு ஒரு துணிவு தேவை. அருள்பணியாளர்கள், துறவறத்தார் என அனைவரும் துணிவுடன் நற்செய்தியை எடுத்துரைப்பவர்களாக இருக்க வேண்டும்.

அனைவரும் ஒன்றாக செல்கின்றோம் ஆனால் வேறு பாதைகளில் செல்கின்றோம். என்று யான்கா என்னும் மேய்ப்புப்பணியாளர் தனது கருத்துக்களை எடுத்துரைத்தார். நம்மிடமிருந்து வேறுபட்டவர்களைச் சந்திக்க இறைவன் நம் இதயத்தைத் திறக்கிறார். திருஅவையில் அனைவருக்கும் இடம் உள்ளது, யாரும் மற்றொன்றின் புகைப்பட நகலாக இருக்கக்கூடாது. திருஅவையில் ஒற்றுமை என்பது வேற்றுமையில் நல்லிணக்கத்தைக் கண்டறிவது என்பதை நாம் உணர்ந்து செயல்பட வேண்டும்.

மகிழ்ச்சி என்பது கடவுளிடமிருந்து வரும் பரிசு. நற்செய்தியால் தூண்டப்பட்ட இதயத்தின் மகிழ்ச்சி. இருண்ட துன்பமான நேரங்களில் கூட வாழ்க்கையைத் தாங்கி நிற்கும் மகிழ்ச்சியே உண்மையான மகிழ்ச்சியாகும். இந்த மகிழ்வின் பாதையில் வறுமை, பாவம், துன்பம் போன்ற எல்லா சூழ்நிலைகளிலும், கடவுள் நம் அருகில் இருக்கிறார், நம்மைக் கவனித்துக்கொள்கிறார் என்பதை அறிவது மிக முக்கியம்.

திருத்தந்தை ஜோசப் ராட்ஸிங்கர் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு இவ்வாறு எழுதினார், "எங்கே மகிழ்ச்சி குறைகிறதோ, அங்கு நகைச்சுவை இறக்கும், அங்கே தூய ஆவி இருப்பதில்லை. ஏனெனில் மகிழ்ச்சி என்பது அருளின் அடையாளம்".

எமது நற்செய்தி அறிவிப்புப்பணி, கொண்டாட்டங்கள், மேய்ப்புப்பணி ஆகியவை எப்போதும் இதயத்தின் மகிழ்ச்சியைப் பிரகாசிக்கட்டும். ஏனெனில் நமது மகிழ்ச்சியானது தொலைவில் உள்ளவர்களைக் கூட ஈர்க்கிறது. மகிழ்ச்சியே நமது வாழ்வின் வழி என்பதை உணர வேண்டும். நம்பகத்தன்மை கடினமாகத் தோன்றும்போது கூட மகிழ்ச்சிக்கான பாதை எது என்பதைக் கண்டறிந்து நாம் முன்னேறிச்செல்ல வேண்டும்.

ஏற்கப்பட்டதும், பகிரப்பட்டதும், பெறப்பட்டதும், கொடையாகக் கொடுக்கப்பட்டதுமான நற்செய்தியானது மகிழ்ச்சியின் வழியில் நம்மை வழிநடத்தி, இரக்கம் நிறைந்த தந்தையைக் கண்டறிய உதவுகின்றது. கடவுளின் இரக்கமானது நமது வீழ்ச்சியிலிருந்து நம்மை உயர்த்துகின்றது. நம்மீது அளவற்ற அன்பை காட்டுகின்றது. இறைத்தந்தை இரக்கமுள்ளவர் என்பதை எடுத்துரைக்கின்றது.

கடவுள் இரக்கத்தின் தந்தை என்பதைக் கண்டறிய வைக்கிறது. கடவுளின் நீதி மேன்மையானது நாம் அனைவரும் தவறு செய்யக்கூடியவர்கள், தவறு செய்தவர்கள் அனைவரும் தங்கள் தவறுகளை சரிசெய்ய இறைவனின் இரக்கத்தால் அழைக்கப்படுகிறார்கள்.

கடவுளின் இரக்கமுள்ள அன்பு அவர்களின் இதயங்கள் குணமடைய தேவை. கடவுள் அவருடைய இரக்கத்தினால்தான் நம்மை நீதிமான்களாக்குகிறார், அவர் நமக்கு ஒரு புதிய இதயத்தை, ஒரு புதிய வாழ்க்கையைத் தருகிறார். என்பதை உணர்ந்து மகிழ்வுடன் வாழ வேண்டும்.

சிறைக்கைதிகளுக்குக் கொடுக்கப்படும் தண்டனை ஒரு மருந்தாக இருக்க வேண்டும், அவர்கள் குணமடைய அது வழிவகுக்க வேண்டும். மக்கள் மீண்டும் எழுந்து வாழ்விலும் சமூகத்திலும் தங்கள் வழியைக் கண்டறிய உதவ வேண்டும். அவர்களுக்கான பணியில் எப்போதும் இரக்கத்துடன் செயல்படுவோம்.

**மெரினா ராஜ்**

**கொழும்பு திம்பிரிகஸ்யாய ஆலயத்தில் 6ஆம் திகதி திருவிழா**

# சிறு செயல்கள் மூலம் புனிதம் கண்ட குழந்தை இயேசுவின் புனித திரேசாள்

கொழும்பு திம்பிரிகஸ்யாயவில் அமைந்துள்ள வரலாற்று புகழ் மிக்க எழில் மிகு புனித திரேசாள் ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை மாலை கொடியேற்றம், சிறப்பு திருப்பலியுடன் ஆரம்பமானது.

பிரதி வருடமும் அக்டோபர் மாதத்தில் பங்கு மக்கள் புனிதையின் திருவிழாவை வெகு சிறப்பாக கொண்டாடி மகிழ்கின்றனர்.

இந்த திருவிழாக் காலத்தில் இப் புனிதையின் உன்னத வழிகளை அறிந்து புனிதம் காண விளைவது பொருத்தமாகும்.

புனித திரேசாள் 1873 ஜனவரி 3 ஆம் திகதி லூயி மார்ட்டின், செலி மார்ட்டின் தம்பதியினருக்கு ஒன்பதாவது குழந்தையாக பிறந்தார். குறும்புத்தனமும். செல்வச்செழிப்பும். அதிகம் கொண்டு மிளிர்ந்த தெரேசாவின் மழலைப் பருவத்தில் 4 ஆம் வயதில் அவரது அன்னையின் மறைவு அவர்கள் குடும்பத்தையே நிலைகுலையச் செய்தது. அவருக்கு உறுதுணையாயிருந்த அவரது மூத்த சகோதரிகள் நால்வரும் ஒருவர் பின் ஒருவராக கார்மல் சபைக்கு அருட் சகோதரிகளாக செல்ல திரேசாவின் துயரம் நீடித்தது.

தனது 14வது வயதில் கார்மல் சபையில் சேர விரும்பியும் வயது குறைவு காரணமாக அவரது ஆசை நிராகரிக்கப்பட்டது. எனினும் அப்போது திருத்தந்தையாக இருந்த 13 ஆம் சிங்கராயரிடம் அனுமதி கேட்டபோது “இறைவன் இதை விரும்பினால் உறுதியாக நீ கார்மலில் நுழைவாய்” என பதிலளித்து அனுப்பினார். ஈற்றில் 15 வது வயதில் கார்மேல் மடத்திற்கு அவர் சேர்க்கப்பட்டார்.



இயேசுவே உம்மை அதிகமாக அன்பு செய்ய விரும்புகிறேன். இதுவரை நீர் பிறரால் நேசிக்கப் பட்டதைவிட அதிகமாக நான் உம்மீது அன்பு பாராட்ட விளைகிறேன் ” என்றும், “இம்மண்ணில் வாழும் குற்றம் புரிவோர் அனைவரையும் மாற்ற விரும்புகிறேன். மேலும் குழுவாய் நிலையிலிருக்கும் அனைத்து ஆன்மாக்களையும் மீட்க விளைகிறேன்” என்றும் புனித தெரேசா தம் ஆவலை வெளியிட்டார்.

சின்னஞ் சிறிய செயல்மூலம் அன்பை வெளிப்படுத்த முயன்ற தெரேசா எளிமை வாழ்வில் சிறப்பான ஈடுபாடு கொண்டிருந்தார். தமது துயரங்களை கண்ணுற்ற அவர் சுய இரக்கத்தில் தம்மையே ஈடுபடுத்திக் கொள்ளாது அவை அனைத்தையும் ஆன்மாக்களை மீட்க அர்ப்பணித்தார்.

ஆழ்ந்த தாழ்ச்சி, இறையன்பு, இறை நம்பிக்கை, குழந்தை உள்ளம் இவைகளே தெரேசா விண்ணகம் செல்ல கைக்கொண்ட சிறிய வழிகள். தெரேசா வாழ்ந்து வந்த நகருக்கருகில் பிரான்சீனி என்ற இரட்டை கொலைகாரன் சிறையில் தள்ளப்பட்டான். அவனுக்கு தூக்குத் தண்டனையும் உறுதி செய்யப்பட்டது.

கடவுளிடம் நம்பிக்கை இழந்தவனாக அவன் இறைவனை பழிக்கும் சொற்களை கக்கிக் கொண்டிருந்தான். தெரேசா இதை கேள்வியுற்று இந்த ஆன்மா நரகம் போய் விடக்கூடாது என நினைத்து அவன் மனம் மாற கடும் தவ முயற்சியுடன் கூடிய செபத்தில் ஈடுபட்டார்.

சில நாட்கள் உருண்டோடின. பிரான்சீனியின் தூக்குத்தண்டனை நாள் வந்தது. வெறிபிடித்தவனாக அவன் என்றாலும் அவர் தூக்கு மேடை ஏறினான். அவ்வேளை கப்புச்சின் சபைக் குரு ஒருவர் பாடுபட்ட சுரூபத்தைக் காண்பித்துக் கொண்டே அவனை அணுகினார்.

ஒரு நொடிப்பொழுதில் அவனில் மனமாற்றம் ஏற்பட்டது. சுரூபத்தை வாங்கி முத்தமிட்டான். தூக்குத் தண்டனை நிறைவேறியது. தனது செபதப முயற்சிகளுக்கு ஆண்டவர் பயனளித்தார் என்று அளவில்லாத இன்பம் கண்டார் திரேசா. இந்நிகழ்ச்சி தான் அவர் இறக்கும்வரை ஆன்மாக்கள் மனம் திரும்புவதற்காக இடைவிடாது செப தப முயற்சிகளில் ஈடுபட வைத்தது.

துறவற வாழ்வில் ஒன்பது ஆண்டுகள் அவர் இறை பணியாற்றினார். இருப்பினும் இந்த ஒன்பது ஆண்டுகள் ஆண்டவருக்காக சொல்லற்கரிய சிலுவைகளை பொறுமையோடும் மகிழ்வோடும் மனவலிமையோடும் சுமந்து வந்தார்.

கார்மேல் மடத்தில் சிலுவைகள் நிறைந்த இவரது வாழ்வு ஒரு வேதசாட்சியின் மரணத்திற்கு ஒப்பாயிருந்தது. என்புருக்கி நோயினால் பாதிக்கப்பட்டு பல துன்பங்கள் அனுபவித்து தனது 24வது வயதில் ‘இயேசுவே உம்மை நேசிக்கிறேன்’ என்று சொல்லி உயிர் விட்டார் திரேசா.



1923 ஏப்ரல் 24 அன்று 15 ஆவது ஆசீர்வாதப்பர் பாப்பரசரால் தூயவர் நிலைக்கு உயர்த்தப் பெற்றார். வேத போதக நாடுகளின் பாதுகாவலராகவும் திருச்சபையின் மறைவல்லுநராகவும் உயர்த்தப்பெற்றார் தூய தெரேசா. தனது தேவ அழைத்தல் அன்பு செய்வதே என வெளியிட்டார். பிறரது குறைகளை கண்டு வியப்புறாது அவர்கள் புரியும் சிறிய, மிகச் சிறிய நற்பண்புகளைக் கண்டு பாராட்டி, அவர்களின் தவறுகளை ஏற்று, பொறுத்து வாழ்வதில் தான் நிலையான அன்பு அடங்கியுள்ளது என்பதே அவரது கூற்றும் வாழ்வும்.ஆன்மாக்களை மீட்கவும் குருக்களுக்காக மன்றாடுவதற்காகவுமே தாம் சபையில் இணைவதாக சான்று பகர்கிறார்.அன்றாட வாழ்வின் சிறிய காரியங்களையும் முணுமுணுக்காமலும் வாதாடாமலும் செய்வதன் மூலம் புனிதம் அடையும் சிறிய வழிகளை எமக்குக் கற்றுத் தருகிறார்.

“நான் இவ்வுலகிற்கு நன்மை செய்வதில் என் வாழ்வை செலவிட விரும்புகிறேன் மீட்கப்பட வேண்டிய ஆன்மாக்கள் இருக்கும் வரை ஓய்வெடுக்க நான் விரும்பவில்லை” என மரணத்தறுவாயில் கூறிய தூய தெரேசா இன்றும் நமக்காக பரிந்துரை செய்வதிலும் ரோசா மலர்களை பொழிவதிலும் ஈடுபட்டுக்கொண்டேயிருக்கிறார். என்பதில் சிறிதும் ஐயமில்லை.


நாமும் தூய தெரேசாவின் சிறிய வழிகளை கைக்கொண்டு அன்றாட பணிகளை அன்போடு செய்து புனிதம் பெற விளைவோம்.

**சகோதரி பெற்றீசியா (மறை ஆசிரியை )**



# ஓட்டமாவடி மஜ்மா நகர் கொரோனா மையவாடியில் இன்று பள்ளிவாசல் மற்றும் பல்துறை கட்டடம் திறப்பு

## சீனன்கோட்டை பள்ளிச்சங்கத் தலைவர் அல்ஹாஜ் ஏ.எச்.எம். முக்தார் வாழ்த்து



கோவிட்19 எனும் கொரோனா தொற்றுக்கு இலக்காகி 2022ஆம் வருடம் 10ஆம் திகதி மரணமான சீனன் கோட்டையைச் சேர்ந்த ஹாஜியானி மர்ஹூமா இரீபதுல் ஹைறாவின் ஜனாஸா மஜ்மா நகர் கொரோனா மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அவரது பெயரால் குறித்த மையவாடி காணியில் பள்ளிவாசலும் பல்துறைகட்டடமும் இன்று (01) மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்படுவதையிட்டு அல்லாஹ்வை புகழ்கிறேன். மேற்படி தர்மத்தை செய்துள்ள மர்ஹூமா இரீபதுல் ஹைறாவின் கணவர் ஸவாஹிர் ஹாஜியாருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் நபிகளாரின் பொன்மொழிக்கிணங்க நாளை மறுமையில் சுவர்க்கலோகத்தில் அழகிய மாளிகை கிடைக்கவும் பிரார்த்திக்கிறேன்.

இந்தக் குடும்பம் மேற்கொண்டுள்ள இந்த காரியத்தால் சீனன்கோட்டை பிரதேசம் பெரும் மகிழ்ச்சியடைகிறது. மக்கள் குடியிருப்புகள் இல்லாத மஜ்மா மையவாடி பிரதேசம் எதிர்காலத்தில் வீடுகளும் கடைகளும் நிறைந்த பெரிய நகராக பொலிவுபெறும் என்பதில் சந்தேகமில்லை. எனவே, இலங்கை வரலாற்றிலும் குறிப்பாக முஸ்லிம்களின் வரலாற்றிலும் சிறப்பிடம் பெறப்போகிறது. இதிலும் பேருவளை சீனன்கோட்டையின் பெயரும் புகழும் மேலும் மெருகேற்றப்படுவதை நினைக்கும்போது மகிழ்ச்சியளிக்கிறது.

மர்ஹூமா இரீபதுல் ஹைறா, வரிய மக்களோடு நல்லநேசம் வைத்திருந்ததை எமது பிரதேசத்திலுள்ள அனைவரும் அறிவர். வசதி குறைந்த மக்களுக்கும் இன்முகத்துடன் உதவியுள்ளார். எனவே, ஆலமுல் பர்ஸஹ்வில் வாழ்ந்து கொண்டிருக்கும் மர்ஹூமா இரீபதுல் ஹைறாவுக்கு சதகதுல் ஜாரியாவின் நன்மைகள் நிறைந்துகொண்டிருக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

## ஜம்இய்யதுல் உலமா சபையின் பொருளாளர் கலாநிதி அஸ்வர் அஸாஹிம் (அல் அஸ்ஹரி)



ஓட்டமாவாடி மஜ்மா நகர் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள பேருவளை சீனன் கோட்டையைச் சேர்ந்த மர்ஹூமா ஹாஜியானி இரீபதுல் ஹைறாவின் ஞாபகார்த்தமாக அவரின் கணவர் ஸவாஹிர் ஹாஜியார் மற்றும் அவரது பிள்ளைகளால் குறித்த மையவாடி காணியில் பள்ளிவாசலும் அதனுடன் கூடிய பல்துறை கட்டடமும் நிர்மாணித்து இன்று (01) மக்கள் பாவனைக்காக அன்பளிப்பு செய்யப்படுவதையிட்டு மகிழ்ச்சி அடைவதாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் பொருளாளர் கலாநிதி அஸ்வர் அஸாஹிம் (அல் அஸ்ஹரி) விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

மர்ஹூமா ஹாஜியானி இரீபதுல் ஹைறா தனது வாழ்வில் தர்மங்கள் செய்வதில் அர்ப்பணிப்போடு செயலாற்றியதுபோன்று தம் பிள்ளைகளையும் நற்பணி செய்வதில் ஆக்கமும் ஊக்கமும் ஊட்டி வளர்த்துள்ளார். இன்று அவரது கணவர், பிள்ளைகள் குடும்பத்தால் இந்தப் பள்ளிவாசல் உள்ளிட்ட கட்டடம் அன்பளிப்பு செய்யப்படுகிறது.

மரணித்த தனது தாய்க்காக தானதர்மங்கள் செய்வதற்கு ஸஹாபாக்களை இறைத்தூதர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பல சந்தர்ப்பங்களில் தூண்டியும் ஆசை காட்டியும் உள்ளார்கள்.

இந்த ஹதீஸ்களின் அடிப்படையில் மர்ஹூமா ஹாஜியானி இரீபதுல் ஹைறாவின் கணவர், புதல்வர்கள் அன்னாரின் பெயரில் அன்பளிப்பாக செய்யக்கூடிய இந்த ஸதகதுல் ஜாரியாவை அல்லாஹ் ஏற்று அவர்களுடைய அடக்கஸ்தலத்தை சுவர்க்கத்தின் பூஞ்சோலையாகவும் ஒளிமயமாகவும் ஆக்கியருள்புரிவதோடு அவரது கணவர், பிள்ளைகள், குடும்பத்தார் அனைவரையும் நற்பாக்கியம் பெற்றவர்களாகவும் சுவனத்தின் மாளிகையில் சொந்தக்காரர்களாகவும் ஆக்கி அருள்புரிவானாக!

## மஜ்மா நகர் பள்ளிவாசலை நிர்மாணித்த ஏ.இஸட்.எம் ஸவாஹிர் ஹாஜியார்



பேருவளை, சீனன் கோட்டையில் பிறந்த எனது மனைவி இரீபதுல் ஹைறா, கொரோனா தொற்றினால் ஏற்பட்ட மரணம் என்று தெரிவிக்கப்பட்ட காரணத்தினால் கிழக்கு மாகாணத்தின் மஜ்மா நகர மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டமை ஒருபுறம் மனதை உருத்தச் செய்தாலும் மறுபுறம் எரிக்கப்படுவது தவிர்க்கப்பட்டதற்கு அல்லாஹ்வுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் எவரும் எதிர்பார்த்திருக்காத வனப்பகுதியொன்றில் பள்ளிவாசல் ஒன்றை நிர்மாணிக்க சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டும் மேலும் மகிழ்ச்சியடைகிறேன். இவற்றுக்கெல்லாம் வழிவகுத்த அல்லாஹ்வுக்கே புகழனைத்தும். அல்ஹம்துலில்லாஹ் என்று தனது ஆதங்கத்தை மர்ஹூமா இரீபதுல் ஹைறாவின் கணவர் ஸவாஹிர் ஹாஜியார் வெளியிட்டார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், அன்று மனைவியின் மரணம் மஜ்மா நகரில் நல்லடக்கம் போன்ற காரணத்தினால் மனக் குழப்பத்தில் இருந்த எனக்கு மனைவியின் பெயரால் அங்கு பைத்துல் ஹைறாத் நிர்மாணம் பெற்று திறந்து வைக்கப்படுவதால் மகிழ்ச்சிப் பிரவாகம் என்னுள் மேலோங்கி நிற்கிறது.

எனது மனைவியின் நற்பண்பு, நற்பணிகளால் அவர் அப்போதே, அல்லாஹ்வுக்கு நெருக்கமானவராக விளங்கியுள்ளார். இப்போது அந்த நெருக்கம் மேலும் மேலோங்கச் செய்யும் எமது முயற்சிகளை அல்லாஹ் அங்கீகரிக்கப் பிரார்த்திக்கிறேன்.

இந்த பள்ளிக்கட்டடத்தின் தோற்றத்தால் இங்கு குடியிருப்புக்கள் பல்கிப் பெருகி பெரிய நகராக பரிணாமம் பெற அல்லாஹ் அருள்புரிய இருகரமேந்தி பிரார்த்தனை செய்கிறேன்.

---

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஓட்டமாவடி, மஜ்மா கிராமத்தில் பள்ளிவாசலுடன் கூடிய பல்துறை கட்டடம் இன்று 01ஆம் திகதி (01.10.2024) மக்கள் பாவனைக்காக வைபவரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.



கடந்த 2019 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் கொரோனா எனும் கொடிய வைரஸ் உலகையே உலுக்கியதை நாம் அறிவோம். கொவிட் 19 என பொதுவாக அழைக்கப்படும் இந்த ஆட்கொல்லி வைரஸால் உலகளவில் பல ஆயிரக்கணக்கான மனித உயிர்கள் பலியாகின. இதனால் உலகின் இயக்கமே ஸ்தம்பித்துப் போனது. இதற்கு எமது இலங்கை தீவும் விதிவிலக்கல்ல. ஆனால் ஒரு வித்தியாசம்.

கொரோனா தொற்றினால் மரணமானவர்களின் பூதவுடல்கள் உலக நாடுகள் அனைத்தும் ஒரு முகப்பட்டு அவரவர் விருப்பத்திற்கேற்ப அடக்கமோ அல்லது தகனமோ செய்வதற்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் உலக சுகாதார அமைப்பும் இதனையே அங்கீகரித்திருந்தது.

ஆனால், அப்போதிருந்த எமது நாட்டு அரசும் சில அதிகாரிகளும் இதற்கு மறுதலையாக கட்டாயமாக தகனம் செய்ய வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இச்செயற்பாடானது இஸ்லாமிய சமய அனுஷ்டானத்திற்கு முற்றிலும் முரணானது.

இந்நிலையில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முஸ்லிம்களதும், முஸ்லிம் நலன் விரும்பிகளதும் தகனத்திற்கெதிரான பலத்த எதிர்ப்புகளால் நிலைமை மாறி, கொரோனா தொற்றினால் மரணமாகும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை நிபந்தனைகளுடன் நல்லடக்கம் செய்வதற்கு அரசு உத்தரவிட்டது. அதற்கு அமைய கிழக்கிலங்கையின் ஓட்டமாவடி நகர் தெரிவு செய்யப்பட்டது. இவ்வாறு இன்னும் பல பகுதிகள் காணப்பட்ட போதிலும் முஸ்லிம் அல்லாத பிற சமூகத்தவர்கள் பின் வாங்கும் நிலையில் முழுக்க முழுக்க முஸ்லிம் பிரதேசமே கைகொடுத்தது. அதுவே ஓட்டமாவடியிலுள்ள மஜ்மா கிராமமாகும்.

சுமார் 17 ஏக்கர் விஸ்தீரணமுள்ள மையவாடிக்குரிய காணியும்கூட குறிப்பிட்ட பிரதேச மக்களாலேயே அன்பளிப்புச் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்க செயற்பாடாகும். மஜ்மா மையவாடியின் தோற்றம், ஏற்றம், இப்போது நிர்மாணம் பெறும் பள்ளிவாசல், பல்துறை கட்டட தொகுதியின் நிர்மாணம் என்பன இலங்கை வரலாற்றின் ஒரு மைல்கல்லாக நிச்சயம் பதியப்படும் என்பதில் ஐயமில்லை.

இலங்கை முஸ்லிம்களின் ஆரம்ப குடியேற்றம், வளர்ச்சி வரலாற்றோடு மஜ்மா நகரும் வருங்கால சந்ததியினருக்கு தலை நிமிர்ந்த வரலாற்று சான்றுகளை கூறிக் கொண்டே இருக்கும்.

**கொரோனா பூதவுடல்களை சுமக்கும் 'மஜ்மா' மையவாடி**



மஜ்மா நகர் ஜன சஞ்சாரமற்ற ஒரு சாதாரண வனப்பகுதியாகும். சந்தர்ப்ப சூழ்நிலையால் அப்பகுதி மையவாடியாக்கப்பட்டாலும் ஒரு பாரிய நகரமாக பரிணமிக்க போகிறது என்பதை எண்ணும்போது, துரதிஷ்ட நிகழ்வுகள் அதிஷ்டம் தரும் அரிய நிகழ்வுகளில் ஒன்றாக அமையும் சம்பவங்களையே எமக்கு உணர்த்துகின்றதைக் காண முடிகிறது. நாடு கடத்தப்பட்ட ஒராபி பாஷா இலங்கை முஸ்லிம்களின் கல்விக் கண்களை திறந்த நிகழ்வு போன்றதாகும்.

17 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 3634 பூதவுடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் 2956 ஜனாஸாக்கள் முஸ்லிம்களுடையதாகும்.

**மஜ்மா மையவாடி பள்ளியின் தோற்றமும் பின்னணியும்**

2956 முஸ்லிம் ஜனாஸாக்களில் பேருவளை சீனன் கோட்டையைச் சேர்ந்த மர்ஹூமா ஹாஜியானி இரீபதுல் ஹைறா ஸவாஹிரின் ஜனாஸாவும் அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஜனாஸா அடக்கஸ்தலத்திற்கு கிரமமாக இலக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இரீபதுல் ஹைறாவின் அடக்கஸ்தலத்திற்கு 3330 ஆம் இலக்கம் வழங்கப்பட்டுள்ளது. இவர், ஜனாஸா எரிப்பின் பின்னர் நல்லடக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட்ட இறுதிக் காலப்பகுதியில் மஜ்மா மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

இவரின் ஞாபகார்த்தமாகவே அவரது கணவர் ஏ.இஸட்.எம் ஸவாஹிர் ஹாஜியார் மற்றும் அவரது பிள்ளைகளினால் 'பைதுல் ஹைறாத்' என்ற பெயரில் அழகிய தோற்றத்துடன் சகல வசதிகளும் உள்ளடக்கப்பட்ட பள்ளிவாசலும் அதனுடன் கூடிய பல்தேவைக் கட்டடங்களும் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. சுமார் 140×40 சதுர அடி நிலப்பரப்பில் இக்கட்டடம் அமையப்பெற்றுள்ளது. இக்கட்டடமே இன்று (20241001) அஸர் தொழுகையைத் தொடர்ந்து திறந்து வைக்கப்படுகிறது.

இம்மையவாடியைத் தரிசிக்க வரும் சகல இன, மத மக்களும் பயன்படுத்தக்கூடிய வகையிலே இக்கட்டடம் திறந்து விடப்படுகிறது. பள்ளிவாசல் திறப்பு விழாவினை அடுத்து கொரோனாவினால் மரணித்தவர்களுக்காக கத்தமுல் குர்ஆன் தமாம், யாஸீன் ஸூறா ஓதி பின்னர் துஆ பிரார்த்தனையும் இடம்பெறும். நிகழ்வில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் செயலாளர் அஷ்ஷெய்க் அர்கம் நூர் ஆமித், பொருளாளர் கலாநிதி அஸ்வர் அஸாஹிம் (அல்அஸ்ஹரி), முஸ்லிம் சமய கலாசார திணைக்கள பணிப்பாளர் எம்.எஸ்.எம் நவாஸ் மற்றும் அஷ்ஷெய்க். முனீர் முளப்பர் (நளீமி) உட்பட பிரதேச அரசியல்வாதிகள் ஓட்டமாவடி மற்றும் வாழைச்சேனை உட்பட அதனை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த பள்ளிவாயல்கள் சம்மேளன நிர்வாகிகள், கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் செயலாளர் மற்றும் ஊழியர்கள், ஊர்த் தலைவர்கள், மட்டக்களப்பு மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா சபை முக்கியஸ்தர்கள், சீனன்கோட்டை பள்ளிச்சங்க தலைவர் அல்ஹாஜ் ஏ.எச்.எம் முக்தார் உட்பட உறுப்பினர்கள், ஏ.இஸட்.எம் ஸவாஹிர் ஹாஜியாரின் குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் சீனன்கோட்டை ஊர் மக்கள், உலமாக்கள், புத்திஜீவிகள் பலரும் கலந்து கொள்வர்.



மர்ஹூமா இரீபதுல் ஹைறாவின் மக்பராவை படத்தில் காணலாம்



**மர்ஹூமா ஹாஜியானி இரீபதுல் ஹைறா**

பேருவளை சீனன்கோட்டையைச் சேர்ந்த பிரபல மாணிக்கக் கல் வர்த்தகர் மர்ஹூம் அப்துல் வதூத் மர்ஹூமா ஜெமீலா உம்மா தம்பதியின் புதல்வியாக 1961.12.13 ஆம் திகதி மர்ஹூமா ஹாஜியானி இரீபதுல் ஹைறா பிறந்தார்.

1977.11.05ஆம் திகதி பிரபல மாணிக்கக் கல் வர்த்தகரான மர்ஹூம் அல்ஹாஜ் அஹமட் ஸரூக், ஹாஜியானி மர்ஹூமா ஹக்கீகத் உம்மா தம்பதியின் புதல்வரான அல்ஹாஜ் ஏ.இஸட்.எம் ஸவாஹிரை திருமணம் செய்தார்.

பாத்திமா ஸுமையா, பாத்திமா றிஸ்னா, ரஹ்மத் ஹாமிதா, முஹம்மத் அஹ்ஸர், முஹம்மத் ரிகாஸ் ஆகியோர் இவரின் அன்புப்பிள்ளைகளாவர். மர்ஹூமா இரீபதுல் ஹைறாவுக்கு 15 பேரப் பிள்ளைகளும் உள்ளனர். இவர் தக்வாவும், இஹ்லாஸும் உள்ள ஓர் அடக்கமான இஸ்லாமிய பெண்ணாக வாழ்ந்துள்ளார். நாட்டுக்கும், சமூகத்திற்கும், ஊருக்கும் நல்ல பல சேவைகளை செய்யக் கூடிய பிள்ளைகளாக தமது பிள்ளைகளை வளர்த்துள்ளார். தனது கணவர், பிள்ளைகள் சமூக விமோசனத்திற்காக வாரி வழங்குவதற்கு உற்சாகமூட்டிய ஒரு சீதேவியாவார்.

சிரித்த முகத்துடன் வீடு வந்தோரை வரவேற்று விருந்துபசாரம் வழங்குவதில் முன்னிலையில் இருந்தார். குடும்ப உறவினைப் பேணி நடந்தார். செல்வம் நிறைந்திருந்தாலும் சாதாரண பெண்ணாக வாழ்ந்து முன்மாதிரி காட்டினார்.

60 வருட காலம் வாழ்ந்து, 2022.01.10 ஆம் திகதி கொழும்பில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியொன்றில் மாலை 7.40 மணிக்கு இறையடி சேர்ந்தார். இவரது ஜனாஸா 2022.01.11 ஆம் திகதி ஓட்டமாவடி மஜ்மா நகர் கொரோனா மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

யா அல்லாஹ்! இவர் செய்த அத்தனை நற்காரியங்கள், நல்ல அமல்களை அங்கீகரித்து ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கத்தை வழங்குவாயாக, ஆமீன்.

**கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபை ஊழியர்களின் பணி**

ஓட்டமாவடி மஜ்மா நகர் கொரோனா ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதில் இரவு பகல் பாராது சேவையாற்றிய கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபை ஊழியர்களை கௌரவித்து சீனன்கோட்டையைச் சேர்ந்த மர்ஹூமா இரீபதுல் ஹைறாவின் குடும்பத்தரால் ஞாபகார்த்த சின்னமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கொரோனாவில் மரணித்தவர்களை அடக்கம் செய்த இந்த மஜ்மா நகர் மையவாடி பின்னர் காடுகள் வளர்ந்து காணப்பட்டது. அதனையும்கூட ஸவாஹிர் ஹாஜியார் குடும்பத்தினர் தமது சொந்த செலவில் சுத்தம் செய்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கொரோனா ஜனாஸாக்களுக்காக பிரார்த்தனை செய்ய குடும்ப அங்கத்தவர்கள் தினந்தோறும் தூர இடங்களிலிருந்து வருகின்றனர். அதேபோல் பிற, மத சகோதரர்களும் சமூகமளிக்கின்றனர்.

இவர்களுக்கு ஓய்வெடுக்கக் கூடிய வசதி வாய்ப்புகள் இங்கு போதியளவு இருக்கவில்லை.

இதை அறிந்த ஸவாஹிர் ஹாஜியார், அவரது குடும்பத்தினர் பள்ளிவாசலையும், பல்துறை கட்டட வசதியையும் அங்கு சம்பூரண நிலையில் அமைத்துள்ளனர். இவர்களின் இந்த உயரிய பணியை பாராட்ட வேண்டும். இவர்களுக்கு நன்றி கூறி துஆவும் செய்ய வேண்டும்.

பள்ளிவாசலும், பல்துறை கட்டிடமும், மலசலகூட வசதியும் அமைக்கப்பட்டதன் மூலம் மஜ்மா நகர் மையவாடியானது மேலும் புதுப்பொலிவு பெற்றுள்ளது.

இப் பணியை சிறப்பாக முன்னெடுக்க ஊர் மக்கள், கிழக்கின் அரசியல்வாதிகள், கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபை முன்னாள் தலைவர் உட்பட உறுப்பினர்கள், செயலாளர் உட்பட ஊழியர்கள், அரச அதிகாரிகள், பள்ளிவாசல் நிர்வாகிகள், பாதுகாப்பு பிரிவினர், உலமாக்கள், புத்திஜீவிகள் வழங்கிய ஒத்துழைப்பு மறக்க முடியாதது.



**பீ.எம் முக்தார்**
**பேருவளை விசேட நிருபர்**

# ஊவா மாகாண சபை

**ஊவா மாகாண சுகாதார, சுதேச வைத்திய, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, மகளிர் விவகார மற்றும் சமூக நலன்புரி அமைச்சு**

**2025 ஆம் ஆண்டுக்காக வழங்குநர்களை பதிவு செய்தல்**

ஊவா மாகாண சபையின் சுகாதார, சுதேச வைத்திய, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, மகளிர் விவகார மற்றும் சமூக நலன்புரி அமைச்சின் 2025 ஆம் ஆண்டுக்காக பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்களாக பதிவு செய்வதற்காக தகுதியை பூர்த்தி செய்திருக்கும் உள்நாட்டு நிறுவனங்கள் மற்றும் நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒவ்வொரு இலக்கத்தின் கீழும் உள்ள உருப்படி பிரிவு ஒன்றுக்காக மீளளிக்கப்படாத 750 ரூபா அறவிடப்படுவதோடு, இது தொடர்பில் மேலதிக விபரங்களை எமது உத்தியோகபூர்வ இணையதளமான http://healthmin.up.gov.lk விற்கு பிரவேசித்து பெற்றுக்கொள்ள முடியும்.

**அமைச்சு செயலாளர்/ பெறுகைக் குழு தலைவர்**
**ஊவா மாகாண சுகாதார, சுதேச வைத்திய, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, மகளிர் விவகார மற்றும் சமூக நலன்புரி அமைச்சு**
**ஆர்.எச். குணவர்தன மாவத்தை,**
**பதுளை.**
**2024.10.11**

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஆய்வுக்கட்டுரைகள் நூல் வெளியீடு



*(அம்பாறை மத்திய நிருபர்)*

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்ட உத்தேச மறுசீரமைப்பு தொடர்பான புலமைசார் செயலமர்வும், சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பின் வெளியீட்டு விழாவும் நேற்றுமுன்தினம் (29) நடைபெற்றன.

தென்கிழக்கு பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தின் ஏற்பாட்டில், பீடாதிபதி சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ் செய்க் எம்.எச்.ஏ. முனாஸ் தலைமையில் பீடத்தின் கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம அதிதியாக பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீட் கலந்து கொண்டார்.

வெளியிடப்பட்ட புத்தகம் தொடர்பான விமர்சன உரையை கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் பேராசிரியர் ஏ. சர்வேஸ்வரன் நிகழ்த்தினார். இந்நிகழ்வின் கௌரவ அதிதியாக கஹடோவிட்ட அல் ஹிமா இஸ்லாமிக் நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்செய்க் எம்.ஏ.ஏ. நூறுல்லாஹ் (நளீமி) கலந்து கொண்டதுடன், நிகழ்வுக்கான அனுசரணையையும் வழங்கியிருந்தார்.

# அம்பாறை தமிழ் மக்களை கருத்திற்கொண்டு தமிழ் கட்சிகள் ஓரணியில் இயங்க வேண்டும்

## முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மு. இராஜேஸ்வரன்

*(காரைதீவு குறூப் நிருபர் சகா)*



பாராளுமன்ற தேர்தலில் தமிழ் கட்சிகள் ஓரணியில் போட்டியிட்டால் மாத்திரமே அம்பாறை மாவட்டத்தில் தமிழ் ஆசனத்தை காப்பாற்ற முடியும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரன் தெரிவித்தார்.


அம்பாறை மாட்ட தமிழ் மக்கள் தொடர்ச்சியாக பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருவதாகவும் பல கோணங்களில் அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களின் வளங்கள் சுரண்டப்படுவதுடன், உரிமைகளும் திட்டமிட்டு பறிக்கப்படுவதாக அவர் குற்றஞ்சாட்டினார். எனவே, கட்சி, சின்னம் என இழுபறிபடாது விட்டுக்கொடுப்புடன், தமிழ் கட்சிகள் ஒரு இணக்கத்துக்கு வரவேண்டும் என மு.இராஜேஸ்வரன் வலியுத்தினார்.

அவ்வாறு இல்லையாயின் அம்பாறை மாவட்டத்திலுள்ள சுமார் ஒரு இலட்சம் தமிழ் வாக்குகளும் ஏழு, எட்டாக பிரிந்து எம் மக்களின் வாக்குகள் பயனற்று போய்விடும் எனவும் எமக்கான ஆசனம் தீங்கு விளைவிக்கும் தரப்புக்கே சென்றுவிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, நிலைமையினை கருத்திற் கொண்டு அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் நல்ல முடிவை தமிழ் கட்சிகள் எடுக்கும் என தான் நம்புவதாக மு.இராஜேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

# க.பொ.த சாதாரண தர பரீட்சையில் 2 ஆம் இடத்தில் கிழக்கு மாகாணம்

*(காரைதீவு குறூப் நிருபர் சகா)*




க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கிழக்கு மாகாணம் 2 ஆம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

கடந்த வருடம் 73.75 புள்ளியைப்பெற்று 6ஆம் இடத்திலிருந்த கிழக்கு மாகாணம், இம்முறை 77.36 புள்ளியைப்பெற்று இரண்டாம் நிலைக்கு முன்னேறியுள்ளது. கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் தலைமையிலான கல்விசார் குழாத்தினரின் நுணுக்கமான அணுகுமுறையும் மிகச்சிறந்த வழிகாட்டல் மற்றும் உரிய காலத்தில் பகுப்பாய்வு செய்தல் போன்ற செயற்பாடுகளினால் கிழக்கு மாகாணம் இச்சாதனையை எட்டியுள்ளது.

அத்துடன், மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் பெற்றோர்களின் முயற்சியும் அர்ப்பணிப்பும் இந்த வெற்றிக்கு ஏதுவாக அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**சர்வதேச போட்டிரீதியான விலைமனுக்களுக்கான அழைப்பு**

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சுத்திகரிப்புப் பிரிவு)**

**பகிரங்க கேள்விமனு 4506T**

**OFCFR OCTANE RATING SYSTEM இன் வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல்**

விலைமனு ஆவணத்தின் கீழ் தரப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை உறுதி செய்யும் வகையில் மேல் குறிப்பிடப்பட்ட உருப்படியின் வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தலுக்காக புகழ்பெற்ற உற்பத்தியாளர்கள், தமது அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு ஏற்றுமதி முகவர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் (உற்பத்தியாளர்கள் அல்லது ஏற்றுமதி முகவர்கள்) இடமிருந்து இலங்கை, களனி, சபுகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு, அமைச்சுப் பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படும்.

விலைமனு ஒன்றை சமர்ப்பிக்கும் எந்த ஒரு விலைமனுதாரரும், 2024 நவம்பர் 08 ஆம் திகதி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் 1500 மணிக்கு முன்னதாக களனி, சபுகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவு, காசாளருக்கு அல்லது கொழும்பு - 09, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, இல. 609, இ.பெ.கூ. தலைமை அலுவலகம், 5ஆவது மாடி, காசாளருக்கு கோரிக்கைக் கடிதம் ஒன்றில் மீளளிக்கப்படாத கட்டணமாக 35,000.00 ரூபாவைச் செலுத்த வேண்டும் என்பதோடு கேள்விமனு இலக்கம் மற்றும் விலைமனுதாரரின் பெயரை சுருக்கமாகக் குறிப்பிட்டு 004100110208633 என்ற இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மக்கள் வங்கிக் கணக்கு இலக்கத்திற்கு ரொக்கப் பணத்திலும் கொடுப்பனவை மேற்கொள்ள முடியும்.

கேள்விமனு நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புகளைக் கொண்ட விலைமனு ஆவணம் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com என்ற இணையதளத்தில் கிடைக்கப்பெறும்.

மாற்றாக, விலைமனு ஆவணங்களை கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் இருந்தும் பெற முடியும்.

விலைமனுக்கள் 2024 நவம்பர் 13 ஆம் திகதி 1430 மணி வரை அமைச்சு பெறுகைக் குழு, தலைவரினால் ஏற்கப்படும் என்பதோடு சுத்திகரிப்பு மாநாட்டு அறையில் அதன் பின்னர் உடன் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பொருட்கள்)**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**சுத்திகரிப்புப் பிரிவு,**
**சபுகஸ்கந்த, களனி,**
**இலங்கை**
**தொ.: 0094-11-2400110**
**மின்னஞ்சல்: ref.materials@ceypetco.gov.lk**

**சர்வதேச போட்டிரீதியான விலைமனுக்களுக்கான அழைப்பு**

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சுத்திகரிப்புப் பிரிவு)**

**பகிரங்க கேள்விமனு 4520T**

**ROTATING EQUIPMENT ALIGNMENT KIT இன் வழங்கல்**

விலைமனு ஆவணத்தின் கீழ் தரப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை உறுதி செய்யும் வகையில் மேல் குறிப்பிடப்பட்ட வழங்கலுக்காக புகழ்பெற்ற உற்பத்தியாளர்கள், தமது அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு ஏற்றுமதி முகவர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் (உற்பத்தியாளர்கள் அல்லது ஏற்றுமதி முகவர்கள்) இடமிருந்து இலங்கை, களனி, சபுகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படும்.

விலைமனு ஒன்றை சமர்ப்பிக்கும் எந்த ஒரு விலைமனுதாரரும், 2024 ஒக்டோபர் 28 ஆம் திகதி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் 1500 மணிக்கு முன்னதாக களனி, சபுகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவு, காசாளருக்கு அல்லது கொழும்பு - 09, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, இல. 609, இ.பெ.கூ. தலைமை அலுவலகம், 5ஆவது மாடி, காசாளருக்கு கோரிக்கைக் கடிதம் ஒன்றில் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500.00 ரூபாவைச் செலுத்த வேண்டும் என்பதோடு கேள்விமனு இலக்கம் மற்றும் விலைமனுதாரரின் பெயரை சுருக்கமாகக் குறிப்பிட்டு 004100110208633 என்ற இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மக்கள் வங்கிக் கணக்கு இலக்கத்திற்கு ரொக்கப் பணத்திலும் கொடுப்பனவை மேற்கொள்ள முடியும்.

கேள்விமனு நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புகளைக் கொண்ட விலைமனு ஆவணம் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com என்ற இணையதளத்தில் கிடைக்கப்பெறும்.

மாற்றாக, விலைமனு ஆவணங்களை கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் இருந்தும் பெற முடியும்.

விலைமனுக்கள் 2024 ஒக்டோபர் 30 ஆம் திகதி 1430 மணி வரை திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் ஏற்கப்படும் என்பதோடு சுத்திகரிப்பு மாநாட்டு அறையில் அதன் பின்னர் உடன் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பொருட்கள்)**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**சுத்திகரிப்புப் பிரிவு,**
**சபுகஸ்கந்த, களனி,**
**இலங்கை**

**தொ.: 0094-11-2400110**
**மின்னஞ்சல்: ref.materials@ceypetco.gov.lk**

**தேசிய போட்டிரீதியான விலைமனுக்களுக்கான அழைப்பு**

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் – சுத்திகரிப்புப் பிரிவு**

பகிரங்க கேள்விமனு ***4519T***

**குறிப்பிடப்பட்டுள்ளவாறு துண்டுகளில் சீருடைத் துணிகள், துவாய்கள் மற்றும் காலுறைகளின் வழங்கல்**

மேல் குறிப்பிடப்பட்ட உருப்படிகளின் வழங்கலுக்காக உள்ளூர் வழங்குநர்களிடம் இருந்து இலங்கை, களனி, சபுகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படும்.

விலைமனு ஒன்றை சமர்ப்பிக்கும் எந்த ஒரு விலைமனுதாரரும், 2024 ஒக்டோபர் 21 ஆம் திகதி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் 1500 மணிக்கு முன்னதாக களனி, சபுகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவு, காசாளருக்கு அல்லது கொழும்பு - 09, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, இல. 609, இ.பெ.கூ. தலைமை அலுவலகம், 5ஆவது மாடி, காசாளருக்கு கோரிக்கைக் கடிதம் ஒன்றில் மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000.00 ரூபாவைச் செலுத்த வேண்டும் என்பதோடு கேள்விமனு இலக்கம் மற்றும் விலைமனுதாரரின் பெயரை சுருக்கமாகக் குறிப்பிட்டு 004100110208633 என்ற இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மக்கள் வங்கிக் கணக்கு இலக்கத்திற்கு ரொக்கப் பணத்திலும் கொடுப்பனவை மேற்கொள்ள முடியும்.

கேள்விமனு நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புகளைக் கொண்ட விலைமனு ஆவணம் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com என்ற இணையதளத்தில் கிடைக்கப்பெறும்.

மாற்றாக, விலைமனு ஆவணங்களை கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் இருந்தும் பெற முடியும்.

விலைமனுக்கள் 2024 ஒக்டோபர் 23 ஆம் திகதி 1430 மணி வரை திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் ஏற்கப்படும் என்பதோடு சுத்திகரிப்பு மாநாட்டு அறையில் அதன் பின்னர் உடன் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பொருட்கள்)**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**சுத்திகரிப்புப் பிரிவு,**
**சபுகஸ்கந்த, களனி,**
**இலங்கை**
**தொ.: 011-2400110**

# பெறுகை அறிவித்தல்

**கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**

**தேயிலை சிறு தோட்டங்கள் அபிவிருத்திச் சபை**

**விலைக்கோரும் காலத்தை நீடித்தல்**

**ERP முறைமை வழங்குதல் (Supplying), நிறுவுதல் (Installing), தனிப்பயனாக்கம் (Customization), பராமரித்தல் (Maintenance) மற்றும் பயிற்சி (Training)**


2024-09-08ஆம் திகதிய சிலுமின, வாரமஞ்சரி, சண்டே ஒப்சேர்வர் எனும் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட மேற்கூறிய விலைக்கோரலுக்கு இயைபாக 2024-09-26ஆம் திகதி இடம்பெற்ற விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 2024-10-08ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக விலைமனுக்களைச் சமர்ப்பிக்க ஆர்வமுள்ள சகல விலைமனுதாரர்களுக்கும் அறிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை பின்வரும் தொலைபேசி இலக்கங்களில் விசாரித்தறிந்து கொள்ளலாம்.

முறைமை கட்டுப்பாட்டு அதிகாரி - 011-7909048 / 011-7909070
தலைமை அலுவலகம் - 011-7909020 / 011-7909021

**தலைவர்,**
**சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபை,**
**இல. 70, பாராளுமன்ற வீதி, பெலவத்த,**
**பத்தரமுல்ல.**

# விபத்தில் மாணவன் உயிரிழப்பு



**புதிய காத்தான் குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த மாணவன் ஒருவன் மறுநாள் திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார்.

காத்தான்குடி அல் ஹிறா மஹா வித்தியாலயத்தில் ஆண்டு 11 இல் கல்வி கற்கும் காத்தான்குடி 5 அஹமட் பரீட் மாவத்தை வீதியைச் சேர்ந்த முகம்மட் றிஹாம் (16) எனும் மாணவனே உயிரிழந்துள்ளார்

வீட்டிலிருந்து அஹமட் பரீட் மாவத்தை வீதி வழியாக மோட்டார் சைக்கிளில் குறித்த மாணவன் சென்று கொண்டிருந்த போது அந்த வீதியிலுள்ள தூண் மற்றும் சுவர் என்பவற்றில் மோதுண்டதில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த மாணவரின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு குடும்பத்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2023(2024)**

**பெறுபேறுகளை மீளாய்வு செய்தல்**

**விண்ணப்பங்களை நிகழ்நிலை (Online) ஊடாக பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்**

**பெறுபேற்று மீளாய்வின்போது குறித்த விடைத்தாள்கள் பரிசீலனைக் குழுவின் உறுப்பினர்கள் பலரால் முழுமையாகப் பரிசீலிக்கப்படும். விடைத்தாள் மீளாய்வின் பெறுபேறாக புள்ளிகளில் அல்லது கிடைக்கப்பெற்றுள்ள தரங்களில் அதிகரிப்போ அல்லது குறைவோ ஏற்பட வாய்ப்புண்டு என்பதை பரீட்சார்த்திகள் அறிந்திருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றேன்.**

1. குறித்த பரீட்சையின் மீளாய்வு விண்ணப்பங்கள் நிகழ்நிலையில் மாத்திரம் கோரப்படும்.
2. பாடசாலைப் பரீட்சார்த்திகள் மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் ஆகிய இருவகை பரீட்சார்த்திகளும் மீளாய்வுக்கு விண்ணப்பிக்கும் போது தாமே விண்ணப்பங்களை முன்வைக்க வேண்டும்.
3. விண்ணப்பங்கள் 01.10.2024 ஆம் திகதியிலிருந்து 14.10.2024 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
4. மீளாய்விற்காக பின்வரும் முறைகளினூடாக விண்ணப்பிக்கலாம்.
   - ❖ பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளமான (https://www.doenets.lk) இற்குப் பிரவேசித்து 'எமது சேவை' என்பதன் கீழுள்ள நிகழ்நிலை விண்ணப்பப்படிவங்கள் 'பாடசாலைப் பரீட்சைகள்' என்பதனைச் சொடுக்குவதன் மூலம்
   - ❖ பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ செல்லிடத் தொலைபேசிச் செயலியான (Mobile Application) DOE இற்குப் பிரவேசித்து நிகழ்நிலை விண்ணப்பப்படிவங்கள் 'பாடசாலைப் பரீட்சைகள்' என்பதனைச் சொடுக்குவதன் மூலம்
   - ❖ https://onlineexams.gov.lk/eic இற்குப் பிரவேசிப்பதன் மூலம்
5. முறைமையினுள் பிரவேசிக்கும்போது உங்கள் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் க.பொ.த (சா/த) பரீட்சை – 2023(2024) இற்குரிய சுட்டெண்ணைப் பயன்படுத்த வேண்டும்.
6. விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன்னர் தொழில்நுட்ப அறிவுறுத்தல்கள் (Technical Instructions), பொது அறிவுறுத்தல்கள் (Common Instructions) என்பவற்றை வாசித்தல் மற்றும் அறிவுறுத்தல் காணொளியைப் பார்வையிடல் என்பன சரியான முறையில் விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தத் தேவையாகும்.
7. ஒரு பாடத்திற்குரிய மீளாய்விற்கான கட்டணம் ரூ.200 ஆகும். Credit Card / Debit Card மூலம் அல்லது தபாற் கந்தோரில் பணத்தைச் செலுத்தலாம்.
8. பணத்தைச் செலுத்திய பின்னர் விண்ணப்பப்படிவத்தினை PDF வடிவில் பதிவிறக்கம் (Download) செய்ய முடிவதோடு, அவ் விண்ணப்பப்படிவத்தை உங்கள் பொறுப்பில் வைத்திருத்தல் வேண்டும். அதேபோன்று பணம் செலுத்திய பின்னர் உங்களது செல்லிடத் தொலைபேசிக்கு SMS தகவல் கிடைக்கப்பெறும்.
9. மீளாய்வு செய்யத் தேவையான சகல பாடங்களையும் உள்ளடக்கியதாக விண்ணப்படிவங்களைச் சரியாக பூரணப்படுத்துவது விண்ணப்பதாரியின் பொறுப்பாவதோடு, உரிய கட்டணம் செலுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.
10. எந்தவொரு காரணத்திற்காகவும் விண்ணப்பத்திற்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

**முக்கியம்**

❖ **பாடசாலை விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்களில் அதிபரின் பரிந்துரை / கையொப்பம் தேவைப்படாது என்பதை தயவுடன் கவனத்திற்கொள்க.**

**பாடசாலைப் பரீட்சைகள் மதிப்பீட்டுக் கிளை,**
**தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்த, பத்தரமுல்லை.**
**30.09.2024.**

**ஒப்பம் :எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**

# தேருநர் இடாப்பு மீளாய்வு

**தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கமைய 2024 (2) குறைநிரப்பு தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவித்தல்**

2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்திற்கமைய 2024 ஜூன் மாதம் 01 ஆம் திகதி முதல் 2024 செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் ஒரு தினத்தில் 18 வயதை பூர்த்திசெய்யும் பதிவு செய்யப்பட்ட தேருநர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள; 2024(2) குறைநிரப்பு தேருநர் இடாப்பு 2024 ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும்; இங்கே கீழுள்ள அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்திற்காக அதன் II ஆம் நிரலின் நேரொத்த குறிப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள உதவிப் பதிவு அலுவலரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும்; அதன் III ஆம் நிரலின் நேரொத்த குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் / அலுவலகங்களில் வழமையான அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்க முடியுமெனவும்; தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20 அ (10) உப பிரிவின் கீழ் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தினதும் பதிவு அலுவலர் சார்பாக அறியத்தரப்படுகின்றது.

**2024 ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி**
**ராஜகிரிய தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தில்**

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
**தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், தேர்தல் ஆணைக்குழு**

**அட்டவணை**

| I ஆம் நிரல் தேர்தல் மாவட்டம் | II ஆம் நிரல் 2024(2) குறைநிரப்பு தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்திய அலுவலர் | III ஆம் நிரல் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் |
|---|---|---|
| 01. கொழும்பு | எம்.எம்.எஸ்.கே. பண்டார மாபா | கொழும்பு |
| 02. கம்பஹா | டப்ளியூ.ஏ.ஆர்.விக்கிரமசிங்க | கம்பஹா |
| 03. களுத்துறை | காலிந்திர ஜயவீர பெர்னாந்து | களுத்துறை |
| 04. கண்டி | எச்.டீ.என். சம்பத் பெர்னாந்து | கண்டி |
| 05. மாத்தளை | எச்.ஏ.ஈ.புஷ்பகுமார | மாத்தளை |
| 06. நுவரெலியா | கே.ஏ.எல்.எஸ்.கலுகம்பிட்டிய | நுவரெலியா |
| 07. காலி | டப்ளிவ்.எச்.ஆர். விஜய குமார | காலி |
| 08. மாத்தறை | ரீ.டப்ளியூ.போஷிதா கௌமதி | மாத்தறை |
| 09. ஹம்பாந்தோட்டை | என். ரேகன் | ஹம்பாந்தோட்டை |
| 10. யாழ்ப்பாணம் | ஆர்.சீ. அமல்ராஜ் | யாழ்ப்பாணம், கிளிநொச்சி |
| 11. வன்னி | ஜே.ஜெனிட்டன் | மன்னார், வவுனியா, முல்லைத்தீவு |
| 12. மட்டக்களப்பு | எம்.பி.எம். சுபியான் | மட்டக்களப்பு |
| 13. திகாமடுல்ல | கசுன் ஸ்ரீநாத் அத்தநாயக்க | அம்பாறை |
| 14. திருகோணமலை | ஆர்.சசீலன் | திருகோணமலை |
| 15. குருநாகல் | ஆர்.எம்.எச்.பி. ரத்னாயக்க | குருநாகல் |
| 16. புத்தளம் | எஸ்.எல்.ஆர். ஜயநாயக்க | புத்தளம் |
| 17. அநுராதபுரம் | கே. முகுந்தன் | அநுராதபுரம் |
| 18. பொலன்னறுவை | என்.பீ.பீ.ஐ.ஆர்.குணரத்ன | பொலன்னறுவை |
| 19. பதுளை | கே. காந்தீபன் | பதுளை |
| 20. மொனராகலை | என். ரேகன் | மொனராகலை |
| 21. இரத்தினபுரி | சுரங்க அம்பகஹதென்னெ | இரத்தினபுரி |
| 22. கேகாலை | சஜித் பீ. கஸ்தூரிசிங்க | கேகாலை |

# சிறு விளம்பரம்

## வேலைவாய்ப்பு

312

### வெற்றிடங்கள்

**தொழில் நுட்பம்**

கொழும்பில் அமைந்துள்ள பிரபல நீர்க் குழாய் துணைப் பாகங்கள் நிறுவனமான Allied Trading International (pvt) Ltd நிறுவனத்திற்கு பொதுவான Electriccl வேலை மற்றும் CCTV Repairing & maintenance செய்யக் கூடிய குறைந்தபட்சம் இரு வருட அனுபவம் உடைய ஊழியர்கள் தேவை. கொழும்புக்கு அருகில் உள்ளவர்கள் மாத்திரம் அழையுங்கள். 011 7397777, 076 2129669, 011 2331670 (இல. 301, பழைய சோனகத் தெரு, கொழும்பு -12. 064810

## பெயர் மாற்றம்

சம்மாந்துறை - 4 தமிழ் பிரிவு உதய புரம் இல : H/4/8 இல் வசிக்கும் **முனியாண்டி அழகர்** ஆகிய நான் இன்றிலிருந்து **முனியாண்டி அழகிரி** என பெயர் மாற்றம் செய்து கொண்டேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் புதிய பெயரை பயன்படுத்துவேன் எனவும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**- எம். அழகிரி -**

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

---

**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**

**கட்டடங்கள் திணைக்களம்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### தெல்லிப்பளை, தள வைத்தியசாலையில் புற்றுநோய் பிரிவுக்காக Imaging Investigation தொகுதி மற்றும் வாட்டுத் தொகுதியின் நிர்மாணம் - கட்டம் III

(ஒப்பந்த இல.: **BD-557c-Z2/16/CT 061/24**)

1. மதிப்பிடப்பட்ட 115.5 மில்லியன் ரூபா செலவைக் கொண்ட, கீழ் விபரிக்கப்பட்டவாறு "கட்டம் III தெல்லிப்பளை, தள வைத்தியசாலையில் புற்றுநோய் பிரிவுக்காக Imaging Investigation தொகுதி மற்றும் வாட்டுத் தொகுதியின் நிர்மாணத்திற்கு" பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கட்டடங்கள் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.
   பணி நோக்கம்: அகழ்வு மற்றும் நில வேலை, கொங்கிறீட், கட்டுமான வேலை, உலோக வேலை, தச்சு வேலை மற்றும் மூட்டு வேலை, சுவர் மற்றும் உட்கூரை முடித்தல்கள், குழாய் பொருத்தல், மின்சார வேலை, நிறப்பூச்சு, நீர்க் காப்பு, கூரை உறை மற்றும் கூரை குழாய் பொருத்தல், வெளி வடிகால் முதலியன.

**நிர்மாணக் காலம் 364 நாட்கள்**

2. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனுக்கள் மூடப்படும் திகதி வரை செல்லுபடியான, நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) C4 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்துக்காக கட்டட நிர்மாணத் துறையில் பதிவு செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.
   "விலைமனுதாரர்கள் 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் விதிகளில் உள்ள, இலங்கை பொது ஒப்பந்ததாரர்களின் பதிவாளருடன் தம்மை பதிவு செய்திருத்தல் வேண்டும். பதிவின் அசல் சான்றிதழை (*PCA 03*) விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுதாரர் *PCA 03* சான்றிதழை சமர்ப்பிக்கப்படாத வரை எந்த ஒரு விலைமனுதாரருக்கும் பெறுகை வழங்கப்படமாட்டாது".
4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் யாழ்ப்பாணம், குருநகர், கடற்கரை வீதி, கட்டிடங்கள் திணைக்களம், தலைமைப் பொறியியலாளர் (வலயம் 02) இடமிருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு எந்த ஒரு வேலை நாட்களிலும் 9:00 மணி தொடக்கம் 16:00 மணி வரை அதே முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும். தொடர்பு இலக்கங்களானது: தொலைபேசி: 021-2222781, தொலைநகல்: 021-2222781
5. மீளளிக்கப்படாத கட்டணமாக இருபது ஆயிரம் ரூபாவை (ரூபா 20,000/-) செலுத்தி 2024.10.01 ஆம் திகதி தொடக்கம் 2024.10.21 ஆம் திகதி வரை 9:00 மணி தொடக்கம் 15:00 மணி வரை யாழ்ப்பாணம், குருநகர், கடற்கரை வீதி, கட்டிடங்கள் திணைக்களம், தலைமைப் பொறியியலாளருக்கு (வலயம் 02) எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை வாங்கலாம்.
6. விலைமனுக்களை 2024.10.22 ஆம் திகதி 11:00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கட்டடங்கள் திணைக்களம், 2ஆவது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் பத்தரமுல்லை, "செத்சிறிபாய", 2ஆவது மாடி, கட்டடங்கள் திணைக்கள ஒப்பந்தப் பிரிவில் விலைமனுக்கள் ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
7. விலைமனுக்களை ஏற்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட கடைசித் திகதியில் இருந்து 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு அவை;
   - விலைமனு ஆவணத்தின் 11 ஆவது பிரிவில் உள்ளடக்கப்பட்ட வடிவத்தில்
   - கட்டடங்கள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில்
   - 1,700,000.00 ரூபா தொகை ஒன்றுக்காக
   - 2025 பெப்ரவரி 17 ஆம் திகதி வரை செல்லுபடியான
   - விலைமனு தரவின் 17.2 உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

**பொறி. (திருமதி) கே.ஜி.எஸ். குமுதினி**
**கட்டடங்கள் பணிப்பாளர் நாயகம்,**
**கட்டடங்கள் திணைக்களம்,**
**செத்சிறிபாய , பத்தரமுல்லை.**
**www.buildings.gov.lk**

---

இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனு அழைப்பு

| தொ. இல. | விலைமனு இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|---|
| 01 | RDA/CE/COL/TEN/2024/35 | அவிசாவளை EE பிரிவின் சாலை அடையாள பலகைகளை வழங்கல் மற்றும் பொருத்துதல் |

தேசிய போட்டி விலைமனு அழைப்பு ஒழுங்குமுறைகளின் கீழ் மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளுக்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றது. விருப்பமுடைய மனுதாரர்கள் 2024.10.01 முதல் 2024.10.20 வரை வீ.அபி.அ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையத்தளமாகிய **www.rda.gov.lk** க்கு வருகைத்தருமாறு கோட்டுக்கொள்ளப்படுகின்றது

**தலைவர், பிராந்திய கொள்முதல் குழு**
**பிரதான பொறியாளர் அலுவலகம் - கொழும்பு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

SELACINE

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### பொறியியல் பணியகம்

**மேல் மாகாண சபை**

### களுத்துறை – வருமானம் மற்றும் பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கான உத்தேச ஐந்து மாடிக் கட்டிடத்திற்கு பயணிகள் மின்னுயர்த்தியை (11 பயணிகள்) வழங்குதல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்

1. களுத்துறை - வருமானம் மற்றும் பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கான உத்தேச ஐந்து மாடிக் கட்டிடத்திற்கு பயணிகள் மின்னுயர்த்தியை (11 பயணிகள்) வழங்குதல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மேல் மாகாணம், மேல் மாகாண சபையின் பொறியியல் பணியகத்தின் தலைவர், பிரதி பிரதான செயலாளர் (பொறியியல்) தலைவர் இப்போது அழைக்கின்றார்.
   நிர்மாணக் காலம் ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட நாள் முதல் 180 நாட்காட்டி நாட்களாகும்.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை ஊடாக இடம்பெறும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் அல்லது ஒப்பந்தக்காரர்கள் விலைமனுதாரர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் கொடுக்கப்பட்ட காலப்பகுதியில் கைவிடப்பட்டோ அல்லது முடிக்கப்படாமலோ இருத்தல் கூடாது அல்லது முதிர்ச்சியடைவதற்கு முன்பே நிறுத்தப்பட்டிருத்தல் கூடாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   அ) விலைமனுதாரர் பயணிகள் மின்னுயர்த்தியை வழங்குதல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கான வியாபாரப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குபவை:
   அ) விலைமனுதாரர் கடந்த ஐந்து (05) வருடங்களில் இதனையொத்த மற்றும் சிக்கல் தன்மை கொண்ட குறைந்தபட்சம் 6.0 மில்லியன் ரூபா மொத்தச் செலவைக் கொண்ட பயணிகள் மின்னுயர்த்தியை வழங்குதல், நிறுவுதலில் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தபட்சம் இதனையொத்த வகையான ஐந்து (05) எண்ணிக்கையான பயணிகள் மின்னுயர்த்திகளை வழங்குதல் மற்றும் நிறுவல்களை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   ஆ) உற்பத்தியாளர் இதனையொத்த பயணிகள் மின்னுயர்த்திகளை வடிவமைத்தல் மற்றும் உற்பத்தி செய்வதில் குறைந்தபட்சம் பத்து (10) வருடகால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   இ) முன்வைக்கப்படும் பயணிகள் மின்னுயர்த்தியானது குறைந்தபட்சம் கடந்த ஐந்து வருடங்களில் இலங்கையில் திருப்திகரமான சேவை அறிக்கையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   ஈ) விலைமனுதாரர் இதனையொத்த திட்டமிடுதல், பொறியியல், நிறுவுதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல் அல்லது உயர் கொள்ளளவைக் கொண்ட பயணிகள் மின்னுயர்த்தி முறைமையை நிறுவுவதற்கு தமது பணியாளர் குழுவில் அனுபவம் வாய்ந்த நபர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   உ) கடந்த ஐந்து (05) வருடங்களில் பயணிகள் மின்னுயர்த்தியை வழங்குதல், நிறுவுதல் வேலைகளின் சராசரி வருடாந்த புரள்வானது 16 மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
   ஊ) இந்த ஒப்பந்தத்தின் கீழ் பெறப்பட்ட ஏதாவது முற்பணங்கள் தவிர ஏனைய ஒப்பந்தக் கடப்பாடுகளுக்கு ஒதுக்கப்பட்டதன் பின்னரான குறைந்தபட்ச திரவச் சொத்து அல்லது / மற்றும் கடன் வசதிகளின் தொகை 4.00 மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் இருக்க வேண்டும்.
   எ) ஒப்பந்தம் கையளிக்கப்படுவதற்கு முன் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் விலைமனுதாரர் தம்மைப் பதிவு செய்துகொண்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பத்தரமுல்ல, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 5ஆம் தளம், (மேமா) பொறியியல் பணியகத்தின் பணிப்பாளர் (பொறியியல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 011-2092507, தொலைநகல்: 0112-092508 மின்னஞ்சல்: **procurementuniteng@gmail.com** மற்றும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் இதே முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக நான்காயிரம் (4,000.00 ரூபா) ரூபாவைச் செலுத்திய பின்னர் 2024-10-01ஆம் திகதி முதல் 2024-10-15ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பத்தரமுல்ல, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 5ஆம் தளம், (மேமா) பொறியியல் பணியகத்தின் பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்) அவர்களுக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
7. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை தலைவர், பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்), பொறியியல் பணியகம் (மேமா), 204, 5ஆம் தளம், டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு 2024-10-16ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைத்தல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தலைவர், பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்), பொறியியல் பணியகம் (மேமா), 204, 5ஆம் தளம், டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரியில் சமுகம் தந்துள்ள விலைக்கோரலில் கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதி நாள் முதல் 77 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.
9. சகல விலைமனுக்களுடனும் ஒன்றில் 52,500.00 (ஐம்பத்திரண்டாயிரத்து ஐந்நூறு) ரூபா பண வைப்பு அல்லது 105,000.00 ரூபா (ஒரு இலட்சத்து ஐந்தாயிரம் ரூபா) பெறுமதியான விலைமனு ஆவணத்தின் 9ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள வடிவத்தின் பிரகாரம் பத்தரமுல்ல, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 5ஆம் தளம், (மேமா) பொறியியல் பணியகத்தின் பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்) அவர்களுக்கு முகவரியிடப்பட்ட விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 105 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும். செல்லுபடியாகும் விலைக்கோரல் பிணை முறி இணைக்கப்படாத ஏதேனும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**பிரதிப் பிரதான செயலாளரின் (பொறியியல்) (மேமா), பெறுகைக் குழு,**
**பொறியியல் பணியகம்,**
**204, 5ஆம் தளம்,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

| | | |
|---|---|---|
| **தொலைபேசி** | : | **011-2092501** |
| **தொலைநகல்** | : | **011-2092505** |
| **மின்னஞ்சல்** | : | **procurementuniteng@gmail.com** |

---


Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want Classified




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-

077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Maharagama - TEL : 011 2 828 114 FAX : 011 4 828 114 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361


---

**மாநகர சபை – குருநாகல்**

## பெறுகை அறிவித்தல்

### குருநாகல் மாநகர சபைக்குரித்தான சேவைவை ஒரு வருட காலத்திற்கு வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன

| பெயர் | விலைமனு படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை வைப்புத் தொகை |
|---|---|---|
| புதிய சந்தைக் கட்டிடத்தொகுதியை சுத்திகரிக்கும் சேவையை நடாத்திக்கொண்டு செல்லல் மற்றும் மலசலகூடத் தொகுதிக்கான கட்டணங்களை அறவிடுதல் | 3,000.00 + VAT | 10,000.00 |
| ரஜபிஹில்ல பூங்காவைப் பராமரித்தல் | 3,000.00 + VAT | 10,000.00 |

மேற்குறிப்பிடப்பட்ட விலைக்கோரலுக்கான விலைக்கோரல் ஆவணங்களை 2024-10-01ஆம் திகதி முதல் 2024-10-15ஆம் திகதி முதல் 2024-10-15ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரையான அலுவலக நேரங்களில் குருநாகல் மாநகர சபையின் கணக்கிடல் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். உங்களது முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-10-16ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் ''மாநகர ஆணையாளர், மாநகர சபை, குருநாகல்'' எனும் முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும் அல்லது தலைமை மாநகர கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடல் வேண்டும். 2024-10-16ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இதில் உங்கள் நிறுவனத்தில் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**விபரங்களுக்கு:**
**தொலைபேசி: 037-4941869**
**மின்னஞ்சல்: ginumviyadam@gmail.com**
**தொலைநகல்: 037 2228136**

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**குருநாகல்.**
**2024-09-30**

---

## காலத்தை நீடிக்கும் அறிவித்தல்

### முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள்

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

**சுற்றாடல் அமைச்சு**

### கமத்தொழில், வனவியல் மற்றும் ஏனைய காணிப் பயன்பாட்டுத் துறைக்கு (AFOLU) மேம்படுத்தப்பட்ட வெளிப்படைத் தன்மை கட்டமைப்புத் திட்டம் (ETF)

**அறிக்கையிடல் மற்றும் சரிபார்ப்பிற்கு (MRV) சர்வதேச ஆலோசகரொருவரை பணிக்கமர்த்துதல்**

2024 ஆகஸ்ட் 27ஆம் திகதிய தினகரன், தினமின மற்றும் டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் பின்வரும் இணையதளத்தில் பிரசுரமான அறிக்கையிடல் மற்றும் சரிபார்ப்பிற்கு (MRV) சர்வதேச ஆலோசகரொருவரை பணிக்கமர்த்தலுக்கு முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் ஒக்டோபர் 15ஆம் திகதி நள்ளிரவு 12.00 (நள்ளிரவு - இலங்கை) வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இத்தால் தயவுடன் அறிவிக்கப்படுகின்றது.

www.climatechange.lk
www.env.lk

ஆலோசகர்களுக்கான அறிவுறுத்தல்கள், குறிப்பு விதிமுறை (TOR) மற்றும் முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கான வடிவங்களை மேற்கூறிய இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

இதன் பிரகாரம், ஆர்வமுள்ள ஆலோசகர்கள் தங்கள் தொழில்நுட்ப மற்றும் நிதியியல் முன்மொழிவுகளை தனித்தனி ஆவணங்களாக 2024 ஒக்டோபர் 15ஆம் திகதி 12.00 மணிக்கு (நள்ளிரவு - இலங்கை) முன் cfpafolu@gmail.com எனும் மின்னஞ்சலின் ஊடாக pdf வடிவில் குறியாக்கம் செய்யப்பட்ட கடவுச் சொல்லுடன் சமர்ப்பிக்கலாம். மின்னஞ்சலைத் திறப்பதற்கான கடவுச் சொல்லை இதே மின்னஞ்சல் முகவரிக்கு 2024 ஒக்டோபர் 16ஆம் திகதி மு.ப. 9.30 (இலங்கை) மணிக்கு முன் அனுப்புதல் வேண்டும். முன்மொழிவுகள் 2024 ஒக்டோபர் 16ஆம் திகதி மு.ப. 11.00 (இலங்கை) மணிக்கு திறக்கப்படும்.

**டாக்டர் R.D.S. ஜயதுங்க,**
**தலைவர்,**
**அமைச்சு ஆலோசனை பெறுகைக் குழு,**
**சுற்றாடல் அமைச்சு, இலங்கை.**

**2024-09-30.**

---

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**2023ஆம் ஆண்டு க.பொ.த. (உ/தர) (2024) இன்படி, மறுகணிப்பு செய்யப்பட்ட பெறுபேறுகள் மற்றும் பரீட்சைத் திணைக்களத்தினால் இடைநிறுத்தப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் 2023/2024 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

பரீட்சைத் திணைக்களத்தினால் 2024ஆம் ஆண்டு செப்டெம்பர் 4ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 2023ஆம் ஆண்டு க.பொ.த (உ/தர) பரீட்சைக்கான (2024) மறுகணிப்பு செய்யப்பட்ட பெறுபேறுகள் மற்றும் இடைநிறுத்தப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் 2023 /2024 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க தகுதிபெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து **2024 ஒக்டோபர் 1 முதல் 2024 ஒக்டோபர் 8 வரையான** காலப்பகுதிகளில் ஆன்லைன் விண்ணப்பங்களை கோர பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) தீர்மானித்துள்ளது.

மேலும், விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பது குறித்த மேலதிக விபரங்கள், UGC இன் உத்தியோகபூர்வ இணையதளத்தில் (www.ugc.ac.lk) வெளியிடப்பட்ட 2023/2024 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை கோருவது குறித்து முன்னர் வெளியிடப்பட்ட செய்தித்தாள் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**முக்கியம்**

**2023 /2024 கல்வியாண்டின் விண்ணப்பதாரர்களுக்கு கற்கைகளுக்கான முன்னுரிமை வரிசையை மாற்றுவதற்கு முன்னர் வழங்கப்பட்ட இரண்டு வார கால அவகாசம் இச் சந்தர்ப்பத்திற்குப் பொருந்தாது என்பதை நினைவில் கொள்ளவும்.**

**மேலும், முன்னர் குறிப்பிட்டதன்படி 2023 /2024 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு வழங்கப்படும் வாய்ப்பானது, குறிப்பிட்ட பல்கலைக்கழகங்கள் / வளாகம் உயர் கல்வி நிறுவகங்களால் ஏற்கனவே முடிவடைந்த தகுதிகாண் பரீட்சை / நடைமுறைப் பரீட்சைகளுடன் கூடிய கற்கைகளுக்கு விண்ணப்பிப்பதற்குப் பொருந்தாது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.**

**தலைவர்**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**
**01.10.2024**

## வெற்றிட அறிவித்தல்

**கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார விவகார அமைச்சு**
**சப்ரகமுவ மாகாண சபை**

### இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 1ஆம் தர அதிகாரிகள் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் பதவி மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கு தெரிவு செய்து நியமித்தல் - 2024

சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சின் கீழ் நிலவும் சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் பதவி மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கு (பலாங்கொட, எம்பிலிப்பிட்டிய மற்றும் கேகாலை) இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 1ஆம் தரத்தில் தகைமை வாய்ந்த அதிகாரிகளிடமிருந்து நாடளாவிய ரீதியில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த ஆட்சேர்த்தல் தொடர்பான மேலதிக விபரங்களை சப்ரகமுவ மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார விவகார அமைச்சின் **www.moe.sg.gov.lk** எனும் உத்தியோகபூர்வ இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன என்பதுடன், இயைபுடைய விண்ணப்பப் படிவங்கள் மற்றும் புள்ளிகள் வழங்கும் நடைமுறை என்பவற்றை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

விண்ணப்பங்கள் கோரும் இறுதி நாள் 2024-10-30ஆம் திகதியாகும்.

**பீ.ஏ.சீ.பீ. பமுனுஆரச்சி,**
**செயலாளர்,**
**கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார விவகார அமைச்சு,**
**சப்ரகமுவ மாகாண சபை.**
**2024-10-01.**

## தொம்பே பிரதேச சபை

### 2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவுசெய்தல்

பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குவதற்காக, வழங்குநர்கள் மற்றும் கைத்தொழிற்றுறை வேலைகளை மேற்கொள்வதற்காக ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்கள் 2024.10.01ஆம் திகதி முதல் 2024.11.15ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான வாரத்தின் அனைத்து வேலை நாட்களிலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதிவிற்காக விண்ணப்பிக்கும் நிறுவனத்தின் அல்லது நபரின் சுய விபரங்களை உள்ளடக்கிய விண்ணப்பமொன்றை நீங்களே தயார் செய்து கொள்ள வேண்டும். இந்த அனைத்து விண்ணப்பங்களும் பதிவுக் கட்டணத்துடன், பதிவுத் தபாலில் 'செயலாளர், தொம்பே பிரதேச சபை, கிரிந்திவெல' என்ற முகவரிக்கு 2024.11.15ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். வழங்குநர் எத்தனை உருப்படிகளையும் வழங்குவதற்காக பதிவு செய்து கொள்ளலாம் என்பதுடன் உருப்படியொன்றிற்காக ரூ. 2000.00 (வரிகள் இன்றி) செலுத்துதல் வேண்டும். இதன்பொருட்டு காசுக் கட்டளை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கிரிந்திவெலயில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்திற்கு வருகை தந்து காசோலை மூலம் அல்லது ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும். காசோலை மூலம் பணம் செலுத்தப்படுவதானால் 'தலைவர், தொம்பே பிரதேச சபை' என்ற பெயரில் காசோலை அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2025' எனக் குறிப்பிட வேண்டும்.

**அட்டவணை இல. 01**

**(அ) வழங்கல்கள்**

01. அலுவலக உபகரணங்கள் (உருக்கு, பிளாஸ்டிக் மற்றும் மரத்திலான உபகரணங்கள்)
02. காகிதாதிகள்.
03. வீதி விளக்கு தொகுதி மற்றும் அனைத்து மின்சார பராமரிப்பு உபகரணங்கள்.
04. குப்பை வண்டி, சுகாதார உபகரணங்களை வழங்குதல்.
05. கட்டிடப் பொருட்கள் மற்றும் நிறப்பூச்சு வகைகள்.
06. வாகன திருத்தவேலைகள், தகர வேலை, நிறப்பூச்சு போன்றவை.
07. கைத்தொழில் உபகரணங்கள், வீதி உபகரணங்கள் மண்வெட்டி மற்றும் பட்டறை ஆயுதங்கள் வழங்குதல்
08. சீருடைத் துணிகள் மற்றும் காலணிகள்.
09. கொங்கிறீட் ஹியும் குழாய்கள் மற்றும் செப்டிக் தாங்கிகள்
10. அனைத்து வகையான தார் மற்றும் கோலாஸ்
11. ரோணியோ இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், கணக்கிடும் இயந்திரம், கணனி இயந்திரம் போன்ற உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல்
12. கிருமிநாசினி பொருட்கள் வழங்குதல்
13. இலொக்ட்ரோனிக் உபகரணங்கள் வழங்குதல்
14. டயர், டியூப், டேபர் மற்றும் வாகன பற்றரி வகைகளை வழங்குதல்
15. விளையாட்டுத்துறை பொருட்கள் வழங்குதல்
16. ஆயுர்வேத ஔடதங்களைத் தயாரிக்கும் மூலப் பொருட்கள்

**(ஆ) சேவைகள் வழங்குதல்**

01. நொத்தாரிஸ் மற்றும் சட்டத்தரணி சேவைகள்.
02. நில அளவை சேவை.
03. வாகனங்களை சேர்விஸ் செய்தல்
04. பட்டறை தொழிலாளிகளின் சேவை.
05. கலி பவுசர்/ நீர் பவுசரை வாடகைக்கு வழங்குதல்
06. இரும்பு வேலையாட்களின் சேவை (ஒட்டுவேலைகள்)
07. தகனசாலை திருத்தவேலைகள்
08. வளிச்சீராக்கிகளின் திருத்தவேலைகள் (வாகனம் மற்றும் அலுவலகம்)
09. ஆவணங்களை அச்சிடும் வேலைகள்
10. குப்பை வண்டிகள், சுகாதார உபகரணங்களின் திருத்தவேலைகள்
11. மோட்டார் வாகனங்களின் திருத்தவேலைகள் மற்றும் குஷன் வேலைகள்
12. தட்டச்சு, ரோணியோ இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திர திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
13. கணனி இயந்திரங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ்
14. அபாயகரமான மரங்களை வெட்டி அகற்றல்.
15. மொழிபெயர்ப்புச் சேவைகளை வழங்குதல் (ஆங்கிலம்/ தமிழ்)

**(இ) ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்ளல்.**

ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான கட்டணம்.

| | | | |
|---|---|---|---|
| 01. | 100,000.00 ரூபாவிற்குக் குறைவான ஒப்பந்தங்கள் | ரூ. | 2000.00 |
| 02. | 100,001.00 ரூபா முதல் 250,000.00 ரூபா வரை | ரூ. | 2500.00 |
| 03. | 250,001.00 ரூபா முதல் 500,000.00 ரூபா வரை | ரூ. | 3000.00 |
| 04. | 500,001.00 ரூபா முதல் 1,000,000.00 ரூபா வரை | ரூ. | 3500.00 |
| 05. | 1,000,001.00 ரூபாவிற்கு மேற்பட்ட ஒப்பந்தங்கள் | ரூ. | 4000.00 |

**பொதுவான நிபந்தனைகள்**

01. முன்னைய வருடத்தில் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்பட்ட வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்துகொள்ளத் தகைமையற்றவர்கள் என்பதுடன் அவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
02. பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பிக்கும் அனைத்து வழங்கல் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் தமது வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குபவர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள், அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட வரி நிபந்தனைகளுக்கு மற்றும் சபை சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படல் வேண்டும்.
04. வழங்குநர்கள் குறைந்தபட்சம் 60 நாட்கள் கடன் வசதியை வழங்குதல் அவசியமாகும்.
05. தேவைப்படும் பட்சத்தில் பதிவேட்டிற்குப் புறம்பாகவும் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை தொம்பே பிரதேச சபை கொண்டுள்ளது.
06. ஒன்றுக்கு மேற்பட்ட உருப்படிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் ஒவ்வொரு உருப்படிக்கும் வெவ்வேறாக விண்ணப்பித்து குறித்த பதிவுத் தொகையைச் செலுத்துதல் அவசியமாகும்.
07. மேலதிக விபரங்கள் தேவையெனில், 033-2269260 எனும் எமது பொது தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

2024.10.01

**டீ. அஜித் ரணசிங்க,**
**செயலாளர் மற்றும் தொம்பே பிரதேச சபையின்**
**அதிகாரம் வாய்ந்த வேலைகளை செயற்படுத்தும்**
**அதிகாரி.**

## பன்னல பிரதேச சபை

### 2025 ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2025ஆம் வருடத்தினுள் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகள், பொருட்களை வழங்குதல் மற்றும் ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். சுயமாகத் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் பெயர், முகவரி, வியாபாரத்தின் தன்மை, தகைமை மற்றும் ஏனைய விபரங்களைக் குறிப்பிட்டு பதிவுக் கட்டணம் சகிதம் பதிவுத் தபாலில் எனக்கு அனுப்புதல் வேண்டும். காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகளை ''செயலாளர், பன்னல பிரதேச சபை - பன்னல'' என்று எழுதி அனுப்புதல் வேண்டும். பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் 2024-12-26ம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முடிவுறுத்தப்படும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2025ஆம் வருடம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

| | வழங்கல்கள் | பதிவு கட்டணம் |
|---|---|---|
| 1. | மின்னுபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் (வீதி விளக்குகளுக்கான பகுதிகளுடன்) | 3000.00 |
| 2. | அலுவலக உபகரணங்கள் - மரம், உருக்குத் தளபாடங்கள் | 2000.00 |
| 3. | காகிதாதிகள், அச்சடிக்கப்பட்ட படிவங்கள் மற்றும் ஆவணங்கள் | 2000.00 |
| 4. | வாகன உதிரிப்பாகங்கள் - டயர், டியூப் மற்றும் பட்டறிகள் | 2000.00 |
| 5. | நீர்க் குழாய் வேலைகளுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் | 2000.00 |
| 6. | வாகன அனுமதிப்பத்திர தகடுகள், வரிப்பணத் தகடுகள், வாகன ஸ்டிக்கர்கள் | 2000.00 |
| 7. | சுகாதார பிரிவிற்கான உபகரணங்கள் மற்றும் கிருமிநாசினித் திரவங்கள் (கம்பூட்ஸ், கையுறைகள் உட்பட) | 2000.00 |
| 8. | நூலகப் புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் | 2000.00 |
| 9. | கைத்தொழிலுக்குத் தேவையான பொருட்கள் (கல், மணல், கிரவல், சீமெந்து, தார், பிரிமிக்ஸ், சிறிய கற்கள்) | 2000.00 |
| 10. | வீதிப் பராமரிப்பு உபகரணங்கள் (தாச்சி, இரும்பு ஏணி, ரேக்கை, வீல்பரோ, பிரம்புக் கூடை, புல் வெட்டும் இயந்திரம் போன்றன) | 2000.00 |
| 11. | சீருடைத் துணிகள், முன்பள்ளி சீருடைகள் (துணி, சாரி, தொப்பிகள், பைகள், தண்ணீர் போத்தல்கள், குடைகள் உட்பட) | 2000.00 |
| 12. | விளையாட்டுப் பொருட்கள் | 2000.00 |
| 13. | சகல வகையான குழாய்கள், கம்பித் தூண்கள் மற்றும் கொங்கிறீட் உற்பத்திகள் | 2000.00 |
| 14. | சகல வகையான தும்பு உற்பத்திகள் மற்றும் இறப்பர் உற்பத்திகள் (ஈர்க்கிள், பிரஸ், காபட்) | 2000.00 |
| 15. | சகல வகையான நிறப்பூச்சுகள் | 2000.00 |
| 16. | விளம்பரப் பலகைகள் (டிஜிட்டல் மற்றும் ஏனையவை) | 2000.00 |
| 17. | நாய்களுக்கான கழுத்துப் பட்டிகள் | 2000.00 |
| 18. | புகைப்படப் பிரதி இயந்திரம் மற்றும் அச்சு இயந்திரங்களுக்குத் தேவையான மை மற்றும் டோனர் வழங்கல் | 2000.00 |
| 19. | எரிவாயு (L.P) 37.5 கி.கிராம் | 2000.00 |
| 20. | நடமாடும் மலசலகூடம் | 2000.00 |
| 21. | கன்று வகைகள் (பழ வகைகள், மரக்கறி, மலர்கள், மூலிகைகள், கும்புக், மீ போன்ற ஏனையவை) | 2000.00 |
| 22. | மலர்ச் சாடிகள் | 2000.00 |
| 23. | அப்பியாசக் கொப்பிகள் உட்பட பாடசாலை உபகரணங்கள் | 2000.00 |
| 24. | மின்பிறப்பாக்கி | 2000.00 |
| 25. | வளிச்சீராக்கி இயந்திரங்கள் | 2000.00 |
| 26. | திரைச்சீலைகள் | 2000.00 |
| 27. | வீட்டுத் தளபாடங்கள் | 2000.00 |
| 28. | கணனி மற்றும் டெப்கள் | 2000.00 |
| 29. | ஆயுர்வேத ஒப்பனைப் பொருட்கள் | 2000.00 |
| 30. | வேல்டிங் வேலைகள் | 2000.00 |
| 31. | சுத்திகரிப்புப் பொருட்கள் | 2000.00 |
| 32. | வைபவ மண்டபங்களை வழங்குதல் | 2000.00 |
| 33. | பென்சி பொருட்கள் | 2000.00 |

**சேவைகள்**

| | | |
|---|---|---|
| 1. | வாகனங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் வாகன திருத்தவேலைகள் (அதிகாரப் பிரதேசத்திற்குள் அல்லது அதற்கண்மையில் அமைந்திருத்தல் வேண்டும்) | 2000.00 |
| 2. | அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் (கணனி, புகைப்படப் பிரதி, தட்டச்சுப்பொறி, ரோணியோ இயந்திரம்) | 2000.00 |
| 3. | இறப்பர் முத்திரை வெட்டுதல், விளம்பரம் மற்றும் பதாகைகள் அச்சிடல் | 2000.00 |
| 4. | டயர் மற்றும் டியூப்களை மீள நிரப்புதல் | 2000.00 |
| 5. | போக்குவரத்திற்கான வாகனங்களை வாடகைக்கமர்த்துதல் (டிராக்டர், லொறி, டிப்பர் 1, 2, 3 கியூப், ஒரு கி.மீற்றர் மற்றும் 1 கி.மீற்றருக்கு மேற்பட்டவைகளுக்கான வாடகை, தண்ணீர் பவுசர்கள் 3000/5000 லீட்டர், 8/10/12 தொன் வீதி அழுத்தும் இயந்திரம், வெக்கர், டிரேலருடனான டிராக்டர் சகிதம் பகோ 30) | 2000.00 |
| 6. | அபாயகரமான மரங்களை வெட்டி அகற்றுதல் | 2000.00 |
| 7. | பத்திரிகைகள், போத்தல் மற்றும் சிதைந்த பொருட்களை கொள்வனவு செய்தல் | 2000.00 |
| 8. | மரத் தளபாடங்களின் திருத்தவேலைகள் | 2000.00 |
| 9. | சட்டச் சேவை மற்றும் நிலஅளவைச் சேவைகள் | 2000.00 |
| 10. | ஒலிபெருக்கிகள், உற்சவப் பொருட்கள், தற்காலிக கூடாரங்களை வாடகைக்கு வழங்குதல் | 2000.00 |
| 11. | தச்சு வேலை, மேசன் வேலை, உருக்கியொட்டும் வேலை, நீர்க்குழாய் தொழில்நுட்பச் சேவை, உள்ளக தொலைபேசிச் சேவை | 2000.00 |
| 12. | அலுவலக அடையாள அட்டைகளைத் தயாரித்தல் | 2000.00 |
| 13. | நீரிறைக்கும் இயந்திரம், புல் வெட்டும் இயந்திரங்களின் திருத்தவேலைகள் | 2000.00 |
| 14. | கணனி வலையமைப்பிடல் | 2000.00 |
| 15. | ஒலிபெருக்கி இயந்திரங்களை வழங்குதல் | 2000.00 |

**ஒப்பந்தக்காரர்கள்**

**(கவனிக்கவும்: 10 இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட ஒப்பந்தப் பதிவுகளுக்கு ICTAD சான்றிதழ் கட்டாயமாகும்)**

| | | |
|---|---|---|
| 1. | ஒரு இலட்சம் ரூபா (100000.00) முதல் 500000.00 வரையான வேலைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள் | 4000.00 |
| 2. | ரூபா 500000.00 முதல் 1000000.00 வரையான வேலைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள் | 6000.00 |
| 3. | ரூபா 1000000.00க்கு மேற்பட்ட வேலைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள் | 8000.00 |

பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் சகல வழங்குநர்களும் ஆளடையாளத்தை உறுதி செய்வதற்கு வியாபாரப் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்திய பிரதியொன்றை விண்ணப்பத்துடன் அனுப்புதல் வேண்டும்.

தேவையான வேளைகளில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் அல்லது ஒப்பந்தக்காரர்களைத் தவிர்ந்த ஏனைய வழங்குநர்களிடமிருந்து வழங்கல் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரத்தை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

மேலதிக விபரங்களை கடமை நேரங்களில் அலுவலகத்தில் விசாரித்தறிந்துகொள்ளலாம்.

**தொலைபேசி: 037-2246069**
**2024-09-27ஆம் திகதி**
**பன்னல பிரதேச சபை தலைமை அலுவலகத்தில்.**

**ஜே. ஏ. சுஜீவனி ஜயசிங்க,**
**செயலாளர்,**
**பன்னல பிரதேச சபை**


## எல் பீ பினான்ஸ் பி.எல்.சி பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ பினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் | திகதி | முகவரி |
|---|---|---|
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 124, காலி வீதி, தெகிவளை. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 676, காலி வீதி, கொழும்பு 03. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 269, பிரதான வீதி, அத்திடிய. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 84 A, காலி வீதி, தெகிவளை. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 51A, W.A. சில்வாமாவத்தை, கொழும்பு 06. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 508, காலி வீதி, பாணந்துறை. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 37, ஜயதிலகமாவத்த, பாணந்துறை. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 18, கெசல்வத்த, பாணந்துறை. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 175/A, காலி வீதி, பேருவளை. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 358/D, மதுக்கம வீதி, தர்கா நகரம். |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 534, காலி வீதி, வாட்டுவ. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 358, காலி வீதி, அளுத்கம. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 25, யட்டியந்தோட்ட வீதி, அவிசாவளை. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 261/1, குடபுத்கமுவ, முல்லேரியா புதிய நகரம, கொட்டிகாவத்த. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 24/A, பிரதான வீதி, கன்வெல்ல. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 25A, பிரதான வீதி, ஹெலியகொட. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 755/1, பன்னிப்பிட்டியவீதி, பத்தரமுல்ல. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 434, E.W.பெரேரா மாவத்தை, கோட்டை வீதி, பிடகோட்டை. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 92, ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொட. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 595, உயர்மட்ட வீதி, கங்கொடவில, நுகேகொட. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 103, பாணந்துறை வீதி, ஹொரண. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 68, ஹொரண வீதி, பிலியந்தல. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 28, தெகிவளை வீதி, பொரலஸ்கமுவ. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 66, காலி வீதி, கல்கிசை. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 129, பழைய காலி வீதி, மொரட்டுவ. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 227, டி சொய்சா வீதி, மொறட்டுமுல்லை, மொறட்டுவ. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 91, உயர்மட்ட வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 11, கல்தேமுல்ல வீதி, மொறட்டுவ. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 19, தனயம் பிவிசம் மாவத்தை, பலாங்கொட. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 167, பிரதான வீதி, பண்டாரவல. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 26, வங்கி வீதி, பதுளை. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 89, கீழ் தெரு, பதுளை. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 87. பிரதான வீதி, பிட்டிகல. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 48, இரத்தினபுர வீதி, பதுரலிய. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 96, அகலவத்தை வீதி, மத்துகம. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 49, சேனநாயக்க மாவத்தை, இரத்தினபுரி. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 207, பிரதான வீதி, இரத்தினபுரி. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 34, பிரதான வீதி, திஸ்ஸமஹாராம |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 21, புதிய நகர வீதி, எம்பிலிப்பிட்டிய. |
| 01/04/11/18 | நவம்பர் 2024 | இல. 138 D/1, ஹம்பாந்தோட்ட வீதி, அம்பலாந்தோட்ட. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 150, பிரதான வீதி, காலி. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 66, திஸ்ஸ வீதி, தங்கல்லே. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 2, H.V. கட்டிடம், டெல்லாவ வீதி, நெலுவ. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 282, அநாகரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 134, அநாகரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொடை. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 598 E, ஹிரிம்புரா வீதி, கராபிட்டிய. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 149, பிரதான வீதி, தெனியாய. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 13, ஸ்டேஷன் ரோடு, மாத்தறை. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 83, தெனியாய வீதி, அக்குரஸ்ஸ. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 722, விஹார சந்தி, வரகொட வீதி, களனி. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 482, அவிசாவளை வீதி, கடுவெல்ல. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 136/12H, கண்டி வீதி, கடவத்த. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல: 365, உயர்மட்ட வீதி, கொட்டாவ. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 419, கோட்டை வீதி, ராஜகிரிய. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 835/2A, தலங்கம, யர்த், மாலபே. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 124/A, துட்டகெமுனு வீதி, கொகுவெல்ல. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 69, தெகிவளை வீதி, மகரகம. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 227/A, உயர்மட்ட வீதி, வத்தேகெதர, மகரகம. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 76, உயர்மட்ட வீதி, ஹோமாகம. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 50/12, கொடகம வீதி, அதுருகிரிய. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 145, மலாய் வீதி, கொழும்பு 02. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 54, D. S. சேனநாயக்க மாவத்தை, பொரல்லை. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 239, கிருள வீதி, நாரஹேன்பிட்டிய |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 282, நாகலகம் வீதி, கொழும்பு 14. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 52/17, கொத்தடுவ புதிய நகரம், கொத்தடுவ. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜயசுந்தர மாவத்தை, கொழும்பு 07. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 197, மன்ஸ் வீதி, கொழும்பு10. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 65/A, ஸ்ரீ சதர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 1024, மருதானை வீதி, கொழும்பு 10. |
| 05/12/19/25 | நவம்பர் 2024 | இல. 72, சைமண்ட்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 26, கண்டி வீதி, மதவாச்சிய. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம். |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 56, சந்தை இடம், அனுராதபுரம். |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம். |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 219, புத்தளம் வீதி, நொச்சியகம. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 03, சென்.லூசியாஸ் வீதி, கொட்டஹேனா. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 149, KB கிறிஸ்டி பெரேரா மாவத்தை, கொழும்பு 13. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 21, சென்.ஜோசப் வீதி, கிராண்ட்பாஸ். |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 81, மோதர வீதி, கொழும்பு 15. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 18, எலகந்த, ஹெந்தல, வத்தல. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 255/B, ஹெந்தலை வீதி, ஹெந்தலை. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 3/729, பண்ணை வீதி, கொழும்பு 15. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 47, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 530, அளுத் மாவத்தை வீதி, கொழும்பு15. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 107, சென்.ஜோசப் வீதி, நீர்கொழும்பு. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 110, சிலாபம் வீதி, கொச்சிக்கடை. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 40 A, கொழும்பு வீதி, சிலாபம். |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 106 C, குருநாகல வீதி, புத்தளம். |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 75 A, சிலாபம் வீதி, மாரவில. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 84, பிரதான வீதி, கல்பிட்டிய. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 17, ஸ்டேஷன் வீதி, ஹெந்தல சந்தி, வத்தளை. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 661/A, தெவத்த வீதி, ராகம. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 39, கொழும்பு வீதி, கந்தானை. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, யா-எல. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 434, பேஸ்லைன் வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | பிரதான வீதி, மெதிரிகிரிய. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | ராஜரட்டகட்டிடம், பிரதானவீதி, கதுருவெல்ல, பொலன்னறுவை. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 114, பிரதானவீதி, கந்தல |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 19, பிரதான வீதி, கேகாலை. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 230, கண்டி வீதி, மாவனெல்ல. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 81, கண்டி வீதி, வரக்காப்பொல. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 57, வெயாங்கொட வீதி, மினுவாங்கொடை. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 1B, பௌத்தலோக மாவத்தை, கம்பஹா. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 16, நீதிமன்ற வீதி, கம்பஹா. |
| 06/13/20/26 | நவம்பர் 2024 | இல. 69, கிருல்ல வீதி, திவுலப்பிட்டிய. |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 3, நுவரெலியா வீதி, வெலிமட. |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 52, உடபுசல்லாவ வீதி, ராகலை. |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 71, ராணி எலிசபெத் மாவத்தை, நுவரெலியா. |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 473, நுவரெலியா வீதி, புசல்லாவ. |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 22, நுவரெலியா வீதி, கம்பொலை. |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 52, டன்பரா வீதி, ஹட்டன். |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 73, கொத்மலை வீதி, நாவலப்பிட்டிய. |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 175, பிரதான வீதி, மஸ்கெலிய. |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டிய. |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 74/76, கண்டி வீதி, குருநாகல். |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 21, தம்புள்ளை வீதி, குருநாகல். |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 35, சரஸ்வி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல. |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ. |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 115, கொடுகொடெல்ல வீதி, கண்டி. |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 865, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கண்டி. |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 298, கொழும்புவீதி, பிலிமத்தலாவ. |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 13A, கண்டி வீதி, கெலியோயா. |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 66, நாவலப்பிட்டிய வீதி, கம்பளை. |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 44/1, புதிய பஸ் நிலைய வீதி, மொனராகலை. |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 153, மடவல வீதி, கடுகஸ்தோட்ட. |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 94, ராஜா வீதி, மாத்தளை. |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 226, டி.எஸ். சேனநாயக்க வீதி, கண்டி. |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 38, குருநாகல் சந்தி, தம்புள்ளை. |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 31, குருநாகல் வீதி, கலேவெல. |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 14, புதிய நகரம், திகன. |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 56,57, எட்வின் விக்கிரமரத்ன வணிக வளாகம், புதிய நகரம், மஹியங்கனை. |
| 07/14/21/27 | நவம்பர் 2024 | இல. 10/2, வங்கி எதிரில், புதிய நுகரம், தெஹியத்தகண்டி. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 171, யாழ்ப்பாண வீதி, மானிப்பாய். |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | மோட்டக்கடை, உயிலங்குளம் வீதி, நானாட்டான். |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | கண்டி வீதி, பளை நகரம், பளை. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | சங்குப்பிட்டி வீதி, வாடியடிச் சந்தி, பூநகரி. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | மானிப்பாய் வீதி, கைதடி. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 35, காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 440, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 3, 5 வல்லை வீதி, சங்கானை. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 10, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 406, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 126, 128, பிரதானவீதி, பருத்தித்துறை. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 69, பிரதானவீதி, அச்சுவேலி |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 55, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 136, கண்டி வீதி, சாவகச்சேரி. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 6, பருத்தித்துறை வீதி, கோப்பாய். |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 266, தெல்லிப்பளை வீதி, வட்டு தென் மேற்கு, வட்டுக்கோட்டை. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | கண்டி வீதி, கொடிகாமம். |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 575, கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பளை தெற்கு, தெல்லிப்பளை. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 76, தெல்லிப்பளை வீதி, பண்டத்தரிப்பு. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 95, பலாலி வீதி, திருநெல்வேலி. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 111, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 187, பிரதான வீதி, மன்னார். |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 497, கண்டி வீதி, கிளிநொச்சி. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | வட்டார இல. 01, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | பிரதான வீதி, மல்லாவி. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | PW வீதி, முல்லைத்தீவு. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 32B, 2ம் குறுக்கு வீதி, வவுனியா. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 12, வட்டாரஇல. 06, பிரதானவீதி, பேசாலை, மன்னார். |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | பிரதான வீதி, மருதங்கேணி. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல 32, பலாலி வீதி, உரும்பிராய் சந்தி, உரும்பிராய. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | MPCS கட்டிடம், பிரதான வீதி, சாய்ந்தமருது - 09. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 02, பிரதான வீதி, பிரிவு 11, அட்டாளைச்சேனை. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. CC/44, பிரதான வீதி, மத்திய முகாம் 03, அம்பாறை. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 25, ஹிரிஜா சந்திப்பு, கல்முனைவீதி, சம்மாந்துறை. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | பிரதான வீதி, திருக்கோவில் 01. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 04, கடிகார கோபுரம் எதிரே, அம்பாறை. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 28, சாகம வீதி, அக்கரைப்பற்று - 08. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | பிரதான வீதி, பொத்துவில். |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | பிரதான வீதி, வவுனதீவு. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | பாடசாலைஎதிரே, வைத்தியசாலைவீதி, களுவாஞ்சிக்குடி. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல.71 A, பிரதான வீதி, ஆரயம்பதி. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | பிரதான வீதி, பிரிவு 10, கொக்கட்டிச்சோலை. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | பிரதான வீதி, மட்டக்களப்பு வீதி, கல்முனை. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 275, மத்திய வீதி, திருகோணமலை. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | "சந்தை எதிர் வளாகம்", பிரதான வீதி, செங்கலடி. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | சந்தை எதிரே, பிரதான வீதி, வாழைச்சேனை. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 175, திருகோணமலை வீதி, மட்டகளப்பு |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 50/2, பிரதான வீதி, கிண்ணியா. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | திருகோணமலை வீதி, கண்டலடி, வாகரை. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | பிரதான வீதி, கிரன். |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. E 20/3/3, திருகோணமலை வீதி, சேருநுவர. |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 151, 153, புன்னக்குடா வீதி, ஏறாவூர் 03, ஏறாவூர். |
| 08/16/22/28 | நவம்பர் 2024 | இல. 252B, 252/1, கண்டி வீதி, திருகோணமலை. |

எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளிப்போடவோ எல்.பி.பினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்திற்கு உரிமம் உள்ளது

LB FINANCE
உதவி பொது முகாமையாளர் - தங்க கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

# பெறுகை அறிவித்தல்

## சுகாதார அமைச்சு
## பொது வைத்தியசாலை (போதனா) கேகாலை

### மருந்து உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

01. கேகாலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளரால் கீழ்க்காணும் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக, அதற்காக தகைமையுடைய இலங்கையின் மருத்துவ உபகரணங்களை விற்பனை செய்வதற்கு வியாபார பதிவுடன் கம்பனிகளில் இருந்து 2024.10.22 பி.ப. 2.00 வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

| தொடர் இல. | உருப்படி | தேவைப்படும் அளவு | கேள்விப் பிணையின் பெறுமதி (ரு) | Contract No. |
|---|---|---|---|---|
| 01 | Anesthetic Machine | 02 | 300,000.00 | FG2/ME/06/2024-02 |
| 02 | Digital ECG Machine | 04 | 32,000.00 | FG2/ME/07/2024 |
| 03 | Holter Monitor Recorders | 03 | 84,000.00 | FG2/ME/08/2024 |
| 04 | Motorable Ophthalmic Theatre Bed | 01 | 24,000.00 | FG2/ME/09/2024 |
| 05 | Ambulator BP Apparatus | 01 | 40,000.00 | FG2/ME/10/2024 |
| 06 | Dental X Ray System | 01 | 70,000.00 | FG2/ME/11/2024 |
| 07 | Infant Warmers | 01 | 30,000.00 | FG2/ME/12/2024 |
| 08 | Phototherapy Machine | 02 | 32,000.00 | FG2/ME/13/2024 |
| 09 | Video Bronchoscopy | 01 | 40,000.00 | FG2/ME/14/2024 |
| 10 | Ultrasound Therapy Machine | 01 | 105,000.00 | FG2/ME/15/2024 |
| 11 | Digital Lensometer | 01 | 13,000.00 | FG2/ME/16/2024 |

02. கேள்வி ஆவணங்களை 2024.10.01 முதல் 2024.10.21 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 3.00 வரையான காலத்தில் பெற்றுக் கொள்ள முடிவதுடன் அதற்காக கீழ்க்காணுமாறு தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   (அ) கேகாலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு எழுத்துமூல வேண்டுதலை சமர்ப்பித்தல்
   (ஆ) இவ் வைத்தியசாலையின் காசாளரிடம் ஒரு கேள்வி ஆவணத்திற்காக ரூ. 3000.00 மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகச் செலுத்திய பற்றுச்சீட்டு
   (இ) வியாபார பதிவுச் சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட போட்டோப் பிரதியை சமர்ப்பித்தல்
03. கேள்வி ஆவணங்களை மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென இரு பிரதிகளுடன் தயாரித்து வேறுவேறாக இரு உறைகளில் இட்டு பொறியிட்ட பின்னர் மீண்டும் அவ் இரு உறைகளையும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் உபகரணத்தின் பெயரை கட்டாயமாகக் குறிப்பிட்டு 2024.10.22 பி.ப. 2.00 இற்கு முன்பு கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இந் நிறுவனத்தின் கணக்காளர் அறையில் வைக்கப்பட்டுள்ள பெறுகை உள்ளிடும் பெட்டியில் கையோடு கொண்டுவந்து உள்ளிடலாம்.
04. கேள்வி ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் அதாவது, 2024.10.22 பி.ப. 2.00 இற்கு கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.
05. கேள்வி ஆவணங்களை இவ் அலுவலகத்தில் கட்டணம் இன்றியே பரீட்சித்துப் பார்க்கலாம்.
06. இது பற்றிய பெறுகைக்கு முன்னரான கமிட்டிக் கூட்டம் 2024.10.10 மு.ப. 11.00 இற்கு பணிப்பாளர் பணிமனையில் நடைபெறும்.
07. இப் பெறுகை சம்பந்தமாக பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.
08. இது பற்றிய மேலதிக தகவல்களை கேகாலை பொது வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம். தொ.பே. 035 - 2223463

**பணிப்பாளர்,**
**பொது வைத்தியசாலை, கேகாலை**

---

## கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு
## இலங்கை கட்டளைகள் நிறுவனம்

SRI LANKA STANDARDS INSTITUTION
GUARDIAN OF QUALITY

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## தேசிய போட்டி ரீதியான விலைமனு (NCB)

கீழ் விபரிக்கப்பட்ட உருப்படியின் கொள்வனவுக்காக 2024.10.30ஆம் திகதி 1400 மணி வரை எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் (SLSI) திணைக்கள பெறுகைக் குழு (பாரிய அளவான ஒப்பந்தங்கள்) தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படும்.

பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக் கேட்புப் பெட்டிக்கு இடுவதன் மூலம் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு விலைமனுதாரர்கள் கோரப்படுகின்றனர்.

2024.10.01ஆம் திகதி தொடக்கம் 2024.10.29ஆம் திகதி வரை சாதாரண வேலை நாட்களில் 0900 மணி தொடக்கம் 1500 மணி வரை SSCL மற்றும் VAT உட்பட இலங்கை ரூபா 10,000.00 மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி பணிப்பாளருக்கு (நிர்வாகம்) எடுத்து மூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் முழுமையான விலைமனு ஆவணம் ஒன்றை கொள்வனவு செய்யலாம்.

1. ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களை இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் நிர்வாகப் பிரிவில் சாதாரண அலுவலக நேரங்களில் கட்டணம் இன்றி பரீட்சிக்க முடியும்.
2. பரிந்துரைக்கப்பட்ட நேரம் மற்றும் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
3. விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற பின் அதே தினத்தில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.
4. விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்க முடியும்.

| குறிப்பு இல. | உபகரணம் | விலைமனு பிணை |
|---|---|---|
| SLSI/PRO/NCB/2024-2 | Simultaneous Dual View Inductively Coupled Plasma Optical Emission Spectrometer<br><br>(ICP-OES) இன் வழங்கல் விநியோகம், நிறுவுதல், செயற்படவைத்தல் மற்றும் தள பயிற்சி வழங்கல் | இ. ரூபா 300,000.00 |

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (பாரிய அளவான ஒப்பந்தங்கள்)**
**இலங்கை கட்டளைகள் திணைக்களம்,**
**இல. 17, விக்டோரியா பிளேஸ்,**
**எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு -08.**

---

# பெறுகை அறிவித்தல்

## 2025ஆம் வருடத்தில் ஆதனங்களை குத்தகைக்கு வழங்குதல்
## வெல்லவாய பிரதேச சபை

2024.09.18ம் திகதி நடைபெற்ற முகாமைத்துவ கமிட்டி கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் பின்வரும் 01ஆம் இலக்க அட்டவணையில் காணப்படும் வெல்லவாய பிரதேச சபைக்குரிய ஆதனங்களின் விற்பனை உரிமையை 2025 ஜனவரி 01 முதல் 2025.12.31 வரையான காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறான பெறுகைகள் என்னால் வெல்லவாய பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டுள்ளவர்களிடமிருந்து மாத்திரம் அழைக்கப்படுகின்றன.

**பெறுகை விபரம் மற்றும் நிபந்தனைகள்**

1. அலுவலகத்தினால் இலவசமாக வழங்கப்படும் விண்ணப்பப்பத்திரத்தைப் பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதன் மூலம் பெறுகைப் படிவங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.
2. அபகீர்த்தியான கேள்விதாரர்கள் பெயர்ப்பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது 2023ஆம் வருடத்தில் அல்லது அதற்கு முன்னர் ஆதனங்களைக் குத்தகைக்குப் பெற்று ஒப்பந்தத்தின் பிரகாரம் குத்தகைத் தொகையை உரிய முறையில் செலுத்தத் தவறிய குத்தகைக்காரர்களுக்கு பெறுகைப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.
3. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அந்தந்த ஆதனங்கள் தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படும் பெறுகை பிணை வைப்புத் தொகை மற்றும் மீளளிக்கப்படாத பெறுகைப் படிவக் கட்டணத்தைச் செலுத்தியதன் பின்னர் விலைமனுப் படிவங்கள் வழங்கப்படும்.
4. பெறுகைப் படிவங்களுக்காக விண்ணப்பிக்கும் போது வதிவிடத்தை உறுதிப்படுத்தும் மற்றும் ஆளடையாளத்தை உறுதி செய்வதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
   i. கிராம அலுவலரினால் வழங்கப்படும் GS வதிவிடச் சான்றிதழ்
   ii. தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் புகைப்படப் பிரதியொன்று.
5. உரிய முறையின் பிரகாரம் விண்ணப்பித்ததன் பின்னர், மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென பெயரிடப்பட்டு உங்களுக்கு வழங்கப்படும் பெறுகைப் படிவங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து ஒப்பமிடப்பட்டு உங்களுக்கு வழங்கப்படும் தபாலுறைகளில் அறிவுறுத்தல்களின் பிரகாரம் தபாலுறைகளில் உள்ளிட்டு அந்த இரு பிரதிகளையும் உங்களுக்கு வழங்கப்பட்ட பெரிய தபாலுறை ஒன்றினுள் உள்ளிட்டு நிர்ணயிக்கப்பட்ட நேரம் மற்றும் திகதிக்கு முன்னர் தலைவர், பெறுகைக் குழு, பிரதேச சபை, வெல்லவாய எனும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது இந்த சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடல் வேண்டும். தபாலில் காணாமல்போகும் அல்லது காலதாமதமாகும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் பெறுகை விண்ணப்பங்கள் தொடர்பாக பொறுப்பேற்கப்பட மாட்டாது.
6. குத்தகைக்கு பெற்றுக்கொள்ள உத்தேசிக்கும் ஆதனத்தை பிரதேச சபையின் அனுமதியுடன் விலைமனுதாரர்கள் வருகை தந்து பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. ஆகக் குறைந்த விலைக்கோரலுக்குக் குறைவாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அல்லது குறித்த நேரத்திற்கு முன்னதாக சமர்ப்பிக்கப்படாத பெறுகை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன், அவ்வாறான சந்தர்ப்பங்களில் அதற்காக வைப்புச் செய்யப்பட்ட பெறுகை பிணை வைப்புத் தொகை சபைக்குரித்தாக்கப்படும்.
8. பல சொத்துக்கள் சம்பந்தமாக பெறுகை விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளும்போது ஒவ்வொரு சொத்திற்கும் வேறு வேறாக பெறுகை விண்ணப்பங்களை வேண்டுவதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.
9. பெறுகை விலைமனுக்களைத் திறப்பதற்கு நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவின் முன்னிலையில் வெல்லவாய பிரதேச சபை அலுவலகத்தில் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரின் எழுத்து மூல அதிகாரத்தை கொண்டுள்ள பிரதிநிதியொருவர் கலந்து கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படும்.
10. பெறுகைக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுகைகள் விலைமனுதாரர்களுக்கு அது தொடர்பில் எழுத்து மூலம் அறிவிக்கப்படும் என்பதுடன் அந்தக் கடிதம் கிடைக்கப்பெற்று 14 நாட்களுக்குள் விதிக்கப்பட்டுள்ள உடன்படிக்கை பிணை வைப்பு மற்றும் அது தொடர்பான முத்திரைக் கட்டணத்தைச் செலுத்தியதன் பின்னர், உடன்படிக்கைகளில் கைச்சாத்திடத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். நிர்ணயிக்கப்பட்ட தினம் அல்லது அதற்கு முன்னர் ஒப்பந்த பிணை வைப்பு மற்றும் அது தொடர்பான முத்திரைக் கட்டணத்தை செலுத்தி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறும் பெறுகை விலைமனுதாரர்கள் நிராகரிக்கப்படுவர் என்பதுடன் அவர்களின் பெறுகை பிணை வைப்பு மீளளிக்கப்படாததுடன் குறித்த தொகையானது சபைக்குரித்தாக்கப்படும். மேலும் அவர்களின் பெயர்கள் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
11. பெறுகை விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்டு பெறுகை விலைமனுவைச் சமர்ப்பிக்காதவர்களின் பெறுகை பிணை வைப்பு மீளளிக்கப்படாததுடன், குறித்த பிணை வைப்பும் சபைக்குரித்தாக்கப்படும். மேலும், அவர்களின் பெயர்கள் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படும்.
12. அந்தந்த ஆதனங்களைக் குத்தகைக்கு வழங்குதல் தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுகை விலைமனுதாரர்கள் ஒப்பந்த பிணை வைப்பைச் செலுத்தி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதன் பின்னர், அந்தந்த பெறுகைக்கு இயைபான ஏனைய பெறுகை விலைமனுதாரர்களின் பெறுகை பிணை வைப்புத் தொகை மீளளிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதற்கு அவர்களால் இயைபுடைய பற்றுச்சீட்டு சகிதம் சபைச் செயலாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.
13. ஒரு வருடத்திற்காக குத்தகைக்கு வழங்கப்படும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்கள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுகை விலைமனுதாரரால் மூன்று மாத தவணைக்குச் சமமான கட்டணத்தை ஒரே முறையில் வைப்புச் செய்தல் வேண்டும்.
14. பெறுகை விலைமனு தொடர்பாக, இறுதித் தீர்மானமொன்றை எடுக்கும் உரிமையை பெறுகைச் சபைத் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.
   i. பெறுகை விண்ணப்பங்களை விநியோகித்தல் - 2024.10.02ஆம் திகதி முதல் 2024.10.23ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையான அலுவலக நேரங்களில் மாத்திரம் வழங்கப்படும்.
   ii. பெறுகை விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் - 2024.10.02ஆம் திகதி முதல் 2024.10.23ஆம் திகதி பி.ப. 1.00 மணி வரை மாத்திரம்.
   iii. பெறுகை விண்ணப்பங்களைத் திறத்தல் - 2024.10.23ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு வெல்லவாய பிரதேச சபை அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும்.

**அட்டவணை இலக்கம் - 01**
**2025ஆம் வருடத்தில் குத்தகைக்கு விடப்படும் ஆதனங்கள்**

| தொடர் இலக்கம் | ஆதனத்தின் விபரம் | பெறுகை பிணை வைப்புத் தொகை ரூ. சதம். | படிவக் கட்டணம் ரூ. சதம் | ஆகக் குறைந்த விலைக் கோரல் தொகை ரூ. சதம் |
|---|---|---|---|---|
| 01 | வெல்லவாய வாரச்சந்தை | 150000.00 | 1000.00 | 4400000.00 |
| 02 | அதிலிவெவ வாரச்சந்தை | 50000.00 | 1000.00 | 1150000.00 |
| 03 | ஊவா குடாஓய வாரச்சந்தை | 30000.00 | 1000.00 | 180000.00 |
| 04 | உவர்/நன்னீர் மீன் சந்தை | 40000.00 | 1000.00 | 910000.00 |
| 05 | அதிலிவெவ வாரச்சந்தை மீன் விற்பனை நிலையம் | 20000.00 | 1000.00 | 150000.00 |
| 06 | வெல்லவாய பஸ் நிலைய பொது மலசலகூடம் | 20000.00 | 1000.00 | 600000.00 |
| 07 | வெல்லவாய வாரச்சந்தை பொது மலசலகூடம் | 20000.00 | 1000.00 | 275000.00 |

**டீ. டபிள்யூ.ஏ.ஏ. குமாரசிங்க,**
**செயலாளர்,**

2024.10.02
**வெல்லவாய பிரதேச சபை அலுவலகம்,**
**தொலைபேசி இலக்கம்: 055-2274875 வெல்லவாய பிரதேச சபை.**

---

# உடதும்பர பிரதேச சபை

## 2025ம் ஆண்டிற்காகன வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2025ம் ஆண்டு சார்பாக பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குநர்களிடமிருந்து நிர்மாண சேவையை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. விண்ணப்பங்கள் 2024.12.31ம் திகதி அல்லது அதற்கு முன்பு **"செயலாளர், உடதும்பர பிரதேச சபை, உடதும்பர"** என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டியதுடன், விண்ணப்பங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப்ப பதிவு செய்தல் - 2025ம் ஆண்டு"** என்று குறிப்பிடுதல் வேண்டும். அந்தந்த வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்கு முன்னிலையில் தரப்பட்டுள்ள பதிவுக் கட்டணத்தை செலுத்தி செயலாளர், உடதும்பர பிரதேச சபை பெயரில் எழுதப்பட்ட காசோலை மூலம் அல்லது உடதும்பர பிரதேச சபையின் காசாளரிடம் காசு செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை சமர்ப்பிக்கலாம்.
03. தம்மால் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பத்துடன் சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் (சகல விபரங்களுடன்) இணைத்து அனுப்புதல் வேண்டும்.

| தொடர் இல. | வழங்கல்கள் / சேவைகள் | பதிவுக் கட்டணம் | |
|---|---|---|---|
| | | ரூபா | சதம் |
| 01 | சகல அலுவலக உபகரணங்கள் மற்றும் காகிதாதிகள் | 2000 | 00 |
| 02 | உருக்கு அலுமாரி, கதிரை, கெபினெட் உட்பட உருக்கு உற்பத்திகள் | 2000 | 00 |
| 03 | அலுவலக அச்சு விடயங்கள் | 2000 | 00 |
| 04 | ஒலிபெருக்கி இயந்திரம் மற்றும் துணைப்பாகங்கள் | 2000 | 00 |
| 05 | கணனி உட்பட சகல அலுவலக இயந்திரம் மற்றும் துணைப் பாகங்களைப் பழுதுபார்த்தல் | 2000 | 00 |
| 06 | அலுவலக உபகரணங்களை பழுதுபார்த்தல் மற்றும் துணைப்பாகங்கள் பராமரிப்பு சேவை (மேசை, கதிரை, அலுமாரி) | 2000 | 00 |
| 07 | பெயர்பலகை, அறிவித்தல் பலகை, பெனர், இறப்பர் முத்திரை, திகதி முத்திரை, பதக்கம், விருது, பெஜ், நினைவுப்படிகம் மற்றும் எழுத்து ஆவணங்களை உருவாக்கல் மற்றும் வழங்குதல் | 2000 | 00 |
| 08 | கணனி ஆலோசனை சேவை | 2000 | 00 |
| 09 | மின் உபகரணங்களை பழுதுபார்த்தல் | 2000 | 00 |
| 10 | வீதி விளக்குகளுக்கு தேவையான சகல உபகரணங்கள் மற்றும் உதிரிப் பாகங்களை வழங்குதல் | 2000 | 00 |
| 11 | தும்புத்தடி, விளக்குமாறு, பிரஷ், மொப் துடைப்பம், பிரம்பு கூடை, குப்பை வண்டி வீல்பெரோ, மலசலகூட பிரஷ், கிருமிநாசினி, வாளி போன்ற சுகாதார உபகரணங்கள் | 2000 | 00 |
| 12 | பி.வி.சி பைப் குழாய் மற்றும் துணைப்பாகங்கள் | 2000 | 00 |
| 13 | கல்வனைஸ் பைப், உதிரிப்பாகங்கள், இரும்பு கல்வனைஸ் சீட், கம்பி, ஏங்கல், இரும்பு மற்றும் உலோக பொருட்கள், போல்ட் அன்ட் நட், மண்வெட்டி, அலவாங்கு கத்தி, தொழிலாளர் கருவிகள் | 2000 | 00 |
| 14 | சீருடைக்கு தேவையான துணி வகைகள், பொத்தான், தோற்பட்டை அணிகள், கெப் மற்றும் மழை அங்கி, சப்பாத்து, கம்பூட்ஸ், கையுறை | 2000 | 00 |
| 15 | தீந்தை வகைகள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட உபகரணங்கள் | 2000 | 00 |
| 16 | வாகன பழுதுபார்த்தல் | 2000 | 00 |
| 17 | வாகன சேர்விஸ் செய்தல் | 2000 | 00 |
| 18 | சகல வகையான வாகன உதிரிப்பாகங்கள் | 2000 | 00 |
| 19 | டயர், டியூப் மற்றும் பெற்றரி வழங்குதல் | 2000 | 00 |
| 20 | வீதி அழுத்தி டிரக்டர் மற்றும் டிரெய்லர், பெக்கோ இயந்திரம், மண்வெட்டும் இயந்திரம், வீதிபராமரிப்பு இயந்திரம், கலிபவுசர் வாடகைக்கு வழங்குதல் | 2000 | 00 |
| 21 | கருங்கல் சிப்ஸ், ஆற்று மணல், செங்கல், சரளை, இரும்பு, சுண்ணாம்பு, விறகு, திரிக்கப்பட்ட பலகை, தார், கோலாஸ், கல், சீமெந்து உட்பட சகல வகையான கட்டிடப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள் | 2000 | 00 |
| 22 | ஹியூம் பைப், கொங்கிறீட் தூண், சீமெந்து, கல் உட்பட கொங்கிறீட் உற்பத்திகள் | 2000 | 00 |
| 23 | வெற்றுபெரல், பழைய பத்திரிகை, கழிக்கப்பட்ட பொருட்கள் கொள்வனவு செய்தல் | 2000 | 00 |
| 24 | நிலஅளவை சேவை விடயங்கள் | 2000 | 00 |
| 25 | வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்குதல் | 2000 | 00 |
| 26 | மரம் வெட்டுதல் (செயின் சோ இயந்திரம் மூலம்) | 2000 | 00 |
| 27 | சிற்றுண்டி, குளிர்பானங்கள், குடிநீர் மற்றும் கேட்டரிங் சேவை வழங்குதல் | 2000 | 00 |
| 28 | ஒப்பந்தப் பதிவு ரூ. 100,000.00 இற்கு குறைந்த | 1000 | 00 |
| 29 | ஒப்பந்தப் பதிவு ரூ. 100,000.00 - 500,000.00 வரை | 3000 | 00 |
| 30 | ஒப்பந்தப் பதிவு ரூ. 500,000.00 - 1,000,000.00 வரை | 5000 | 00 |
| 31 | ஒப்பந்தப் பதிவு ரூ. 1,000,000.00 இற்கு மேற்பட்ட | 10000 | 00 |

**பொது நிபந்தனைகள்**

01. தேவைப்படும் வேளையில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் தவிர்ந்த வேறு வழங்குநர்கள் அல்லது வழங்கல் சேவைகளை பெற்றுக்கொள்ளும் அதிகாரம் சபைக்குரியது.
02. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் விலைமனுக்களை சமர்ப்பிப்பத்தற்கு அல்லது சரியான நேரத்திற்கு ஓடர்களை வழங்குவதற்கு தவறுகின்ற விலைமனுக்கோரல் நிபந்தனைகளுக்கு அமைவாக செயற்படாத வழங்குநர்கள் வழங்கல் விடயங்களில் இருந்து அகற்றப்படும்.
03. சபைக்கு வழங்குவதற்கு முற்பணத் தொகையை கோருகின்ற வழங்குநர்களின் பெயர் பதிவு செய்யப்பட மாட்டாது.
04. குறைந்தபட்சம் 60 நாட்கள் கடன் எல்லையில் கடன் வசதிகளை வழங்குதல் வேண்டும்.
05. வெட் வரி, வருமான வரி பதிவு செய்யப்பட்டு இருப்பின் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
06. வழங்கல் விடயங்களை மேற்கொள்ளும்போது பிரதேச சபை சட்டம், நிதி நிபந்தனைகள், நிதி விதிமுறைகளின் பிரகாரமும், அரசினால் அவ்வப்போது விநியோகிக்கப்படும் சுற்றுநிருப அறிவுறுத்தல் பிரகாரம் பிரதேச சபையினால் எடுக்கப்படும் நிபந்தனைகளுக்கு இணங்குதல் வேண்டும்.

**யூ.டபிள்யூ.ஐ.யூ. கொடகும்புர,**
**செயலாளர்,**
**உடதும்பர பிரதேச சபை,**
**உடதும்பர**

# பின் இணைப்பு

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**உள்ளூர் அபிவிருத்தி ஒத்துழைப்புத் திட்டம்**

*திட்ட அடையாளம் : P 163305*

**கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு**

### இயந்திராதிகளை வழங்குதல்

மேற்படி திட்டம் சம்பந்தமாக 2024 செப்டெம்பர் 27 வெள்ளிக்கிழமை “தினமின, டெயிலி நியூஸ், தினகரன்” பத்திரிகைகளில் பிரசுரமான விலைமனுக்களுக்கான அழைப்பு அறிவித்தலுக்கு “வாகனங்களை கொள்வனவு செய்தல்” சம்பந்தமாக பின்வரும் பின் இணைப்புக்களை மேற்கொள்வதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

தகவல்களுக்கான அட்டவணையானது கீழ்க்காணுமாறு திருத்தப்படுகிறது.

| தொ. இல. | உள்ளூர் அதிகார சபையின் பெயர் | வேலையின் விபரம் மற்றும் விலைமனு இல. | ஒப்பந்த காலம் (கலெண்டர் தினங்கள்) | தேவைப்படும் விலைமனுப் பிணை | | விலைமனு செல்லுபடியாகும் காலம் வரை |
|---|---|---|---|---|---|---|
| | | | | விலைமனு பிணைத் தொகை (ரூ) | செல்லுபடியாகும் காலம் வரை | |
| 1 | ஏறாவூர் நகர சபை | ஏறாவூர் நகர சபையின் திண்மக் கழிவு முகாமைத்துவ அலகிற்கான வாகனங்களைக் கொள்வனவு செய்தல் LDSP/EP/BT/EUC/2024/PT3/01A | 30 நாட்கள் | 210,000.00 | 30.01.2025 | 02.01.2025 |

2024.09.27ம் திகதி விளம்பரப்படுத்தப்பட்ட மேற்படி “விலைமனுக்களுக்கான அழைப்பில்” பிரசுரமான ஏனைய விடயங்கள் மற்றும் தேவைப்பாடுகள் மாற்றமின்றிக் காணப்படும்.

**தலைவர்,**
**மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**உள்ளூர் அபிவிருத்தி ஒத்துழைப்பு செயற்றிட்டம் (LDSP)**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**உள்ளூராட்சி திணைக்களம்,**
**வரோதயநகர், திருகோணமலை**
**30.09.2024**

---

# ருவன்வெல்ல பிரதேச சபை

## 2025 ஜனவரி 01ஆம் திகதி தொடக்கம் 2025 டிசம்பர் 31ஆம் திகதி வரையில் இறைச்சிக் கடைகள், மீன் கடைகள், கருவாட்டுக் கடைகள், காணித் துண்டுகள், பொது மலசலகூடங்கள், வாரச்சந்தைக்காக கேள்வி கோரல்

2025 ஜனவரி 01ஆம் திகதி தொடக்கம் 2025 டிசம்பர் 31ஆம் திகதி வரையில் இறைச்சிக் கடைகள், மீன் கடைகள், கருவாட்டுக் கடைகள், காணித் துண்டுகள், பொது மலசலகூடங்கள், வாரச்சந்தை உரிமையை குத்தகைக்கு வழங்கும் பொருட்டு கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விப் படிவங்களை இயைபுடைய கேள்வி வைப்புத் தொகை மற்றும் கேள்விப் படிவக் கட்டணத்தையும் செலுத்தி 2024.11.04ஆம் திகதி வரையான கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
2. உங்களால் வழங்கப்படும் கேள்விப் படிவங்களை இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு 2024.11.05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது ‘‘தலைவர், பிரதேச சபை, ருவன்வெல்ல’’ எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். அந்தக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகைக்கு எடுக்கும் இடத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.
3. 2024.11.05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விப்படிவங்கள் திறக்கப்படும். இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
4. தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரருக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்பட்டு 07 நாட்களுக்குள் 03 மாதங்களுக்கான கேள்வி வாடகை சகிதம் இயைபுடைய முத்திரைக் கட்டணம் போன்ற சகலவற்றையும் உள்ளடக்கிய வைப்பொன்றை ஒரு தடவையில் செலுத்தி உடன்படிக்கையொன்றுக்கு வருதல் வேண்டும். 03 மாதங்களுக்கான வைப்புத் தொகையை ஒரே தடவையில் செலுத்த முடியாத கேள்விதாரர்களுக்கு கேள்வி கையளிக்கப்படமாட்டாது. மேலதிக விபரங்களை 036-2266275 அல்லது 036-2267275 எனும் தொலைபேசி இலக்கங்களில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
5. கேள்வியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை ருவன்வெல்ல பிரதேச சபையின் கேள்விக் குழு கொண்டுள்ளது.

**அட்டவணை**

| தொ. இல. | ஆதனத்தின் விபரம் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | கேள்விப் படிவக் கட்டணம் (ரூபா) | 2024ம் ஆண்டின் வருடாந்த ஆகக் குறைந்த கேள்வி (ரூபா) |
|---|---|---|---|---|
| | இறைச்சிக் கடைகள் | | | |
| 01 | ருவன்வெல்ல பொதுச் சந்தை இல. 01 மாட்டிறைச்சிக்கடை | 25,000.00 | 500.00 | 8,605,000.00 |
| 02 | ருவன்வெல்ல பொதுச் சந்தை இல. 02 ஆட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 500.00 | 218,000.00 |
| 03 | ருவன்வெல்ல பொதுச் சந்தை இல. 03 கோழியிறைச்சிக் கடை | 5,000.00 | 500.00 | 147,000.00 |
| 04 | கோணகல்தெனிய வாரச் சந்தை பன்றியிறைச்சிக் கடை | 10,000.00 | 500.00 | 187,000.00 |
| 05 | ருவன்வெல்ல பொதுச் சந்தை இல. 04 மீன் கடை | 5,000.00 | 500.00 | 124,670.00 |
| 06 | கலபிட்டமட நகர 01ம் இலக்க மீன் தட்டு | 1,500.00 | 500.00 | 65,000.00 |
| 07 | கலபிட்டமட துனுமால சந்தி மீன் தட்டு | 1,000.00 | 500.00 | 12,210.00 |
| 08 | ருவன்வெல்ல பொதுச் சந்தை இல. 06 மீன் கடை | 5,000.00 | 500.00 | 71,200.00 |
| 09 | அங்குருவெல்ல மீன் கடை | 5,000.00 | 500.00 | 466,000.00 |
| 10 | கோணகல்தெனிய மீன் தட்டு | 3,000.00 | 500.00 | 234,630.00 |
| 11 | ருவன்வெல்ல பொதுச் சந்தை இல. 05 கருவாடு வியாபாரத்திற்கான கடை | 1,500.00 | 500.00 | 38,300.00 |
| 12 | அங்குருவெல்ல சிறுவர் பூங்கா அமைந்துள்ள காணியின் மேல் பகுதியை குத்தகைக்கு விடல் | 500.00 | 500.00 | 12,500.00 |
| 13 | ருவன்வெல்ல பொது மலசலகூடத்தை குத்தகைக்கு வழங்குதல் | 5,000.00 | 500.00 | 198,100.00 |
| 14 | அங்குருவெல்ல பொது மலசலகூடம் | 5,000.00 | 500.00 | 81,000.00 |
| 15 | கோணகல்தெனிய வாரச்சந்தை | 5,000.00 | 500.00 | 485,500.00 |
| 16 | ருவன்வெல்ல வாரச்சந்தை கென்டீன் | 1,000.00 | 500.00 | 100,000.00 |

2024 செப்டெம்பர் மாதம் 26ஆம் திகதி
**ருவன்வெல்ல பிரதேச சபை அலுவலகத்தில்.**

**பீ.ஆர்.பத்திரன,**
**செயலாளர் மற்றும் அதிகாரம் செயற்பாடுகளை,**
**அமுல்படுத்தும் அதிகாரி,**
**ருவன்வெல்ல பிரதேச சபை.**

---

NICD SRI LANKA

# பெறுகை அறிவித்தல்

## தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம் பொல்கொல்ல

பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தில் மேற்படி சேவையை 2025ம் ஆண்டிற்கு நடத்திச்செல்வதற்கு தகைமையுள்ள தனிநபர்கள், நிறுவனங்களில் இருந்து தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

### சுத்திகரிப்பு சேவை

### பொது நிபந்தனைகள்

நிறுவனங்கள் / கூட்டுறவு பதிவாளரின் கீழ் அல்லது வியாபார பெயர் பதிவு செய்யும் சட்டவாக்கத்தின் கீழ் அல்லது கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்த கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டு வியாபாரங்கள் அல்லது தனிநபர் வியாபாரம் அல்லது கம்பனி ஆவதுடன் குறித்த துறையில் குறைந்தபட்சம் 05 வருடத்திற்கு குறையாத சிறந்த அனுபவப் பதிவு செய்த பின்னர் இருத்தல் வேண்டும். குறித்த வியாபார பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

### பெறுகை விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளல்

குறித்த தகைமைகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய ஆவணங்களுடன் விண்ணப்பங்களை 2024.10.01 முதல் 2024.10.22 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.30 வரை பொல்கொல்லவில் அமைந்துள்ள தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். அதற்காக (மீளளிக்கப்படாத) ரூ. 1,500.00 கேள்விப்பத்திர கட்டணத்தை செலுத்துதல் வேண்டும். குறித்த விண்ணப்ப மாதிரிகளின் மூலம் மட்டும் விண்ணப்பித்தல் வேண்டும். போட்டோப் பிரதிகள் நிராகரிக்கப்படும்.

### பெறுகை விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் மற்றும் பிணைத் தொகை

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பெறுகை விண்ணப்பங்களை மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகையுடன் சமர்ப்பித்தல் வேண்டும். மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு **‘பணிப்பாளர் நாயகம், தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின்’** பெயருக்கு மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட ரூ. 50,000.00 வங்கிப் பிணையின் மூலம் அல்லது நிறுவனத்தின் கணக்குப் பிரிவிற்கு ரூ. 25,000.00 காசு வைப்புச் செய்தல் மூலம் மேற்கொள்ளலாம். கேள்விப் பத்திரத்துடன் குறித்த வங்கிப் பிணை முறியின் மூலப்பிரதி அல்லது கணக்குப் பிரிவில் காசு வைப்புச் செய்யப்பட்ட பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை இணைத்தல் வேண்டும். பொறியிடப்பட்ட பெறுகை விண்ணப்பங்களின் இடது பக்க மேல் மூலையில் ‘**சுத்திகரிப்புச் சேவைக்காக பெறுகை விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் 2024/25**’ என்று குறிப்பிட்டு 202.410.23 பி.ப. 2.30 இற்கு முன் கிடைக்குமாறு பணிப்பாளர் நாயகம், தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம், பொல்கொல்ல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

### பெறுகை விண்ணப்பங்களைத் திறத்தல்

2024.10.23 பி.ப. 2.30 இற்கு பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தில் பெறுகை விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் அவ் வேளையில் விண்ணப்பதாரிக்கு அல்லது பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதியொருவருக்கு அதற்காக சமுகமளிக்கலாம். பெறுகை விடயங்கள் சம்பந்தமாக பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி,**
**தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம்,**
**பொல்கொல்ல.**

**தொலைபேசி: 0812 498679/2498680**

---

## வென்னப்புவ பல்நோக்கு கூட்டுறவு சங்கம் லிமிடெட்

# ஏலத்திற்கான அழைப்பு (IFB)

**சோலார் பிவி சிஸ்டங்களின் வடிவமைப்பு, வழங்கல், நிறுவுதல், சோதனை செய்தல், பொருத்துதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றுக்கான ஏலங்களுக்கான அழைப்பு**

வென்னப்புவ பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் கொள்முதல் குழுவின் தலைவர் (PC) இப்போது 29 கட்டம் கட்டப்பட்ட சோலார் PV அமைப்புகளின் வடிவமைப்பு, வழங்கல், நிறுவுதல், சோதனை செய்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்காக தகுதியான ஏலதாரர்களிடமிருந்து சீல் செய்யப்பட்ட ஏலங்களை அழைக்கிறார். அட்டவணை Aஇல் குறிப்பிடப்பட்டுள்ளபடி.

**அட்டணை : A**

| முறைமைகளின் எண்ணிக்கை | முறைமைகளின் கொள்ளளவு kW-ac | கட்ட இணைப்பு முறை |
|---|---|---|
| 3 இலக்கங்கள் | 40 | நிகர கணக்கியல் |
| 6 இலக்கங்கள் | 20 | நிகர கணக்கியல் |
| 20 இலக்கங்கள் | 5 | நிகர கணக்கியல் |

தேசிய ஏல நடைமுறை போட்டிசெயன்முறை மூலம் நடத்தப்படும்.
ஒப்பந்த விருதுக்கு தகுதி பெற, வெற்றிகரமான ஏலதாரர் இலங்கை நிலையான எரிசக்தி அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும், மேலும் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கக்கூடாது. ஒப்பந்த விருதுக்கு தகுதி பெறுவதற்கான குறைந்தபட்ச தகுதித் தேவைகள் பின்வருமாறு:

1) இலங்கையில் கட்டம்-இணைக்கப்பட்ட சோலார் PV அமைப்புகளின் வழங்கல்/நிறுவல் மற்றும் பராமரிப்பில் குறைந்தபட்சம் மூன்று (03) வருடங்கள் அனுபவம்.
2) கடந்த 3 ஆண்டுகளில் மொத்தம் 1000 kW க்கும் அதிகமான நிறுவப்பட்ட திறன் கொண்ட சோலார் PV நெட்- மீட்டர் அமைப்புகள் நிறுவிய அனுபவம்.
3) கடந்த 3 ஆண்டுகளில் குறைந்தபட்சம் மூன்று 40kW அல்லது அதற்கு மேற்பட்ட மின் இணைப்பை இணைத்த அனுபவம்
4) கடந்த மூன்று (3) ஆண்டுகளுக்குள், நடந்துகொண்டிருக்கும் அல்லது முடிக்கப்பட்ட ஒப்பந்தங்களுக்குப் பெறப்பட்ட மொத்த சான்றளிக்கப்பட்ட கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட குறைந்தபட்ச சராசரி முதல் **50 மில்லியன்.**

ஆர்வமுள்ள தகுதியுள்ள ஏலதாரர்கள் **விற்பனை மேலாளர், வென்னப்புவ பல்நோக்கு கூட்டுறவு சங்கம் லிமிடெட், (தொலைபேசி: 071-5323406)** இலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்று, ஏல ஆவணங்களை கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் எந்த வேளையிலும் 09.00 மணி முதல் 15.00 மணி வரை பார்வையிடலாம்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஏல ஆவணங்களின் ஆங்கில மொழியிலான முழுமையான தொகுப்பை கீழே உள்ள முகவரிக்கு 01.10.2024 முதல் 21.10.2024 வரை எந்த வேலை நாளிலும் 09.00 மணி முதல் 15.00 மணி வரை பணம் செலுத்தாமல் வாங்கலாம். மீளப்பெறும் கட்டணம் ரூ. 10,000.00. பணமாக செலுத்தப்பட வேண்டும்.

ஏலங்கள் கீழே உள்ள முகவரிக்கு 21.10.2024 அன்று 15.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கவேண்டும். தாமதமான ஏலங்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவடைந்த பின்னர், வென்னப்புவ பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் தெரிவு செய்யும் ஏலதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து ஏலங்களுடனும் **அறு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய்க்கான (ரூ. 650,000.00)** ஏலப் பாதுகாப்புப் பிணை இணைக்கப்டல் வேண்டும்.

**12.10.2024** அன்று காலை 10.00 க்கு வென்னப்புவ பல்நோக்கு கூட்டுறவு சங்கம் லிமிடெட் தலைமை அலுவலகத்தில் முன் ஏலக் கூட்டம் நடைபெறும்.

தலைவர்,
கொள்முதல் குழு
வென்னப்புவ பல்நோக்கு கூட்டுறவு சங்கம் லிமிடெட்.

---

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz it's what you want Auto Focus

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want

- Auto Focus
Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

அமைச்சரவையில் அங்கம் வகிக்காத அரச
பெருந்தோட்ட தொழில்முயற்சி மறுசீரமைப்பு அமைச்சு
இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

## பச்சைத் தேயிலைக் கொழுந்து / இறப்பர் பால் விற்பனை செய்தல்

### நவம்பர் / டிசம்பர் 2024

**கேள்வி இல. SLSPC/PL/Green Leaf-Latex/ T.150-160/November - December-2024**

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குரித்தான கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ள பின்வரும் தோட்டங்களில் பச்சைத் தேயிலைக் கொழுந்து மற்றும் காலி மாவட்டத்திலுள்ள வலஹந்துவ தோட்டத்தின் பச்சைத் தேயிலைக் கொழுந்து மற்றும் இறப்பர் பாலை இரண்டு மாதத்திற்கு விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பச்சைத் தேயிலைக் கொழுந்து | கேள்வி இலக்கம் | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை |
|---|---|---|
| அலகொல்ல அரச தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-150 / Nov - Dece 2024 | 100,000.00 |
| கொட்டகஹ அரச தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-151 / Nov - Dece 2024 | 100,000.00 |
| கல்பிஹில்ல அரச தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-152 / Nov - Dece 2024 | 100,000.00 |
| ஹெயார்பார்க் அரச தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-153 / Nov - Dece 2024 | 50,000.00 |
| ஹுன்னஸ்கிரிய அரச தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-154 / Nov - Dece 2024 | 100,000.00 |
| விகாரகல அரச தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-155 / Nov - Dece 2024 | 25,000.00 |
| ரங்கல அரச தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-156 / Nov - Dece 2024 | 100,000.00 |
| வைத்தலாவ அரச தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-157 / Nov - Dece 2024 | 100,000.00 |
| வுட்சைட் அரச தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-158 / Nov - Dece 2024 | 25,000.00 |
| வலஹந்துவ அரச தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-159 / Nov - Dece 2024 | 25,000.00 |
| இறப்பர் பால் (Latex) | | |
| வலஹந்துவ | SLSPC/PL/Latex/ T-160 / Nov - Dece 2024 | 50,000.00 |

மேற்படி விலைக்கோரலுக்கான நிபந்தனைகள் மற்றும் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான படிவங்களை உள்ளடக்கிய கேள்வி ஆவணங்களை 5000.00 ரூபாவைச் செலுத்தி 2024-10-01ஆம் திகதி முதல் 2024-10-16ஆம் திகதி வரையில் பி.ப. 4.00 மணி வரையான வேலை நாட்களில் பன்விலயில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பிரதேச அலுவலகத்திலிருந்து அல்லது 2024-10-01ஆம் திகதி முதல் 2024-10-18ஆம் திகதி வரையில் பி.ப. 1.00 மணி வரையில் இல. 257, ஸ்ரீ தம்ம மாவத்தை, கொழும்பு - 10 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் கொள்வனவு செய்யலாம்.

மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை ஒவ்வொரு தோட்டத்திற்காகவும் வெவ்வேறாகச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கி முதலாம் நகரக் கிளையில் பேணப்படும் 046-1-002-4-0000933 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து அல்லது ரொக்கப் பணமாக காசாளருக்குச் செலுத்தி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் பற்றுச்சீட்டின் பிரதியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை வைப்புப் பற்றுச்சீட்டு சகிதம் கொழும்பு-10, இல. 257, ஸ்ரீ தம்ம மாவத்தையில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2024-10-18ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு முன் உள்ளிடுதல் வேண்டும். கேள்விதாரரினால் உடன்படிக்கை கைச்சாத்திடும் தினத்திற்கு முன் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட குறித்த தோட்டத்தின் பச்சைத் தேயிலைக் கொழுந்து அளவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட விலையின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்படும் பெறுமதிக்கு மூன்று மாதங்கள் வரையில் செல்லுபடியாகும் வங்கிப் பிணை முறியொன்றை வழங்குதல் கட்டாயமாகும்.

2024-10-18ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் காலம் நிறைவடைந்தவுடன் கேள்விகளைத் திறக்கும் குழுவின் முன்னிலையில் இந்தக் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கொள்வனவாளர் அல்லது அவர்களின் பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம். நிர்ணயிக்கப்பட்ட தினம் மற்றும் நேரத்திற்குக் கிடைக்கப்பெறாத கேள்விப் படிவங்கள் தொடர்பில் கூட்டுத்தாபனம் பொறுப்புக்கூற மாட்டாது என்பதுடன் பெறுகைக் குழுத் தலைவரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 257, ஸ்ரீ தம்ம மாவத்தை,**
**கொழும்பு-10.**
**0114-194879.** 2024-09-30.

## வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்
## 2025ஆம் வருடம்

## நகர அபிவிருத்தி அதிகாரசபை (UDA)

***கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு***

1. நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு 2025ஆம் வருடத்தில் பொருட்கள், வேலை மற்றும் சேவை வழங்கலுக்காக, பிரதேச ரீதியாக வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்துகொள்வதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரினால் உள்நாட்டு உற்பத்தியாளர்கள், உள்நாட்டு வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள், சமூக அடிப்படையிலான அமைப்புகள், ஆலோசனை நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு வழங்குநர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சந்தை விலை ஒப்பீட்டின் (Shopping Bidding Method) கீழ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
2. விண்ணப்பப் படிவம் / அறிவுறுத்தல் மற்றும் நிபந்தனைகள்
   அ. விண்ணப்பதாரர்கள் 2024-10-01ஆம் திகதி முதல் 2024-10-31ஆம் திகதி வரையான காலத்தினுள் பின்வரும் இணையதளத்திற்குப் பிரவேசித்து அங்குள்ள "Procurement Notices" ஊடாக பதிவு செய்வதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் அதற்குரிய ஆவணங்களை இலவசமாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.
   நகர அபிவிருத்தி அதிகாரசபை - www.uda.gov.lk
   ஆ. பதிவு செய்துகொள்வதற்கான விண்ணப்பப் படிவம் மற்றும் ஆவணத் தொகுதி பின்வரும் பகுதிகளைக் கொண்டுள்ளது.
      i. பிரதான விண்ணப்பப் படிவம்
      ii. அறிவுரைகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய படிவம்
      iii. உருப்படிகளின் பட்டியல்
   மேற்கூறிய ஆவணங்களை இணையதளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்துகொள்வது தொடர்பில் விண்ணப்பதாரருக்கு ஏதாவது சிக்கல் தன்மை ஏற்பட்டால் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதான அலுவலகத்தின் கீழ்க் குறிப்பிட்டுள்ள அலுவலர்களைத் தொடர்புகொள்ளவும். (அலுவலக நேரங்களில் மட்டும்)
   - பிரதிப் பணிப்பாளர் (பெறுகை) - நகர அபிவிருத்தி அதிகாரசபை
     நேரடி தொலைபேசி இலக்கம் - 011 3049008
     **011 2875916-20 011 2873651-2 011 2873644 நீடிப்பு - 2681**
     **011 2873649 011 2875333 011 2797200**
   - உதவிப் பணிப்பாளர் (நிதி) - நகர அபிவிருத்தி அதிகாரசபை - நீடிப்பு - 2683
3. பதிவுசெய்வதற்கான பதிவுக்கட்டணம் செலுத்துதல்
   அ. ஒரு உருப்படிக்கான பதிவுக்கட்டணமாக 1,200.00 ரூபா அறவிடப்படும். (2.5% (சமூக பாதுகாப்பு வரி) மற்றும் 18% (பெறுமதி சேர் வரி) உட்பட)
   ஆ. 2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்துகொள்வதற்கான உருப்படிக் கட்டணத்தை இலங்கை வங்கி, நிறுவனக் கிளையில் பேணப்படும் 1534 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவாகும் வகையில் இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் அல்லது நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமை அலுவலகம், மாகாண / மாவட்ட அலுவலகங்களிலும் செலுத்தலாம்.
   இ. உருப்படிக் கட்டணத்தைச் செலுத்தும்போது முன்வைக்கும் பண வைப்பு படிவம் / பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். (உருப்படிக்கான கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு)
   ஈ. விண்ணப்பதாரர்கள் 2024-11-30ஆம் திகதி அல்லது அதற்கு முன் உருப்படிக் கட்டணத்தைச் செலுத்தி முடித்தல் வேண்டும். 2024-11-30ஆம் திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் உருப்படிக் கட்டணம் தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபை பொறுப்புகூற மாட்டாது.
4. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை உரிய ஆவணங்கள் சகிதம் 2024-11-30ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவுசெய்தல் - 2025'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

   **தலைவர்,**
   **நகர அபிவிருத்தி அதிகாரசபை,**
   **பெறுகைப் பிரிவு,**
   **7ஆம் மாடி,**
   **''செத்சிறிபாய'',**
   **பத்தரமுல்ல.**
5. 2025ஆம் வருடத்தில், நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு பொருட்கள், வேலை மற்றும் வழங்கல்களுக்காக வழங்குநர்களைப் பதிவுசெய்தல் தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளும் உரிமையை நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.
6. குறைந்தபட்சம் 30 நாட்களுக்கான கடன் வசதியை வழங்கும் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

   **தலைவர்,**
   **நகர அபிவிருத்தி அதிகாரசபை,**
   **கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி,**
   **வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு**

**பெறுகைப் பிரிவு,**
**7ஆம் மாடி,**
**''செத்சிறிபாய'',**
**பத்தரமுல்ல.**
**2024 ஒக்டோபர் 01**

## பெறுகை அறிவித்தல்

# மாகாண கல்வித் திணைக்களம் - சபரகமுவ மாகாணம்

### தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல்

01. பின்வரும் வேலைகளுக்காக இரத்தினபுரி, கெட்டன்கமயில் அமைந்துள்ள மாகாண கல்வி அலுவலகத்தின் மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் 2024-10-21ஆம் திகதி வரை தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து வெவ்வேறான வகையில் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ இல. | நிறைவேற்றுப் பொறியியலாளர் அதிகாரப் பிரதேசம் | வேலை விடயம் | ஒப்பந்தத்தின் மதிப்பிடப்பட்ட வேலையின் பெறுமதி (ரூபா மில்லியன்) | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | பதிவுத் தரம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | கேகாலை | கே/சென் மேரிஸ் வித்தியாலயம் நூலகம் சகிதமான தொழில்நுட்ப ஆய்வுகூடத்தை நிர்மாணித்தல் (மிகுதி வேலைகளை நிறைவு செய்தல்) | 3.74 | 2,500.00 | 38,000.00 | C8 – C7 |
| 02 | கேகாலை | கே/சென் மேரிஸ் 75x40 இரண்டு மாடி தொழில்நுட்ப ஆய்வுகூடத்தை நிர்மாணித்தல் (மிகுதி வேலைகளை நிறைவு செய்தல்) | 2.89 | 2,500.00 | 29,000.00 | C8 – C7 |
| 03 | எம்பிலிப்பிட்டிய | இர/எம்பி/கொலொன்ன தேசிய பாடசாலையில் மூன்று மாடி வகுப்பறை சகிதமான நிர்வாகக் கட்டிடத்தை நிர்மாணித்தல் (மிகுதி வேலைகளை நிறைவு செய்தல்) | 10.29 | 4,000.00 | 103,000.00 | C6 – C5 |
| 04 | பலாங்கொட | இர/மெத்தேகந்த தமிழ் வித்தியாலயத்தில் 90x25 இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் கட்டம் (II) மிகுதி வேலைகளை நிறைவு செய்தல். | 2.46 | 2,500.00 | 25,000.00 | C8 – C7 |
| 05 | பலாங்கொட | இர/சிசில்டன் தமிழ் வித்தியாலத்தில் 90x25 இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் (அலுவலகம் மற்றும் நூலகம் சகிதம் மிகுதி வேலைகளை நிறைவு செய்தல்.) | 9.52 | 3,500.00 | 96,000.00 | C7 – C6 |
| 06 | கேகாலை | தெதிகம பெரகும்பா மகா வித்தியாலயத்தில் மூன்று மாடி தொழில்நுட்ப கல்விப்பீட கட்டிடத்தை நிர்மாணித்தல் (மிகுதி வேலைகளை நிறைவு செய்தல்) | 14.54 | 5,000.00 | 146,000.00 | C6 – C5 |
| 07 | கேகாலை | கே/கலிகமுவ மகா வித்தியாலயத்தில் மூன்று மாடி தொழில்நுட்ப கல்விப்பீட கட்டிடத்தை நிர்மாணித்தல் (மிகுதி வேலைகளை நிறைவு செய்தல்) | 8.41 | 3,500.00 | 85,000.00 | C7 – C6 |
| 08 | பலாங்கொட | பலாங்கொட ஆனந்த மைத்திரி தேசிய பாடசாலை சாதாரண தர ஆய்வுகூடத்தை புனரமைத்தல் | 3.77 | 2,500.00 | 38,000.00 | C8 – C7 |
| 09 | பெல்மடுல்ல | இல/ கன்கந்த தேசிய பாடசாலை அத்தியாவசிய கட்டிட திருத்தவேலைகள் | 3.27 | 2,500.00 | 33,000.00 | C8 – C7 |
| 10 | கேகாலை | கே/ தொலங்கமுவ டட்லி சேனாநாயக்க மகா வித்தியாலயம் 120x20 கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள் | 2.54 | 2,500.00 | 26,000.00 | C8 – C7 |
| 11 | இரத்தினபுரி | இர/எஹலியகொட மத்திய மகா வித்தியாலயத்தின் தொழில்நுட்ப ஆய்வுகூடத்தின் திருத்தவேலைகள் | 1.49 | 1,000.00 | 15,000.00 | C9 – C8 |
| 12 | எம்பிலிப்பிட்டிய | இர/எக்பர்ன் தமிழ் வித்தியாலயத்தில் விளையாட்டு மைதானத்தை மேம்படுத்தல் சார்ந்த வேலைகள் (மிகுதி வேலைகள்) | 5.55 | 2,500.00 | 56,000.00 | C7 – C6 |
| 13 | எம்பிலிப்பிட்டிய | இர/எக்பர்ன் தமிழ் வித்தியாலயம் தடுப்புச் சுவர், எல்லைச் சுவர் மற்றும் செயின் லிங்க் வேலியை நிர்மாணித்தல் மற்றும் பிரதான நுழைவாயில் மற்றும் மழை நீர் வெளியேறும் முறைமையை மேம்படுத்துதல். | 5.69 | 2,500.00 | 57,000.00 | C7 – C6 |
| 14 | பெல்மடுல்ல | இர/ஸ்பிரிங்வுட் தமிழ் வித்தியாலயம், இரக்வானை 60x20 ஒற்றை மாடிக் கட்டிடத்தை விஸ்தரித்தல் மற்றும் திருத்தவேலைகளைச் செய்தல் (மிகுதி வேலைகள்), எல்லைச் சுவர், செயின் லிங்க் வேலியை எல்லைச் சுவர் சகிதம் நிர்மாணித்தல் | 8.30 | 3,500.00 | 84,000.00 | C7 – C6 |
| 15 | கேகாலை | கே/சென் ஜோசப் மகளிர் வித்தியாலய கூரை திருத்தவேலைகள் | 6.03 | 2,500.00 | 61,000.00 | C7 – C6 |

02. இந்த விலைக்கோரல் போட்டி ரீதியிலான பெறுகை செயற்பாட்டு நடைமுறையின் கீழ் செயற்படுத்தப்படும் என்பதுடன், இந்த வேலைகளின் மதிப்பீட்டுப் பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்கும் குறைவாக உள்ளமையால் 04/2016(II), 04/2016(iii) அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதேச முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை அல்லது சபரகமுவ மாகாண நிர்மாண ஒப்பந்தப் பதிவை அடிப்படையாகக் கொண்டு விலைமனுதாரர் தெரிவுகள் இடம்பெறும். சுற்றறிக்கைக்கு இயைபாக பின்னர் வழங்கப்பட்ட 01/2024 அரச நிதிச் சுற்றறிக்கை எனும் சுற்றறிக்கை பெறுகை நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாகும்.

03. வேலை விடயங்களின் பொருட்டான விலைமனுப் படிவங்களை 2024-10-01ஆம் திகதி முதல் 2024-10-20ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை மேற்குறிப்பிட்ட வகையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் இரத்தினபுரி, கெட்டன்கம, மாகாண கல்வித் திணைக்களத்தில் (கட்டிடங்கள் பிரிவு) பெற்றுக்கொள்ளலாம்.

04. இதன்பொருட்டு மேற்படி 1ஆம் அட்டவணையில் (5வது நிரலில்) குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் சபரகமுவ மாகாணக் கல்வி அலுவலகத்தின் காசாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கட்டணங்கள் ரொக்கப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

05. மேற்படி நிர்மாணங்கள் தொடர்பிலான தேவைப்படும் விபரங்களை மாகாணக் கல்வி அலுவலகத்தின் (கட்டிடங்கள்) பிரிவில் அல்லது மாகாண பொறியியல் சேவைகள் பிரதிப் பணிப்பாளர் (பாடசாலைக் கட்டிடங்கள்) பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.
    **மாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலகம் (கட்டிடங்கள் பிரிவு) - 045-2230037**
    **பிரதான பொறியியலாளர் (பாடசாலைக் கட்டிடங்கள்) - 045-2226618**

06. வெற்றிகரமான விலைமனுதாரருக்கு அவரது CIDA பதிவுப் பெறுமதிக்கு வரையறுக்கப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்படும். விலைமனுவை முழுமையாக அல்லது ஒரு பகுதியை நிராகரிக்கும் அல்லது ஏற்றுக்கொள்ளும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது. தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

07. இரு நகல்களிலான விலைமனுக்களை 2024-10-21ஆம் திகதி மு.ப. 10.30 வரை மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிட்டு அல்லது தலைவர், மாகாண கல்வித் திணைக்கள பெறுகைக் குழு, மாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலகம், கெட்டன்கம, இரத்தினபுரி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிச் சமர்ப்பிக்கலாம். விலைமனுக்களின் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக்குறி பொறித்த பின் அவற்றை வேவொரு உறையில் இட்டு முத்திரைக்குறி பொறித்து சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த வேலையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

08. சகல விலைமனுதாரர்களும் ஒவ்வொரு நிர்மாணத்தின் பொருட்டும் அந்த வேலைக்கு எதிரில் குறிப்பிடப்பட்டுள்ள விலைக்கோரல் பிணை முறி பெறுமதிக்கு இயைபான இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் 2024-10-21ஆம் திகதி முதல் 2025-02-21ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாண கல்வி அலுவலகம், கெட்டன்கம, இரத்தினபுரி எனும் பெயரில் இயைபுடைய வேலையின் பெயரில் பெற்றுக்கொண்ட பிணை முறியொன்றை அல்லது விலைக்கோரல் பாதுகாப்பு தொகையாக ''மாகாண கல்விப் பணிப்பாளர்'' பெயரில் குறித்த பணத்தை வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விலைமனுக்களுடன் விலைக்கோரல் பிணை முறியாகச் சமர்ப்பித்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியைச் சமர்ப்பிக்கும்போது பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் அல்லது விலைக்கோரல் பிணை முறியின் மூலப் பிரதியைக் கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும். சகல விலைமனுக்களும் 2025-01-21ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

09. 2024-10-21ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்த உடனடுத்து மாகாண கல்வித் திணைக்களத்தின் கட்டிடங்கள் பிரிவில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**மாகாண கல்வித் திணைக்களத்தின் பெறுகைக் குழு,**
**மாகாண கல்வித் திணைக்களம்,**
**கெட்டன்கம, இரத்தினபுரி.**
**2024-10-01ஆம் திகதி.**



### நியூசிலாந்துடனான டெஸ்ட் தொடரை வென்று

# உலக டெஸ்ட் இறுதிக்கு முன்னேற வாய்ப்பை அதிகரித்தது இலங்கை

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2–0 என முழுமையாக வென்ற இலங்கை அணி உலக டெஸ்ட் சம்பியன்சிப் புள்ளிப் பட்டியலில் முன்னேற்றம் கண்டு லோட்ஸில் அடுத்த ஆண்டு நடைபெறும் இந்தப் பருவத்தின் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பை அதிகரித்துக் கொண்டுள்ளது.

உலக டெஸ்ட் சம்பியன்சிப் புள்ளிப் பட்டியலில் இலங்கை அணி தற்போது 55.56 புள்ளி விகிதத்துடன் மூன்றாவது இடத்தில் உள்ளது. 62.5 புள்ளி விகிதத்துடன் இரண்டாவது இடத்தில் இருக்கும் அவுஸ்திரேலியாவை விடவும் நெருக்கமான தூரத்தில் உள்ளது. மறுபுறம் இலங்கையிடம் தோற்ற நியூசிலாந்து 37.5 புள்ளி விகிதத்துடன் ஏழாவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கை அணிக்கு இந்த உலக டெஸ்ட் சம்பியன்சிப் பருவத்தில் இன்னும் இரு தொடர்கள் எஞ்சியுள்ளன. இலங்கை எதிர்வரும் நவம்பர் மற்றும் டிசம்பரில் தென்னாபிரிக்கா சென்று இரு டெஸ்ட் போட்டிகளில் ஆடவுள்ளதோடு 2025 ஜனவரி மற்றும் பெப்ரவரியில் சொந்த மண்ணில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இரு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கவுள்ளது.

இந்நிலையில் உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டிக்கு முன்னேற இலங்கை அணி அந்தப் புள்ளிப்பட்டியலில் முதல் இரு இடங்களில் இருக்கும் இந்தியா அல்லது அவுஸ்திரேலியாவை பின்தள்ள வேண்டி உள்ளது. இதில் இந்தியாவை விடவும் குறைவான புள்ளிகளை பெற்றிருக்கும் அஸ்திரேலிய அணியை இலங்கை எதிர்கொள்ளவிருப்பதால் இலங்கை அணிக்கு அந்த அணியை பின்தள்ளுவது ஒப்பீட்டளவில் இலகுவானதாகும்.

எனினும் இலங்கை அணி தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2–0 என வெல்ல முடிந்தால் 69.23 புள்ளி விகிதத்துடன் லோட்ஸ் இறுதிப் போட்டிக்கு கிட்டத்தட்ட முன்னேற முடியுமாக இருக்கும். எவ்வாறாயினும் எதிர்வரும் நவம்பரில் ஆரம்பமாகும் இந்தியா மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான போடர்–கவாஸ்கர் டெஸ்ட் தொடரின் முடிவைப் பொறுத்தே இலங்கை அணியின் வாய்ப்பு தீர்மானிக்கப்படும்.

மறுபுறம் புள்ளிப் பட்டியலில் இலங்கையை பின்தள்ளக்கூடிய அணிகளில் தென்னாபிரிக்காவுக்கு அதிக வாய்ப்பு உள்ளது. எவ்வாறாயினும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இலங்கை அணியால் 1–1 என சமன் செய்தாலும் இலங்கைக்கு வாய்ப்பு அதிகமாக இருக்கும்.

பங்களாதேஷால் 59.03 புள்ளி விகிதங்களால் முன்னேற முடியும் என்பதோடு இங்கிலாந்து அணியால் 57.95 புள்ளிகளைத் தாண்ட முடியாதுள்ளது.

எவ்வாறாயினும், ஒவ்வொரு போட்டிகளுக்கு இடையில் மாத்திரமே அவதானம் செலுத்தி வருவதாகவும் தொலைதூரம் பற்றி அவதானம் செலுத்தினால் முக்கியம் வாய்ந்த உடன்வரும் போட்டிகளை இழந்து விடுவோம் என்றும் இலங்கை அணித் தலைவர் தனஞ்சய டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டி வாய்ப்புப் பற்றி தனஞ்சயவிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, 'ஒவ்வொரு போட்டிக்கும் இடையே தேவைப்பட்டவற்றை செய்தால், பின்னர் புள்ளிப் பட்டியல் தம்மைப் பார்த்துக்கொள்ளும்' என்றார்.

உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டி எதிர்வரும் 2025 ஜூன் 11 ஆம் திகதி லண்டன், லோட்சில் நடைபெறும்.

## கிழக்கின் குரல்



# இஸ்ரேலின் தாக்குதல்களில் லெபனானுக்கான ஹமாஸ் தலைவர், மேலும் மூன்று பலஸ்தீனத் தலைவர்கள் பலி

### உயிரிழப்பு 1000ஐ தாண்டியது: ஒரு மில்லியன் பேர் வெளியேற்றம்

லெபனான் தலைநகர் பெய்ரூட்டின் நகர மையப் பகுதி மீது இஸ்ரேல் முதல் முறையாக நேற்று (30) நடத்திய தாக்குதல் ஒன்றில் பலஸ்தீன போராட்டக் குழு ஒன்றின் மூன்று தலைவர்கள் கொல்லப்படிருப்பதோடு பிறிதொரு தாக்குதலில் லெபனானுக்கான ஹமாஸ் தலைவர் பலியாகியுள்ளார்.

லெபனானின் தெற்கு நகரான டைலேயில் உள்ள பலஸ்தீன அகதி முகாம் ஒன்றில் லெபனானுக்கான ஹமாஸ் தலைவர் பத்தா ஷரீப் அபூ அல் அமீனின் வீட்டின் மீது நேற்றுக் காலை நடத்தப்பட்ட வான் தாக்குதலில் அவரும் அவரது மனைவி மகன் மற்றும் மகள் ஆகியோரும் கொல்லப்பட்டதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்தது.

மறுபுறம் பெய்ரூட்டின் கோலா பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் பலஸ்தீன விடுதலைக்கான மக்கள் முன்னணியின் மூன்று தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். தொடர்மாடி குடியிருப்பு ஒன்றின் மேல் மாடி மீதே தாக்குதல் இடம்பெற்றிருப்பதாக ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அண்மைய நாட்களாக காசாவில் இருந்து லெபனான் மீது அவதானத்தைச் செலுத்தி இருக்கும் இஸ்ரேல், அங்கு தீவிர தாக்குதல்களை நடத்தி வருகிறது. கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டார். இது பிராந்தியத்தில் முழு அளவிலான போர் மூழும் அபாயத்தை உருவாக்கியுள்ளது.

லெபனானில் பக்கா பிராந்தியத்தில் ஹிஸ்புல்லாவின் இலக்குகள் மீது புதிதாக தாக்குதல்களை நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் நேற்று தெரிவித்தது. 'லெபனானில் உள்ள ஹிஸ்புல்லாவின் இராணுவத் திறன்கள் மற்றும் உட்கட்டமைப்புக்கு சேதம் ஏற்படுத்துவது மற்றும் வலுவிழக்க செய்யும் வகையில் இஸ்ரேல் தொடர்ந்தும் கடுமையாகத் தாக்குதல்களை நடத்தும்' என்று அந்த இராணுவம் டெலிகிராமில் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.

லெபனானில் கடந்த 24 மணி நேரத்தில் இடம்பெற்ற இஸ்ரேலின் தாக்குதல்களில் 105 பேர் கொல்லப்பட்டதாக லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. லெபனானில் கடந்த இரண்டு வாரங்களில் இஸ்ரேலின் தீவிர தாக்குதல்களில் 1,000க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் 6,000 பேர் வரை காயமடைந்திருப்பதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

லெபனான் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கினரான ஒரு மில்லியன் பேர் தமது வீடுகளை விட்டு வெளியேறி இருப்பதாக லெபனான் அரசு கூறியது. லெபனானில் இஸ்ரேலின் தாக்குதல்கள் விரிவுபடுத்தப்பட்டு வருவது குறித்து அங்குள்ள மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

'லெபனானை கடவுள் தான் காக்க வேண்டும் என்பதைத் தவிர கூறுவதற்கு வேறு ஒன்றும் இல்லை' என்று பெய்ரூட் குடியிருப்பாளரான நவல் என்பவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.



இஸ்ரேலின் வான் தாக்குதல்களில் இருந்து தப்புவதற்கு குறைந்த 100,000 மக்கள் லெபனானில் இருந்து சிரியாவுக்குத் தப்பிச் சென்றிருப்பதாக அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தின் தலைவர் பிலிப்போ கிராண்டி தெரிவித்துள்ளார். வெளியேற்றங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகக் குறிப்பிட்ட அவர் நான்கு எல்லைக் கடவைகளில் ஐ.நா. அதிகாரிகள் உதவிக்கு அமர்த்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

நேற்றுக் காலை லெபனானில் இருந்து வடக்கு இஸ்ரேலை நோக்கி 35 ரொக்கெட் குண்டுகள் வந்ததாக இஸ்ரேல் இராணுவம் கூறியது. அதில் சில இடைமறிக்கப்பட்டதாகவும் மற்றவை திறந்த வெளிகளில் விழுந்ததாகவும் அது குறிப்பிட்டது.

இது தொடர்பில் ஹிஸ்புல்லா தரப்பில் இருந்து எந்த பதிலும் அளிக்கப்படாதபோதும் அது அண்மைய நாட்களில் இஸ்ரேல் மீது ரொக்கெட் தாக்குதல்களை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முழுவதும் பெய்ரூட்டை இஸ்ரேலிய ஆளில்லா விமானங்கள் சுற்றிவந்ததோடு வான் தாக்குதல்களால் லெபனான் தலைநகரில் அடிக்கடி வெடிப்புச் சத்தங்கள் கேட்டதாக அங்கிருப்போர் விபரித்துள்ளனர்.

எனினும் ஹிஸ்புல்லா அமைப்பு வலுவாக இங்கும் தெற்கு லெபனானிலேயே இஸ்ரேல் அதிக தாக்குதல்களை நடத்தி வருகிறது. அதேபோன்று பெய்ரூட்டின் தெற்கு புறநகர் பகுதிகளும் இலக்கு வைக்கப்பட்டு வருகின்றன.

எவ்வாறாயினும் பெய்ரூட் மையப்பகுதியான கோலாவில் இஸ்ரேல் நேற்று தாக்குதல் நடத்தியது கடந்த பல ஆண்டுகளில் முதல் முறையாகும்.

ஹிஸ்புல்லா ரொக்கெட் தாக்குதல்களால் வடக்கு இஸ்ரேலில் இருந்து வெளியேறி இருக்கும் குடியிருப்பாளர்கள் பாதுகாப்பாக வீடு திரும்புவதை உறுதி செய்வதற்கு தாக்குதல்களை தொடர்ந்து நடத்துவதாக அது கூறி வருகிறது.

காசாவில் போர் வெடித்தது தொடக்கம் சுமார் கடந்த ஓர் ஆண்டாக இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே பரஸ்பரம் தாக்குதல்கள் இடம்பெற்று வந்த நிலையிலேயே தற்போது தாக்குதல்கள் தீவிரம் அடைந்துள்ளன.

இஸ்ரேலின் நெருங்கிய கூட்டாளியான அமெரிக்கா, லெபனான் மோதலை நிறுத்த இராஜதந்திர தீர்வு ஒன்றுக்கு வலியுறுத்தியபோதும், பிராந்தியத்தில் மேலதிக இராணுவத்தைக் குவிப்பதற்கு உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை ஹிஸ்புல்லா பிரதித் தலைவர் நயீம் கஸ்ஸம் நேற்று வீடியோ உரை ஒன்றை வெளியிட்டிருந்தார், அதில் ஹிஸ்புல்லா அமைப்பின் புதிய தலைவர் கூடிய விரைவில் நியமிக்கப்படுவார் என்றும், இஸ்ரேல் பொதுமக்களுக்கு எதிராக தாக்குதல்களை நடத்தி குழப்பத்தை ஏற்படுத்த முயன்றபோதும் ஹிஸ்புல்லா தமது பிரதான இலக்கில் தொடர்ந்து இயங்கும் என்றும் தெரிவித்தார்.

அதேபோன்று இஸ்ரேல் தரைவழி தாக்குதல் ஒன்றை நடத்தினால் அதனை எதிர்கொள்ளவும் தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டார். லெபனான் எல்லையில் இஸ்ரேலிய டாங்கிகள் குவிக்கப்பட்டிருக்கும் நிலையில் இஸ்ரேல் தரைவழி தாக்குதல் ஒன்றுக்குத் தயாராகி வருவதாக நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இதேவேளை இஸ்ரேலின் வடக்கு எல்லையில் துருப்புகளைச் சந்தித்த இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லாண்ட், 'நஸ்ரல்லாவை அகற்றியது முக்கியமான ஒரு படி என்றபோது அதனால் அனைத்தும் நிறைவடையாது' என்று குறிப்பிட்டுள்ளார்.

'எம்மிடன் இருக்கும் அனைத்துத் திறன்களையும் நாம் பயன்படுத்த வேண்டும். மற்றப் பக்கத்தில் இருப்பவர்களுக்கு அந்தத் திறன் என்னவென்று புரியாவிட்டால், அது அனைத்துத் திறன்கள் என்பதோடு நீங்களும் இந்த முயற்சியின் ஓர் அங்கமாக உள்ளீர்கள்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதில் அவர் துருப்புகளை சந்திக்கும் சிறிய வீடியோ ஒன்று வெளியாகி இருப்பதோடு அதில் அவர், 'செய்ய வேண்டிய அனைத்தையும் செய்தல் வேண்டும் என்பதோடு நாம் வான், கடல் மற்றும் தரைமார்க்கமாக அனைத்துப் படைகளையும் பயன்படுத்துவோம்' என்று குறிப்பிட்டுள்ளார். இதன்மூலம் அவர் லெபனானில் தரைவழி தாக்குதல் ஒன்று தொடர்பில் சூசகமாகக் குறிப்பிட்டிருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## காசாவில் 41,615 பேர் பலி



காசாவில் இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் கடந்த 24 மணி நேரத்தில் அங்கு மேலும் 20 பேர் கொல்லப்பட்டு 108 பேர் காயமடைந்திருப்பதாக மருத்துவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

வடக்கு காசாவின் பெயித் லஹியா நகரில் இடம்பெயர்ந்த மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் பாடசாலை ஒன்றின் மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் நேற்று அதிகாலை நடத்திய தாக்குதல்களில் இருவர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்தது.

மறுபுறம் நேற்று முன்தினம் இரவு காசா நகரில் இடம்பெற்ற வான் தாக்குதலில் மூன்று பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். நகர சபை பூங்காவில் கூடி இருந்தவர்கள் மீதே இஸ்ரேல் இந்தத் தாக்குதலை நடத்தி இருப்பதாக மருத்துவ வட்டாரம் தெரிவித்துள்ளது.

இதன்படி ஓர் ஆண்டை நெருக்கும் இஸ்ரேலின் காசா மீதான இடைவிடாத தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 41,615 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 96,359 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.

## யெமனிலும் தாக்குதல்



யெமனின் ஹுதைதா மற்றும் ராஸ் இஸ்ஸா துறைமுகங்களில் ஹூத்தி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக இஸ்ரேல் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதல்களில் நால்வர் கொல்லப்பட்டு மேலும் 29 பேர் காயமடைந்துள்ளனர்.

யெமனின் ஹூத்திக்கள் அண்மைய நாட்களில் இஸ்ரேலுக்கு எதிராக ஏவுகணை தாக்குதல்களை நடத்தி வரும் நிலையிலேயே இஸ்ரேல் இந்தத் தாக்குதல்களை நடத்தியுள்ளது. ஹுதைதா மற்றும் ராஸ் இஸ்ஸாவில் உள்ள மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் துறைமுகங்களை இலக்கு வைத்தே தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த ஒக்டோபரில் வெடித்த காசா போரை ஒட்டி யெமன் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்துவது இது இரண்டாவது முறையாகும். முன்னதாக இஸ்ரேலின் டெல் அவிவ் நகரை யெமனிய ஆளில்லா விமானம் ஒன்று தாக்கியதை அடுத்து இஸ்ரேல் பதில் தாக்குதல் ஒன்றை நடத்தி இருந்தது.

காசாவில் பலஸ்தீனர்களுக்கு ஆதரவு அளிப்பதாகக் கூறி ஹூத்திக்கள் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஒக்டோபர் மாதம் 1ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.